இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in · murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 173 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 20 – சனிக்கிழமை 03 பிப்ரவரி 2024 – சென்னை 12 + 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 173 : Thiruvalluvar Year - 2055 - Thai 20 - Saturday 03 February 2024 - Chennai 12 + 12 Pages ₹ 5.00

# “அண்ணாவை நெஞ்சில் ஏந்தி வெற்றிக் களம் காண்போம்!”





**என் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

அயல்நாட்டில் இருந்தாலும் நினைவு முழுவதும் அன்பு உடன்பிறப்புகளாகிய நீங்களே நிறைந்திருக்கிறீர்கள். இந்த மடலை நான் எழுதும்போது, உடன்பிறப்புகளாம் உங்களுக்கு இப்போது நேரம் மதியம் 12 மணி. உங்களில் ஒருவனான எனக்கு காலை 7.30 மணி. ஆம்.. இந்தியாவிலிருந்து நாலரை மணி நேர வேறுபாடு கொண்ட ஐரோப்பாவின் ஸ்பெய்ன் நாட்டில் இருக்கிறேன், தமிழ்நாட்டிற்கான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக!

ஜனவரி 27-ஆம் நாள் சென்னையிலிருந்து ஸ்பெய்ன் நாட்டிற்குப் புறப்படும் நிலையில், ஊடகத்தினரிடம் பேசும்போது, “தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பெருக்கி, 1 டிரில்லியன் டாலர் என்கிற பொருளாதார இலக்கை அடைவதற்கு கடந்த ஆண்டு சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்றேன். இந்த ஆண்டு ஸ்பெய்ன் நாட்டிற்குச் செல்கிறேன்” என்று தெரிவித்தேன். அதுமட்டுமல்ல, சிங்கப்பூர் - ஜப்பான் - பயணத்தின் விளைவாகக் கிடைத்துள்ள முதலீடுகள், தொடங்கவுள்ள தொழில்கள், கிடைக்கக்கூடிய வேலை வாய்ப்புகள் இவற்றையும், ஜனவரி 7, 8 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டின் வெற்றியையும் சுட்டிக்காட்டினேன்.

இதோ, இங்கே ஸ்பெய்ன் நாட்டிலும் தமிழ்நாட்டிற்கான தொழில் முதலீடுகளை ஈர்க்கின்ற வகையிலான சந்திப்புகளும், அதன் தொடர்ச்சியாகப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் பயணத்தின் வெற்றிக்குக் கட்டியம் கூறுகின்றன. இருப்பது ஸ்பெய்னில் என்றாலும், நினைப்பெல்லாம் தமிழ்நாட்டில்தான்.

நம் தமிழ்நாட்டைப் போலவே மொழியையும் பண்பாட்டையும் இரு கண்களாகக் கருதி, உயிரெனப் போற்றக்கூடியவர்களாக ஸ்பெய்ன் நாட்டு மக்கள் இருக்கிறார்கள். பாரம்பரியப் பெருமை மிக்க ஸ்பெய்ன் நாட்டுக் கட்டடங்கள், தமிழ்நாட்டின் புகழ்மிக்க கலைப் படைப்புகளை நெஞ்சில் நிழலாடச் செய்கின்றன. நம்முடைய தமிழ்நாட்டின் பண்பாட்டு அடையாளமாகத் திகழும் ஏறு தழுவுதல் போல ஸ்பெய்ன் நாட்டிலும் எருது ஓடும் போட்டி உண்டு. நம் உயிருக்கு நேரான தமிழ்மொழி போல, அந்நாட்டு மக்களும் தங்களுடைய தாய்மொழியான ஸ்பானிஷ் மொழி மீது மிகுந்த பற்று கொண்டிருக்கிறார்கள். உலகில் அதிகம் பயன்படுத்தப்படும் மொழிகளில் இரண்டாவது இடத்தை ஸ்பானிஷ் பெற்றிருக்கிறது. ஸ்பெய்னில் எல்லா இடங்களிலும் ஸ்பானிஷ் மொழியே முதன்மை பெற்றுள்ளது. ஜப்பான் நாட்டிற்குச் சென்றபோதும் அங்கே அவர்களின் தாய்மொழியே முதன்மை பெற்றிருப்பதைக் கண்டேன். ஆதிக்க மொழிகளுக்கு இடம் தராமல், உலகத் தொடர்புக்கேற்ற அளவில் ஆங்கிலத்தைப் பயன்படுத்தும் நிலையை இரு நாடுகளிலும் கண்ட போது, நம் மாநிலத்திற்குத் தமிழ்நாடு எனப் பெயர் சூட்டிய தமிழ்த்தாயின் தலைமகன் - நம் உயிருக்கும் மேலான இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தை நிறுவிய பேரறிஞர் அண்ணா அவர்களின் தொலைநோக்குப் பார்வையிலான இருமொழிக் கொள்கை நினைவுக்கு வந்தது. அந்த அண்ணனுக்கு பிப்ரவரி 3 அன்று நினைவு நாள்.

வங்கக் கடலோரம் தன் கழகத் தம்பியாம் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்களுடன் நிரந்தரத் துயில் கொள்ளும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நினைவு நாளன்று அமைதிப் பேரணி நடத்தி, மலர் தூவி மரியாதை செலுத்துவது கழகத்தின் அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலான வழக்கமாக உள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்த அந்த நடைமுறை வெறும் சம்பிரதாயச் சடங்கல்ல. “எங்கள் அண்ணனே.. நீ தொடங்கிய இயக்கம் எந்த இலட்சியத்திற்காக உருவானதோ, அந்த இலக்கை அடையும் வகையில் எங்கள் வெற்றிப் பயணம் தொடர்கிறது” என்று மனதில் சூளுரை ஏற்று, அதற்கேற்ற வகையில் இயக்கத்தை வழிநடத்திடும் வலிமையைப் பெறுவதற்கான வாய்ப்பு.

நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில், இனமானப் பேராசிரியர் முன்னிலையில் அண்ணா சதுக்கம் நோக்கி எத்தனையோ அமைதிப் பேரணிகளில் நடந்து சென்றது என் நினைவுக்கு வருகிறது. இந்த முறை, கழக உடன்பிறப்புகளாம் உங்களுடன் வருவதற்கான சூழல் அமையவில்லை. எனினும், எந்த நாட்டைச் சுற்றினாலும் ‘தென்னாட்டுக் காந்தி’ என்று போற்றப்பட்ட பேரறிஞர் அண்ணா நம்மோடுதான் இருப்பார்.

உலக நாடுகளின் வரலாற்றை கழகப் பொதுக்கூட்டங்களிலும் மாநாடுகளிலும் தன் தம்பியருக்கு எடுத்துரைத்து அரசியல் தெளிவு தந்த அறிவுலக மேதை அவர். கழகத்தின் பொதுக்கூட்டங்களை மாலை நேரக் கல்லூரிகளாக்கி, உலக வரலாறுகள் பற்றிய வகுப்பெடுத்தவர்கள், நம் அண்ணாவும் அவர்தம் அன்புத் தம்பியரும்.

“அண்ணா வழியில் அயராது உழைப்போம்!” என்பதே முத்தமிழறிஞர் கலைஞர் வழங்கிய ஐம்பெரும் முழக்கங்களில் முதல் முழக்கம். அதனை முன்னெடுத்து, அயராது உழைத்து, வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் மட்டுமின்றி, இந்தியா முழுமைக்கான வெற்றி வியூகத்தை வகுக்க வேண்டிய பொறுப்பு நிறைந்த இடத்தில் இருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

பாசிச பா.ஜ.க. ஆட்சியின் சர்வாதிகார, ஜனநாயக விரோதப் போக்கிற்கு முடிவுகட்ட வேண்டிய உறுதியுடன் இருக்கிறோம். மக்கள் தாங்கள் விரும்பிய மொழியில் பேசுவதை, விரும்பிய தொழிலைச் செய்வதை, விரும்பிய உடையை உடுத்துவதை, விரும்பிய உணவை உண்பதை, விரும்பிய அரசைத் தேர்ந்தெடுப்பதை உறுதி செய்வதற்கும், இவற்றுக்கு அடிப்படையான மாநில உரிமைகளை கட்டிக்காப்பதற்கும் நாடாளுமன்றத் தேர்தலின் வெற்றி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்ந்து, தேர்தல் களப் பணிகளை முன்கூட்டியே தொடங்கி, மிகுந்த உற்சாகத்தோடு அதனை முன்னெடுத்துச் செல்கிறது கழகம்.

நாடாளுமன்றத் தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காக கடந்த 19-ஆம் தேதி, கூட்டணிக் கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான தொகுதிப் பங்கீட்டு பேச்சுவார்த்தைக் குழு, நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்கான குழு, தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு என மூன்று குழுக்கள் அறிவிக்கப்பட்டு அந்தக் குழுக்கள் தங்கள் பணிகளை உடனடியாகத் தொடங்கி விட்டன. ஜனவரி 21-ஆம் நாள் சேலத்தில் எழுச்சிமிகு, உணர்ச்சி மாநாடாக நடைபெற்ற இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடும் மாநில உரிமை மீட்பு முழக்கத்தை முன்வைத்து வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது.

## உங்களில் ஒருவன்

தோழமைக் கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கழகப் பொருளாளர் திரு.டி.ஆர். பாலு எம்.பி. அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவினர் காங்கிரஸ் பேரியக்கத்துடன் முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்து, மற்ற தோழமைக் கட்சியினருடன் ஆலோசனையில் உள்ளனர். தோழமை உணர்வை மதித்தும், நாட்டின் நிலைமையை உணர்ந்தும் பேச்சுவார்த்தைகள் சுமூகமாக நடைபெற்று வருவது குறித்த செய்திகள் எனக்கு எட்டியபடி உள்ளன.

> **“நம்மைத் திசைதிருப்ப அவதூறுகளைப் பரப்புவதில் பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும் சளைத்தவையல்ல. பொய் வழக்குகளின் பேரில் தங்களை எதிர்க்கும் ஜனநாயக சக்திகள் மீது மிரட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்வது ஒன்றே, ஒன்றிய பா.ஜ.க. அரசின் பத்தாண்டுகால சாதனையாக இருப்பதால் தி.மு.க.வை மிரட்டிப் பார்க்கும் வகையிலான ஊடகப் பரபரப்புக்கான செயல்பாடுகள் இருக்கும். எதற்கும் அஞ்சாத இயக்கம்தான் தி.மு.க.”**

“சொன்னதைச் செய்வோம் - செய்வதைச் சொல்வோம்” என்பதுதான் கழகத்தின் தேர்தல் வாக்குறுதி. ‘அக்கவுண்ட்டில் ஆளுக்கு 15 லட்சம் ரூபாய் போடுவோம்’ என்றோ, ‘ஆண்டுக்கு 2 கோடிப் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவோம்’ என்றோ, விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காக்குவோம் என்றோ வாக்குறுதி அளித்துவிட்டு, எல்லாமே ‘ஜும்லா’ என்று ஏமாற்றுகின்ற பா.ஜ.க. போலவோ, அதன் கள்ளக்கூட்டணியான அ.தி.முக. போலவோ தி.மு.க.வின் நாடாளுமனறத் தேர்தல் வாக்குறுதிகள் இருக்காது என்பதால், தங்கை கனிமொழி எம்.பி. தலைமையிலான தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் நேரில் சென்று பலதரப்பு மக்களையும் அமைப்புகளையும் சந்தித்து தேர்தல் அறிக்கையைத் தயாரிக்கும் பணியை மேற்கொண்டிருக்கிறது. ‘இந்தியா’ கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியமைக்கும்போது, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகிற பொறுப்பில் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும் என்கிற நம்பிக்கையுடன் பொதுமக்கள் தங்கள் கருத்துகளை நேரிலும், கடிதத்திலும், மின்னஞ்சலிலும், QR Code வாயிலாகவும் வழங்கி வருகிறார்கள்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான கழகப் பணிகளை ஒருங்கிணைக்கவும், மேற்பார்வையிடவும் கழகத்தின் முதன்மைச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் தலைமையிலான நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவில் இடம்பெற்றுள்ள அமைப்புச் செயலாளர் திரு.ஆர்.எஸ். பாரதி, மாண்புமிகு அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் அடங்கிய இந்தக் குழுவினர், அண்ணா அறிவாலயத்தில், நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட கழகத்தின் அனைத்து நிர்வாகிகளையும் சந்தித்துத் தேர்தல் பணிகள் குறித்து ஆலோசித்து வருகின்றனர்.

தினமும் 4 தொகுதிகள் வீதம் இதுவரை 22 நாடாளுமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த கழக நிர்வாகிகள் பங்கேற்ற கூட்டம் ஒவ்வொன்றும், நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஆலோசனைக் கூட்டமாக மட்டுமில்லாமல் கழகத்தினர் சுட்டிக்காட்டும் பிரச்சினைகளுக்கும், அவர்களின் கோரிக்கைகளுக்கும் உடனுக்குடன் தீர்வு காணும் கூட்டமாகவும் இருப்பது, கழக நிர்வாகிகளை மிகுந்த உற்சாகத்திலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது என்பதை அறிகிறேன்.

இந்தியாவின் குடியரசு நாளான ஜனவரி 26 அன்று, திருச்சியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் அன்புச் சகோதரர் தொல்.திருமாவளவன் எம்.பி. முன்னெடுத்து நடத்திய “வெல்லும் சனநாயகம்” மாநாட்டில் நான் குறிப்பிட்டதுபோல, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பா.ஜ.க. பூஜ்ஜியம்தான். அ.தி.மு.க.வை வைத்து பா.ஜ.க. எத்தகைய நாடகத்தை நடத்தினாலும் கழகக் கூட்டணியை வீழ்த்த முடியாது என்பது உறுதி. பா.ஜ.க.வுக்கு எதிரான வெற்றிக் கூட்டணி எப்படி அமையவேண்டும் என்பதை கடந்த 2019 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அமைத்த கூட்டணி வாயிலாக நிரூபித்துக் காட்டின, திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தோழமைக் கட்சிகளும். அதனைத் தொடர்ந்து சட்டமன்றத் தேர்தலிலும் அதே கூட்டணி உறுதியாகக் களம் கண்டு, வெற்றி பெற்றதன் விளைவாக திராவிட மாடல் அரசு அமைந்து, இந்தியாவுக்கே முன்னுதாரண மாக ஆட்சியை வழங்கி வருகிறது. இதுதானே அண்ணாவின் இலட்சியம்! இதுதானே தலைவர் கலைஞரின் செயல்திட்டம்!

‘மக்களிடம் செல்! என்றார் பேரறிஞர் அண்ணா. உங்களில் ஒருவனான நான் அதை வழிமொழிவதுடன், ‘மக்களிடம் செல். மக்களிடம் சொல்’ என்று ஒவ்வொரு உடன்பிறப்பையும் கேட்டுக்கொள்கிறேன். இரண்டரை ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் சொல்லுங்கள். ஒவ்வொரு குடும்பமும் கழக ஆட்சியின் சாதனைகளால் பெற்றிருக்கும் பயன்களை உணர்த்துங்கள். ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிப்பதை நினைவுபடுத்துங்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலைவிடவும் கூடுதலான உழைப்பை வழங்கி, கூடுதலான வாக்கு வித்தியாசத்தில், கடந்த முறை மிச்சம் வைத்த ஒற்றைத் தொகுதியையும் சேர்த்து ‘நாற்பதுக்கு நாற்பது’ என்ற முழு வெற்றியை உறுதி செய்யுங்கள். அந்த இலக்கை தி.மு.க. நிச்சயம் அடைந்துவிடும் என்கிற நம்பிக்கை அண்ணா அறிவாலயத்தில் கழக தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவுடனான சந்திப்பின்போது நிர்வாகிகள் காட்டும் உற்சாகத்திலேயே நன்கு புலப்படுகிறது. அந்த உற்சாகம், தேர்தல் களப்பணிகளிலும் குன்றாமல் குறையாமல் வெளிப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

நம்மைத் திசைதிருப்ப அவதூறுகளைப் பரப்புவதில் பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும் சளைத்தவையல்ல. பொய் வழக்குகளின் பேரில் தங்களை எதிர்க்கும் ஜனநாயக சக்திகள் மீது மிரட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்வது ஒன்றே, ஒன்றிய பா.ஜ.க. அரசின் பத்தாண்டுகால சாதனையாக இருப்பதால் தி.மு.க.வை மிரட்டிப் பார்க்கும் வகையிலான ஊடகப் பரபரப்புக்கான செயல்பாடுகள் இருக்கும். எதற்கும் அஞ்சாத இயக்கம்தான் தி.மு.க. என்பதைக் களத்தில் ஆற்றும் பணிகள் மூலமாக அவர்களுக்குப் புரிய வைப்போம்.

நாடாளுமன்றத்தில் இடைக்காலப் பட்ஜெட்டை பா.ஜ.க. அரசு தாக்கல் செய்திருக்கிறது. அதிலும்கூட தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளன. முழுமையான பட்ஜெட்டை அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் இந்தியா கூட்டணி அரசு தாக்கல் செய்யும். மாநிலங்களின் நலன்களும் உரிமைகளும் பாதுகாக்கப்படும். அதற்கேற்ற வகையில் வெற்றி பெறுவோம் என பேரறிஞர் பெருந்தகை அண்ணா நினைவு நாளில் சூளுரைப்போம்.

அமைதிப் பேரணியில் அன்பு உடன்பிறப்புகள் அலைஅலையாய் வங்கக்கடல் நோக்கிச் செல்கின்ற நேரத்தில், இங்கே அண்ணா படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி உங்களில் ஒருவனான நானும் சூளுரை ஏற்கிறேன்.

**அண்ணா வழியில்**
**அயராது உழைப்போம்!**
**ஆதிக்க ஒன்றிய அரசை**
**அகற்றியே தீருவோம்!**

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2055
தை 19
02.02.2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 03-02-2024

# பொய்யுரை

மாண்புமிகு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் ஆண்டின் தொடக்கத்தில் பொய்யுரை ஆற்றி, நாடாளுமன்றத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார்.

**அமிர்த காலத்தின் தொடக்கத்தில் இந்தப் புதிய கட்டடம் திறக்கப்பட்டதாகவும், இந்த புதிய நாடாளுமன்றக் கட்டத்தில் ஆக்கபூர்வமான விவாதங்கள் நடைபெறும் என்று நம்புவதாகவும் குடியரசுத் தலைவர் சொல்லியிருக்கிறார். புதிய நாடாளுமன்றக் கட்டிடத் திறப்பு விழாவுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுக்கு அழைப்பு இல்லை. அது அவர் மனதுக்குள் வந்து போயிருக்கும்!**

இந்தப் புதிய நாடாளுமன்றத்தில்தான் புகைக் குண்டு வீசப்பட்டது. அந்தப் 'பெருமை'யும் அவர் மனதுக்குள் வந்து போயிருக்கும்!

'அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவது பல நூற்றாண்டுகளின் கனவாக இருந்ததாம். அது இப்போதுதான் நிறைவேறி இருக்கிறதாம். அயோத்தி கோவில் திறப்பு விழாவுக்கும் குடியரசுத் தலைவர் அழைக்கப்படவில்லை. அதுவும் அவர் மனதுக்குள் வந்து போயிருக்கும்.

பா.ஜ.க. நாடாளுமன்றத்தில் ஆக்கபூர்வமான விவாதங்கள் எப்போது நடந்துள்ளது? பா.ஜ.க. பதில் சொல்லியாக வேண்டிய எதுபற்றியும் விவாதிப்பதே இல்லை. ரபேல் ஊழல் குறித்து விவாதிக்கவில்லை. அதானி பற்றி விவாதிக்கவில்லை. குஜராத் படுகொலை குறித்து விவாதிக்கவில்லை. மணிப்பூர் குறித்து விவாதிப்பது இல்லை. இந்தியாவில் உள்ள முக்கியப் பிரமுகர்களது செல்போனை ஒட்டுக் கேட்டது பற்றி விவாதிக்கவில்லை. எனவே எந்த அமிர்த காலத்தில் இது கட்டப்பட்டாலும் அந்திம காலத்தில் பயன்படுத்துவதைப் போலத்தான் பயன்படுத்துகிறது பா.ஜ.க.

பா.ஜ.க. அரசாங்கத்தின் சமூக, பொருளாதாரக் கொள்கைகளால் கடந்த பத்து ஆண்டுகளில் 25 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக குடியரசுத் தலைவர் சொல்லி இருக்கிறார். 'வறுமையை ஒழிப்போம் என்ற முழக்கத்தை குழந்தைப் பருவம் முதல் இந்தியா கேட்கிறது' என்றும், 'உண்மையில் தற்போதுதான் வறுமை நம் வாழ்வில் ஒழிக்கப்படுவதைக் காண்கிறோம்' என்றும் குடியரசுத் தலைவர் சொல்லி இருக்கிறார்.

**கடந்த ஒன்பது ஆண்டு கால மோடி ஆட்சியில் இந்தியாவில் பட்டினி அதிகரித்துள்ளது என்று ஒரு புள்ளிவிவரம் சொல்கிறது. உலகப் பட்டினிக் குறியீட்டில் ( Global Hunger Index) இந்தியா இதுவரை இல்லாத அளவுக்கு மிக மோசமான இடத்தை அடைந்துள்ளது. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 125 நாடுகளில் 111 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது 'மோடி'யின் இந்தியா.**

**ஜம்மு – காஷ்மீரில் பாதுகாப்பான சூழல் நிலவுவதாகவும், வடகிழக்கில் பிரிவினைவாதச் சம்பவங்கள் குறைந்துள்ளதாகவும் சொல்லி இருக்கிறார் குடியரசுத் தலைவர். அவர் இந்தியாவில்தான் இருக்கிறாரா என்பதே சந்தேகமாக உள்ளது. மணிப்பூரில் நடப்பது குடியரசுத் தலைவருக்குத் தெரியுமா?**

2023ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் தேதி அன்று தொடங்கியது மணிப்பூர் மாநிலத்தில் வன்முறை. சில மாதங்களுக்கு முன்னால் லேசாக அடங்கி இருந்தது. 2024 ஆம் ஆண்டும் தொடங்கிவிட்டது.

கடந்த டிசம்பர் 25 ஆம் தேதி காலையில் மணிப்பூர் மாநிலத்தில் குக்கி இன மக்கள் அதிகம் வாழும் காங்போக்பி மாவட்டத்தில் ஜூபி எனும் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடந்தது. இந்த துப்பாக்கிச் சூட்டில் 21 வயது இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். புத்தாண்டு தினமான ஜனவரி 1ஆம் தேதியன்றும் துப்பாக்கிச் சூடு தொடர்ந்துள்ளது. இதில் 3 பேர் கொல்லப்பட்டார்கள். ஐந்து பேர் காயம் அடைந்துள்ளனர்.

**இப்படி எட்டு மாதங்களாக எரிகிறது மணிப்பூர். எட்டு மாதங்களில் ஒரே ஒருநாள் கூட பிரதமர் நரேந்திரமோடி, மணிப்பூர் செல்லவில்லை. பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சந்தித்து ஆறுதல் சொல்லவில்லை. அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி 180 பேர் இறந்துள்ளார்கள். எவரொருவர் வீட்டுக்கும் பிரதமர் செல்லவில்லை. உள்துறை அமைச்சர் அமித்ஷா, மூன்றே மூன்று நாட்கள் வந்து போனதோடு சரி. இதுதான் பழங்குடி மக்களுக்கான பாதுகாப்பா?**

குடியரசுத் தலைவர் சொன்னதில் மாபெரும் பொய் என்பது, "மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேறியது" என்பது ஆகும். முப்பது ஆண்டுகள் காத்திருப்புக்குப் பிறகு நிறைவேறிவிட்டதாம். ஒரு பெண்ணை வைத்தே, பெண்களை ஏமாற்ற பொய் சொல்ல வைத்திருக்கிறார்கள். நடக்க இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலேயே 33 விழுக்காடு தரப்படும் என்று பா.ஜ.க. அரசு சொல்லவில்லை.

- மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பிறகு
- அதை வைத்து தொகுதி மறுவரையறைகள் முடிந்த பிறகு

– என்ற இரண்டு மாபெரும் தடுப்புச் சுவர்களை எழுப்பி இருக்கிறார். இதுதான் பெண்களுக்கு எதிரான சதிச் செயல் ஆகும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பும் – தொகுதி வரையறையும் முடிந்த பிறகு என்றால் 2029 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் 33 விழுக்காடு இடஒதுக்கீடு பெண்களுக்குக் கிடைக்கும். 2029ஆம் ஆண்டு – அதாவது இன்னும் 6 ஆண்டுகள் கழித்து நிறைவேறப்போகும் சட்டத்தை – இன்று நிறைவேற்றி விட்டதாகக் கணக்குக் காட்டி – கண்கட்டி வித்தை காட்டியது பா.ஜ.க. அதைத்தான் 'சாதனை' என்கிறார் குடியரசுத் தலைவர்.

வரி செலுத்துவோர் அதிகமாகிவிட்டார்கள் – டிஜிட்டல் பணப் பரிவர்த்தனையைப் பயன்படுத்துபவர்கள் அதிகமாகி விட்டார்கள் என்று சொல்லிக் கொள்வது மட்டும்தான் இவர்களது ஒரே சாதனை ஆகும்.

வரி செலுத்துவோர் அதிகமானதால் பலன் அடைவது ஒன்றிய அரசு மட்டும்தான். அந்தப் பணம் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குப் போய்ச் சேர்கிறது. மாநிலங்கள் கையேந்திக் கொண்டுதான் இருக்கின்றன. மாநிலங்களிடம் இருந்த நிதி உரிமையைப் பறித்ததுதான் ஜி.எஸ்.டி.யின் சாதனையாகும்.

மொத்தத்தில் பொய்யுரையை வாசித்திருக்கிறார் குடியரசுத் தலைவர்.



கழகப் பொதுச்செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் திருமண நாளை முன்னிட்டு நேற்று அவர்களுடைய இல்லம் சென்று கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அன்பையும், வாழ்த்தையும் தெரிவித்து மகிழ்ந்தார். நாடாளுமன்றத் தேர்தலுக்கான கழக ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வைக் குழுவின் பணிகள் குறித்து கேட்டறிந்து நம்மை அவர்கள் வாழ்த்தினார்கள். அமைச்சர் எ.வ.வேலு, கதிர் ஆனந்த் எம்.பி. ஆகியோர் உடனுள்ளனர்.

### சென்னை – சேப்பாக்கத்தில் பொதுப்பணித் துறைக்கான

# சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் அலுவலகக் கட்டடம்!

## அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, பிப். 3 –

சென்னை, சேப்பாக்கத்தில் புதியதாக கட்டப்பட்ட பொதுப்பணித் துறை சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் அலுவலகக் கட்டடம், மகளிருக்கான உணவுக் கூடம், மின்னணுத்திரை (LED Wall). தரமணி நுழைவாயில் மற்றும் தரக்கட்டுப்பாட்டு கோட்டங்களுக்கென ஹகொள்முதல் செய்யப்பட்ட உபகரணங்கள் ஆகியவற்றை நேற்று (2.2.2024) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

பொதுப்பணித்துறையில் முதன்மைத் தலைமைப் பொறியாளர் அலுவலகமும், சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் அலுவலகமும் ஒரே கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு போதிய இடவசதி இல்லாததால், தனியாக கட்டடம் கட்ட வேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டது. "தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை மண்டலத்திற்கான புதிய அலுவலக கட்டடம் ரூ.23.05 கோடி செலவில் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளது. இக்கட்டடம் மூன்று தளங்களுடன் 1,04,049 சதுர அடியில் கட்டப்பட்டுள்ளது.

முதல் தளத்தில் தலைமைப் பொறியாளர் அறை மற்றும் அலுவலகங்கள், கோட்டப் பொறியாளர் (மின் I&II) அலுவலகங்களும், இரண்டாம் தளத்தில் தலைமை கட்டடக் கலைஞர் அறை மற்றும் அலுவலகங்கள், நூலகம் மற்றும் கலந்தாய்வுக் கூடமும், மூன்றாம் தளத்தில் கண்காணிப்புப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அறை மற்றும் அலுவலகங்கள், கூட்ட அரங்கு மற்றும் பிற கட்டட கட்டுமான உபகோட்டம் அலுவலகங்கள் செயல்படவுள்ளது.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் நேற்று திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது.

மேலும், பொதுப்பணித்துறை வளாகத்தில் மகளிருக்கான உணவுக் கூடம். ரூ.70.00 லட்சம் செலவில் கட்டப்பட்டு அமைச்சர் அவர்களால் நேரில் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது.

இவ்வளாகத்தில் புதியதாக 10.5 அடி x 6.5 அடி அளவிலான மின்னணுத்திரை (LED Wall) அமைக்கப்பட்டுள்ளது. இந்த மின்னணுத் திரை மூலம் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்படும் அலுவலக கட்டடங்கள், அரசு மருத்துவமனைகள், அரசுப் பள்ளிகள், விளையாட்டுத்திடல்கள், நினைவகங்கள் போன்ற அரசு கட்டட பணிகள் முதலியவயற்றை இத்துறையின் மூலம் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்படும், இந்த மின்னணுத் திரையானது, அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

சென்னை, தரமணி, பொதுப்பணித்துறை வளாகத்தில் நுழைவாயில் அமைக்கும் பணிரூ.35லட்சம்செலவில் முடிவடைந்து அமைச்சர் அவர்களால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

தரக்கட்டுப்பாட்டு கோட்டங்களுக்கு 20 வகையாக ஆய்வக உபகரணங்கள், 20 வகையான கள ஆய்வு உபகரணங்கள் ஆக 40 வகையான சிவில் உபகரணங்கள் மற்றும் 8 வகையான மின் உபகரணங்கள் ரூ.6.80 கோடி செலவில்கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்த உபகரணங்கள் மூலம் கட்டுமானப் பொருட்களின் 45 வகையான பண்புகளை கண்டறிந்து தரத்தினை உறுதி செய்யமுடியும்.மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து தரக்கட்டுப்பாட்டு கோட்டங்களின் பயன்பாட்டிற்காக ஆய்வக உபகரணங்களை அமைச்சர் அவர்கள் நேற்று தரக்கட்டுபாட்டு பொறியாளர்களிடம்வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர். பி.சந்தரமோகன் பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி. சத்தியமூர்த்தி, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் கே.ஆயிரத்தரசு இராஜசேகரன் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# பிப்.5-ல் சென்னையில் இசை விழா!

## இசைக் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகிறது!

*சென்னை, பிப்.3-*

*சென்னை இசை நகரம் எனும் யுனெஸ்கோ அறிவிப்பினைக் கொண்டாடும் வகையில் சென்னையில் இசை விழா பிப்ரவரி 5 அன்று தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் நடைபெறுகிறது.*

*சர்வதேச அமைப்பான யுனெஸ்கோ சென்னையின் பாரம்பரியம் மிக்க செவ்வியல் இசையின் சிறப்புகளுக்கு பெருமை சேர்க்கும் வகையில் இசை நகரமாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இந்த அறிவிப்பினை கொண்டாடும் வகையில் கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் பிப்ரவரி 5 அன்று சென்னை தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் இசை விழா நடத்தப்படுகிறது.*

*காலை 11 மணியளவில் தவில் வலயப்பட்டி வழங்கும் நாதஸ்வர தவிலிசை நிகழ்ச்சியில் திருக்கோவிலூர்டி.பாலாஜி குழுவினர் நாதஸ்வரம். பத்மஸ்ரீ விருது பெற்ற, கலைமாமணி, சங்கீத கலாநிதி வலயப்பட்டி ஏ.ஆர்.சுப்பிரமணியம் சிறப்பு தவில் இசைக்கின்றனர். மதியம் 2.30 மணியளவில் நடைபெறும் நிகழ்ச்சியில் திரு.சசாங் சுப்பிரமணியம் குழுவினரின் புல்லாங்குழல் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாலை 6 மணியளவில் அபிஷேக் ரகுராம் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.*

*சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் மாலை 4.30 மணியளவில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விழா பேருரையாற்றி ஓவிய, சிற்பக்கலைஞர்களுக்கு கலைச் செம்மல் விருதுகளை வழங்குகிறார்கள். தமிழ்நாடு முழுவதும் இளம் கலைஞர்களுக்கு குரலிசை, கருவியிசை, பரதநாட்டியம், ஓவியம் மற்றும் கிராமிய கலைகளில் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற 15 இளம் கலைஞர்களுக்கு பரிசுகளையும் வழங்குகிறார்கள்.*

*கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் சே.ரா. காந்தி வரவேற்புரையாற்றுகிறார். தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் வாகை.சந்திரசேகர், டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் எஸ்.சௌம்யா, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், தமிழ்நாடு அரசு இசைப்பள்ளிகளின் கலையியல் அறிவுரைஞர் ஜாகிர் உசேன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.*

*கலை பண்பாட்டுத்துறை இணை இயக்குநர் திருமதி க.சிவசௌந்திர வல்லி நன்றியுரை வழங்குகிறார்.*

# பேரறிஞர் அண்ணா 55வது நினைவு நாள்!

## ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி கழகத்தினருக்கு இரா.லட்சுமணன் வேண்டுகோள் !

*சென்னை பிப்:3*

*ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி கழக தோழர்களுக்கு பகுதிச் செயலாளனர் இரா. லட்சுமணன் வேண்டுகோள் வருமாறு:*

*பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளை முன்னிட்டு கழக பொதுச்செயலாளர், அமைச்சர் துரைமுருகன் தலைமையில் அமைதிப் பேரணி இன்று (3.02.2023 சனிக்கிழமை ) காலை 7.30 மணியளவில் அண்ணாசாலையில் அமைந்துள்ள அண்ணா சிலையிலிருந்து புறப்பட்டு அண்ணா நினைவிடத்தில் முடிவடைகிறது.*

*இப்பேரணிக்கு ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக தோழர்கள், கழக மூத்த முன்னோடிகள், அனைவரும் திரளாக அமைதி பேரணியில் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தோழர்கள் வீடுகளில் கழகக் கொடி ஏற்றும் விழா நடைபெற்றது இதில் பொதட்டுர் பேட்டை பேரூர் கழகத்திற்கு உட்பட்ட கழக தோழர்களின் இல்லங்களில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. கழக கொடி ஏற்றினார். உடன் பேரூர் கழகச் செயலாளர் எம்.ஜே.ஜோதிக்குமார், பொதுக்குழ உறுப்பினர் ராஜேஷ்வரி ரவீந்திரநாத், பேரூராட்சி தலைவர் மணிமேகலை குமார், கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு செயலாளர்கள், கவுன்சிலர்கள் உள்ளனர்.

# இன்று அண்ணா நினைவு நாள்!

## சென்னையில் அமைதிப் பேரணி ! பொதுச் செயலாளர் துரைமுருகன் தலைமையில் !

**சென்னை, பிப்.3-**


**பேரறிஞர் பெருந்தகை - 'திராவிட முன்னேற்றக் கழகம்' எனும் நமது மாபெரும் ஜனநாயகப் பேரியக்கத்தைத் தோற்றுவித்த பெருமகன் - அண்ணா அவர்களின் 55வது நினைவு நாள் இன்று! இந்நாளில், அவர் தோற்றுவித்த கழகத்தின் சார்பில், மாபெரும் அமைதிப் பேரணி, அறிஞர் அண்ணா நினைவிடம் நோக்கி நடைபெறுகிறது.**

**கழகப் பொதுச் செயலாளர் -அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையிலும் - பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் முன்னிலையிலும் நடைபெறும் இம்மாபெரும் அமைதிப் பேரணியில், கழக நிர்வாகிகள், முன்னணியினர், அடலேறுகள் ஆயிரக் கணக்கில் பங்கேற்கிறார்கள்.**

**இம்மாபெரும் அமைதிப் பேரணிக்கு கழகத்தினர் திரண்டு வருமாறு சென்னை மாவட்டக் கழகங்களின் செயலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.**

அதன் விவரம் வருமாறு:-

காஞ்சி தந்த காவியத் தலைவர் - உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் - தமிழ்மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் - 'கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு' எனும் மகத்தான தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் - "மெட்ராஸ் ஸ்டேட்" என்ற பெயரை "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் - சுயமரியாதைச் சுடரொளி - சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் - எழுத்து வேந்தர் - தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் - பேரறிஞர் அண்ணா அவர்களின் **55வது** நினைவு நாள் இன்று!



இந்நாளையொட்டி - கழகத்தின் சார்பில் மாபெரும் அமைதிப் பேரணி, இன்று (3.2.2024 - சனிக்கிழமை) காலை 8.00 மணி அளவில் திருவல்லிக் கேணி - வாலாஜா சாலையில் உள்ள 'அரசு விருந்தினர் மாளிகை' அருகில் தொடங்கி, அண்ணா நினைவிடம் நோக்கி நடைபெறுகிறது.

கழகத்தின் இம்மாபெரும் அமைதிப் பேரணிக்கு கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமை வகிக்கிறார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. முன்னிலை வகிக்கிறார்.

கழக இந்நாள் - முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் - முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற இந்நாள் - முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிரா விடர் நலக்குழு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மை யினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அனைத்து கழக நிர்வாகி களும், செயல் வீரர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர்!"

- என சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் செயலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

---

<u>தி.மு.க. 15ஆவது பொதுத் தேர்தல்</u>

## கடலூர் மேற்கு மாவட்டம்

### நெல்லிக்குப்பம் நகர அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் வேட்புமனு தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், கடலூர் மேற்கு மாவட்டம், நெல்லிக்குப்பம் நகர அவைத்தலைவராக உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஷேக்முகைய்தீன் (எ) சித்திக் அவர்கள் மறைவெய்திய காரணத்தால்;

கடலூர் மேற்கு மாவட்டம், நெல்லிக்குப்பம் நகர அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, பிப்ரவரி 6 (செவ்வாய் கிழமை) அன்று ரூ.1000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

**<u>தகுதி விவரம்</u>**

நகரக் கழக நிர்வாகப் பொறுப்புக்குப் போட்டியிடுவோர் அவர்கள் வேட்புமனுக்களில் முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்த நகரத்திற்குட்பட்ட வார்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு செயலாளராகவோ, பிரதிநிதியாகவோ இருத்தல் வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.25/- வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 2.2.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---



நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில், கழக நாடாளுமன்றத் தேர்தல் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆலோசனைக் கூட்டங்கள் மக்களவை தொகுதி வாரியாக நடைபெற்று வருகின்றன. கள்ளக்குறிச்சி மக்களவை தொகுதிக்கான ஆலோசனைக் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடைபெற்ற போது, தொகுதி மேம்பாட்டுப் பணிகளின் தற்போதைய நிலை தொகுதி மக்களின் தேவைகள் தேர்தல் முன்னேற்பாட்டுப் பணிகள் உள்ளிட்டவை குறித்து கழக நிர்வாகிகளிடம் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார். மாவட்ட பொறுப்பு அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஒன்றிய பகுதி நகர பேரூர் கழக நிர்வாகிகள் மாவட்டக் கவுன்சிலர்கள் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

பொதுவிநியோகத் திட்டப் பணிகள் - சம்பா பருவ நெல் கொள்முதல் பணிகளை மேற்கொள்ள

## அனைத்து உணவு - உணவுப் பொருள் வழங்கல் துறை அதிகாரிகளுக்கு அறிவுரை!

### அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்!

*சென்னை, பிப்.3-*

பொது விநியோகத் திட்டப் பணிகள் மற்றும் சம்பா பருவ நெல் கொள்முதல் பணிகளைத் திறம்பட ஆற்றிட அனைத்து உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அதிகாரிகளுக்கு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அறிவுரை வழங்கினார்.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் அலுவலர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்கள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு மேலாளர்கள், பொது விநியோகத் திட்ட துணைப் பதிவாளர்கள் மற்றும் குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை அலுவலர்களின் ஒருங்கிணைந்த ஆய்வுக் கூட்டம் 01.02.2024 சென்னை கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்றது.

**சிறுதானியக் கண்காட்சி!**

கூட்டத்தின் துவக்கத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட 6 மண்டலங்களின் பயன்பாட்டிற்காக ரூ.61.93 லட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்ட 7 ஈப்புகளை மண்டல மேலாளர்களிடம் வழங்கினார். பின்பு கூட்ட அரங்கில் அமைக்கப்பட்டிருந்த சிறுதானியக் கண்காட்சியைப் பார்வையிட்டார்.

வெள்ள நிவாரணம் வழங்கல் மற்றும் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கல் ஆகிய பணிகளைக் குறுகிய காலத்தில் சிறப்பாகச் செய்த அனைத்து அலுவலர்களுக்கும் குறிப்பாகப் பொது விநியோகத் திட்ட அங்காடிகளின் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்கும் அமைச்சர் பாராட்டினையும் நன்றியையும் தெரிவித்தார்.

நியாயவிலைக் கடைக்கு வருகை தரும் பொதுமக்களிடம் கனிவுடன் நடந்து கொள்வதோடு 'பயோமெட்ரிக்' கைரேகைப் பதிவு செய்வதில் தொழில்நுட்பக் கோளாறு இருப்பின், அரசால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களைப் பயன்படுத்தி பொதுமக்களுக்குப் பொருள்களை வழங்கிட வேண்டும் என்றும் அதற்காகப் பொதுமக்களை எவ்விதத்திலும் சிரமப்படுத்தக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டார்.

ஆண்டு தோறும் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் சிறந்த விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்குப் பரிசு தொடர்ந்து வழங்கப்படும் என்று சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க 2023 ஆம் ஆண்டுக்கான பரிசுகள் பெற வேண்டியவர்களின் பட்டியலை விரைந்து தயாரித்து வழங்கிடவும் இதை ஆண்டு தோறும் குறிப்பிட்ட நாளில் வழங்கிடவும் உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும் கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

அரிசி, சர்க்கரை, துவரம் பருப்பு, பாமாலின், கோதுமை மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை உரிய காலத்தில் நகர்வு செய்து பொதுமக்கள் எப்போது வந்து கேட்டாலும் இன்முகத்துடன் விநியோகம் செய்வதை உறுதி செய்திட வேண்டும் என்றும், மாவட்ட வழங்கல் அலுவலர்கள், பொது விநியோகத் திட்ட துணைப் பதிவாளர்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்கள் குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்களுடன் இணைந்து அரிசிக்கடத்தலை முழுமையாக நிறுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

**பகுதி நேரக் கடைகள்!**

முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் நடத்தப்படும் கூட்டங்களில் உரிய அலுவலர்கள் கலந்து கொண்டு தெரிவிக்கப்படும் குறைகளுக்கு உடனடித் தீர்வு கண்டிட வேண்டும் என்றும், தேவைப்படும் இடங்களில் பகுதிநேரக் கடைகள் திறந்திடவும் ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேலுள்ள கடைகளைப் பிரித்திடவும் தொடர்ந்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்,

வாடகைக் கட்டடங்களுக்குப் பதிலாக சொந்தக் கட்டடங்கள் அனைத்துக் கடைகளுக்கும் அமைந்திடும் வகையில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், பகுதி நேரக் கடைகள் தேவைப்படும் ஊர்களில் மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை வைக்காமலே அலுவலர்களே கண்டறிந்து உரிய முன்மொழிவுகளை அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நுகர்வோர் பாதுகாப்புப் பணிகளான விலைக் கட்டுப்பாடு, பதுக்கல் தடுப்பு, நுகர்வோர் விழிப்புப் பணிகள் போன்றவற்றிலும் குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினர் கவனம் செலுத்திச் செயல்பட வேண்டும் என்றும்,

குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறையினர் கைப்பற்றிய வாகனங்களை விரைந்து ஏலம் விட வேண்டும் என்றும், தடுப்புக் காவலில் கைது செய்வதோடு நில்லாமல் வழக்குகளை விரைந்து முடித்து தண்டனை பெற்றுத் தருமளவுக்குச் செயல்பட வேண்டும் என்றும் மாநில எல்லையோர மாவட்டங்களில் ரோந்துப் பணியை அதிகரித்து கூடுதல் கண்காணிப்புடன் செயல்பட வேண்டும் என்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்.

**நவீன நெல் சேமிப்புத் தளங்கள்!**

முதலமைச்சர் அவர்கள், ஒரு நெல்மணி கூட வீணாகக் கூடாது என்று கூறி வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு 4.03 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 253 நவீன நெல் சேமிப்புத் தளங்களை நம் துறைக்கு வழங்கி, நெல் கொள்முதலில் எவ்விதக் குறைபாடும் ஏற்படக் கூடாது என்று அறிவுறுத்தியுள்ளார் என்றும் அந்த அறிவுறுத்தலின்படி எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினார்.

விவசாயிகளின் வேண்டுகோளின் அடிப்படையில் தேவைப்படும் இடங்களில் நெல் கொள்முதல் நிலையம் திறந்து விவசாயிகளிடமிருந்து கொண்டுவரப்படும் நெல்லினை உடனுக்குடன் கொள்முதல் செய்து அரவை ஆலைகளுக்கு அனுப்பி வைத்திட வேண்டுமெனவும் கொள்முதலுக்குத் தேவையான சாக்குகள் உள்ளிட்ட பொருள்களுடன் மழையில் நனையாமல் பாதுகாக்கத் தேவையான தார்பாலின் ஆகியவற்றைப் பற்றாக்குறையின்றி வைத்துக்கொள்ளவும் அறிவுரை வழங்கினார். நெல் கொள்முதலில் முறைகேடு நடைபெற்றால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதற்கு அந்த மண்டல முதுநிலை மேலாளர்களும் மண்டல மேலாளர்களுமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

கூடுதல் தலைமைச் செயலாளர் அனைத்து அலுவலர்களும் சிறப்பாகச் செயல்பட்டு முதலமைச்சர் அவர்களும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களும் அறிவித்துள்ள திட்டங்களை உரிய காலத்தில் நிறைவேற்றி பொதுமக்கள் ஏதும் கோரிக்கை வைப்பதற்கு முன்பே அவர்களின் தேவையை அறிந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். கே.கோபால், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் ஹர் சஹாய் மீனா, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சு. பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை, குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப்புலனாய்வுத்துறை காவல்துறை தலைவர் ஜோஷி நிர்மல்குமார் மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை துணை ஆணையாளர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்கள், கூட்டுறவுத் துறை பொது விநியோகத் திட்ட துணைப்பதிவாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், கிளாம்பாக்கம் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் மனித நேய வார மாநில அளவிலான நிறைவு நாள் விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ். பாலாஜி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் உதயா கருணாகரன், ஒன்றிய குழு துணைத் தலைவர் வி.எஸ்.ஆராமுதன், மறைமலைநகர் நகர்மன்ற தலைவர் ஜெ.சண்முகம், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள், மற்றும் மாணவ, மாணவிகள் பலர் உள்ளனர்.



2024 நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு கழக நாடாளுமன்றத் தேர்தல் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. விழுப்புரம் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நேற்று சந்தித்து கலந்துரையாடல் நடைபெற்றது. இதில். ”திராவிட மாடல் அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வது தொகுதியில் நிலவும் சூழல் – பாக முகவர்களின் பணிகள் உள்ளிட்டவை குறித்து மாவட்ட அமைச்சர் – மாவட்டக் கழகச் செயலாளர்கள் – சட்டமன்ற உறுப்பினர்கள் – மாவட்ட – ஒன்றிய – நகர – பேரூர் கழக நிர்வாகிகள் – உள்ளாட்சிப் பிரதிநிதிகளிடம் பல்வேறு விதமான கருத்துகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார்.

## திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அண்ணா நினைவுநாளை முன்னிட்டு

# மணவாளநகரில் அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி!

### மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவள்ளூர் பிப் 03;

பேறறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு பிப் 3 ஆம் தேதி திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் திருவுருவ சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி மாவட்ட கழக செயலாளர் தமது அறிக்கை வாயிலாக தெரிவித்துள்ளது

1967ல் அறிஞர் அண்ணா முதல்வரானதும் மெட்ராஸ் ஸ்டேட் என்று இருந்ததை தமிழ்நாடு என்று பெயரிட்டார். தந்தை பெரியாரின் கொள்கையான சுயமரியாதை திருமணங்கள் செல்லுபடியாகும் அரசாணையை கொண்டு வந்தார். தமிழக மக்களின், மாணவர்களின் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை, மனதில் கொண்டு, இந்தியத் துணைக் கண்டம் முழுதும் மும்மொழி திட்டம் அமுலில் இருந்த போது, தமிழில் இரு மொழி திட்டம் கொணர்ந்து, தமிழ், ஆங்கிலம் இரண்டு மட்டும் தான், இங்கு இந்திக்கு இடமில்லை என்று தீர்மானம் இயற்றினார். பதவி ஏற்கும் போது கடவுள் பெயரால் என்று சொல்லி பதவி ஏற்காது மனசாட்சிப்படி உளமாற எனச் சொல்லி பதவி ஏற்றார். அண்ணா அரசு அமைந்ததும் ஆகாஷ்வாணி என்பது வானொலி என அழைக்கப்பட்டது ஏழை எளியோருக்கு பயன்படும் வகையில் சென்னை, கோவை இரு நகரங்களிலும் ரூபாய்க்கு 1 படி அரிசி வழங்கியது புன்செய் நிலங்களுக்கு நிலவரி ரத்து செய்யப்பட்டது. பேருந்துகள் அரசுடைமை ஆக்கப்பட்டது. ஏழைகளுக்கு இலவசக் கல்வி அளிக்க ஏற்பாடு பி.யு.சி வரையில். பேருந்துகளில் திருக்குறள் இடம்பெற செய்தது. கலப்பு மணம் செய்துகொள்வோரை ஊக்கப்படுத்தும் விதத்தில் தங்க விருது அளிக்கப்பட்டது சென்னையில் உள்ள குடிசைவாசிகளுக்கு தீ பிடிக்காத வீடுகள் கட்டித் தந்தார் 1 கோடி ரூபாய் திரட்டி குடிசைப் பகுதிக்கு செலவிட முடிவு செய்தார்.



சீரணி எனும் ஓர் அமைப்பைத் தொடங்கி மக்களை அதில் ஈடுபடுத்தி தங்கள் பகுதிக்குத் தேவைப்படுகிற சிறிய, சிறிய வசதிகளை தாங்களே எந்தப் பலனும் எதிர்பாராமல் செய்துகொள்வது என்கிற திட்டம் கொண்டுவந்ததார் 1968ல் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையிலே நடத்தினைர் கடற்கரைச் சாலையில் திருவள்ளுவர், இளங்கோ அடிகள், கம்பர், ஜி.யு.போப், பாரதியார், பாரதிதாசன், ஔவையார், கண்ணகி, கால்டுவேல், உ.வே.ச.) என தமிழ்ச் சான்றோர்களுக்குச் சிலை நிறுவினார். பள்ளிகளில் என்.சி.சி. அணியில் இந்தி சொற்களை நீக்க ஆணை பிறப்பித்தார்.அரசு அலுவலகங்களில் உள்ள கடவுளார் படங்களை நீக்க ஆணை பிறப்பித்தார்.

முதல்வரானதும், அரசு அதிகாரிகள் அமைச்சர்கள் செல்லும் விழாக்களுக்கெல்லாம் அவர்களை பின் தொடராமல் தங்கள் பணியைச் செய்யலாம் என சுற்றறிக்கை அனுப்பினார் சென்னை செகரட்டேரியட் என்பதனை தலைமைச் செயலகம் என மாற்றியமைத்தார். விதவைத் திருமணம் செய்து கொள்வோருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கிய காஞ்சி தலைவர் பேறறிஞர் அண்ணா அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு இன்று பிப்ரவரி 3 ம் தேதி சனிக்கிழமை காலை 9 மணி அளவில் மணவாளநகரில் அமைந்துள்ள பேறறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெறும். மேற்கண்ட நிகழ்வில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாநில / மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய/நகர/பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், அணிகளின் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிக்கையில் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

## அசன் மௌலானா எம்.எல்.ஏ. தொகுதி மேம்பாட்டு நிதியில் – வேளச்சேரி

# 173வது வார்டில் - கலைஞர் நூற்றாண்டு பல்நோக்கு கட்டிடம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்! தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, பிப். 3-

வேளச்சேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எம்.எச்.அசன் மௌலானா எம்.எல்.ஏ. தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ. 35 லட்சம் மதிப்பில் வார்டு 173ல் சி.எஸ். காலனி, ஐஸ்வர்யா காலனியில் கட்டப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பன்னோக்குக் கட்டிடத்தின் திறப்பு விழா இன்று (3.2.2024 - சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் அடையாறில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு - கலைஞர் நூற்றாண்டு பன்னோக்குக் கட்டிடத்தைத் திறந்து வைக்கிறார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், பகுதிச் செயலாளர்கள் இரா.துரைராஜ் எம்.சி., துரை கபிலன், பொதுக் குழு உறுப்பினர் ஆர்.பாலசுந்தரம், வேளச்சேரி கிழக்குப் பகுதி துணைச் செயலாளர் வழக்கறிஞர் எஸ்.சந்தானம், வட்டச் செயலாளர்கள் ம.தமிழரசு, மு.தனசேகர், எம்.விநாயகமூர்த்தி, சுபாஷினி துரை எம்.சி. உள்பட பலரும் கலந்து கொள்கின்றனர்.

## ஓவியம் மற்றும் சிற்பக்கலையில் சாதனைப் படைத்த

# 18 கலைஞர்களுக்கு தமிழ்நாடு அரசின் கலைச்செம்மல் விருதுகள்!

சென்னை.பிப்.3-

தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறையின் ஓவிய நுண்கலைக் குழு வாயிலாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த மரபுவழி கலை வல்லுநர்களுக்கும், நவீன பாணி கலை வல்லுநர்களுக்கும் நுண்கலைத் துறையில் செய்துள்ள அரும்பெரும் சாதனைகளையும், சேவைகளையும் பாராட்டும் வகையில் ஆண்டுக்கு 6 கலைஞர்களுக்கு கலைச்செம்மல் என்னும் விருதும், தலா ரூ.1,00,000/ வீதம் பரிசுத் தொகையும் வழங்கி வருகிறது.

இவ்விருதுக்கான கலைஞர்களை தேர்வு செய்யும் வகையில் தேர்வாளர் கூட்டம் கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் திரு.சே.ரா.காந்தி இ.ர.பா.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஓவியர்கள் கோபிநாத், ஜெயக்குமார், சண்முகபிரியா, சிற்பிகள் தே.ராதாகிருஷ்ணன் ஸ்தபதி, கோவிந்தராஜன், நவீன சிற்பக்கலை ஞர் ராகவன் நாகராஜன் ஆகியோர் கலந்துக் கொண்டு 2021-2022 முதல் 2023-2024 வரையிலான மூன்று வருடங்களுக்கு 18 கலைஞர்களை தேர்வு செய்தனர்.

மரபுவழி ஓவியம் பிரிவில் ஓவியர் ராமு (எ) எஸ்.எஸ்.ராமதாஸ், மணியம் செல்வன், ஏ.ராஜமோகன், வாசுகி லஷ்மி நாராயணன், சோ.வேல்முருகன் (கோவில் பட்டி, தூத்துக்குடி) மரபுவழி சிற்பம் பிரிவில் இரா.செல்வநாதன் ஸ்தபதி, முனைவர் கி.ராஜேந்திரன், உலோக சிற்பக்கலைஞர் இரா.ரவீந்திரன், மர சிற்பக்கலைஞர் க.பால்ராஜ் (சிவகங்கை) நவீன ஓவியம் பிரிவில் அ.விஸ்வம், கோ.சுப்பிரமணியம், எஸ்.வி.பிரபுராம், எஸ்.அருணகிரி, கே.புகழேந்தி, அதிவீரராம பாண்டியன், நவீன சிற்பம் பிரிவில் ந.கருணாமூர்த்தி , டி.விஜயவேலு, ஹேமலதா ஆகிய கலைஞர்கள் தேர்வு செய்யப்பட்டனர். சென்னை அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் 05.02.2024 திங்கட்கிழமை அன்று மாலை 4.30 மணியளவில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் தலைமையிலும், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முன்னிலையிலும் நடைபெறும் இசை விழாவில் இக்கலைஞர்களுக்கு கலைச் செம்மல் விருதுகள் வழங்கப்பட உள்ளது.





நேற்று (02.02.2024) சென்னை உயர் கல்வி மன்ற கூட்ட அரங்கில் உயர்கல்வித் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன் தலைமையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக் கழகங்களின் பல்வேறு வளர்ச்சி பணிகள் குறித்தும், மாணவர்களின் நலனுக்குரிய முக்கிய செயல்பாடுகள் குறித்தும் அனைத்துப் பல்கலைக் கழகங்களின் பதிவாளர்கள், பல்கலைக் கழக உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் ஆ. கார்த்திக், தொழில் நுட்பக்கல்வித் துறை செந்தில்குமார், தலைமைப் பொறியாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. மாசிலாமணி

### பிப்ரவரி 3 (2015)



சென்னை தெற்கு மாவட்டம், சைதாப்பேட்டை பகுதியில், வட்டக் கழகச் செயலாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பொதுச்செயலாளராகவும் – சைதை கிழக்கு பகுதியின் அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# இன்று - பிப்ரவரி 03 பேரறிஞர் அண்ணாவின் 55-வது ஆண்டு நினைவு நாள்!



**பன்முகத் திறன் கொண்ட அறிஞர் அண்ணாவின் படைப்புகள்....**

| | | |
|---|---|---|
| சிறு கதைகள் | - | 117 |
| புதினங்கள் . | - | 6 |
| குறும் புதினங்கள் | - | 25 |
| அரங்கேற்றப்பட்ட நாடகங்கள். | - | 13 |
| திரைக்கதை வசனம் எழுதிய படங்கள். | - | 10 |
| அண்ணா பங்களித்த இதழ்கள். | - | 11 |
| எழுதிய கவிதைகள். | - | 77 |
| தம்பிக்கு எழுதிய கடிதங்கள் | - | 316 |
| (மூவாயிரம் பக்கம்) கட்டுரைகள். | - | 3000 |
| மகன் பரிமளத்தால் ஆவணப்படுத்தப்பட்ட கட்டுரைகள். | - | 1476 |
| ஆங்கிலக் கட்டுரைகள். | - | 129 |
| ஆற்றிய ஆங்கிலச் சொற்பொழிவுகள். | - | 400 |
| தமிழ்ச் சொற்பொழிவுகள் | - | 12775 |

( சென்னை ) கன்னிமாரா நூலகத்தைக் கரைத்துக் குடித்த அண்ணா என்று சொல்வது உண்மை ஆகும்.

அமெரிக்க மருத்துவமனையில் அறிஞர் அண்ணாவிற்கு அறுவை சிகிச்சை நாள் குறிக்கப்பட்டது. தான் படித்துக் கொண்டிருந்த புத்தகம் ஒன்றை முழுமையாகப் படித்து முடிப்பதற்காக அறிஞர் அண்ணா கேட்டுக் கொண்டதற்கேற்ப ஒருநாள் அறுவை சிகிச்சை தள்ளிவைக்கப்பட்டது.


அறிஞர் அண்ணா படித்த அந்த நூலின் பெயர்
" THE MASTER CHRISTIAN "
என்ற ஆங்கில நூலாகும்.

......கேவிஆர்.....

## தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (9)

### இன்று (பிப்ரவரி 3) வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, 2023 ஜீன் 3 முதல், ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று “முரசொலி சிறப்பிதழ்” வெளிவரும் என்று ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, இன்று (பிப்ரவரி 3 - சனிக்கிழமை) முரசொலி சிறப்பிதழ், “முத்தமிழறிஞர் கலைஞருடன் உடன்பிறப்புகளின் நெகிழ்ச்சிமிகு சந்திப்பு” என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

## சென்னை வடக்கு மாவட்டம் முழுவதும்

# பேரறிஞர் அண்ணா நினைவுநாள் நிகழ்ச்சிகள்!

### மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா அறிக்கை!

சென்னை, பிப்.3-

கழகப் பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் தலைமையில் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாள் அமைதிப் பேரணியில் சென்னை வடக்கு மாவட்டகழகத்தினர் கலந்து கொள்ள வேண்டுமாய் மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாள் அமைதி பேரணி கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களின் தலைமையில் இன்று (பிப்ரவரி 3) காலை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகில் தொடங்கி நினைவிடம் வரை அமைதிப் பேரணி நடைபெறுகின்றது.

மேலும் இன்று அண்ணா அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு நமது மாவட்டம் முழுவதும் உள்ள அண்ணா திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சிகளிலும், அது மட்டுமின்றி கழகத்தினர் ஆங்காங்கே அண்ணா அவர்களின் திருவுருவப்படத்தினை வைத்து மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிகளிலும் சென்னை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பகுதி செயலாளர் பொதுக்குழு உறுப்பினர்கள் வட்ட செயலாளர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் அணிகளின் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி மத்திய மாவட்டம், மானூர் கிழக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த மாவட்ட பிரதிநிதி எஸ்.சங்கர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension)) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 2-2-2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



சென்னை அண்ணாநகர் கந்தசாமி நாயுடு கல்லூரியின் சார்பாக என்.எஸ்.எஸ். முகாம் கடந்த ஒரு வார காலமாக மாடம்பாக்கம் பதுவஞ்சேரி பகுதியில் உள்ள நரிக்குறவர் காலனியில் நடந்தது. அதன் நிறைவு விழாவை முன்னிட்டு அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், தாம்பரம் மாநகர கழக செயலாளர் சட்டப்பேரவை உறுப்பினர் எஸ். ஆர். ராஜா கலந்து கொண்டு விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட நரிக்குறவர் மக்களுக்கு மளிகை பொருட்கள் உட்பட நல திட்ட உதவிகள் வழங்கி நரிக்குறவர்களின் வாழ்வியல் சம்பந்தமான கோரிக்கைகளை கேட்டு அறிந்து விரைவில் நிவர்த்தி செய்வதாக கூட்டத்தில் கலந்து கொண்ட நரிக்குறவர்கள் உறுதியளித்தனர். உடன் 5 வது மண்டல குழு தலைவர் எஸ். இந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

அண்ணா சதுக்கத்தில் புனரமைப்புப் பணிகள்: இன்று

# பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் மரியாதை செலுத்திட மாற்று ஏற்பாடு!

## அரசு செய்தி வெளியீடு!

சென்னை, பிப். 3 -

அண்ணா சதுக்கத்தில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதால் இன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளையொட்டி மரியாதை செலுத்திட மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்த அரசு செய்திக் குறிப்பு வருமாறு:

சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா சதுக்கம் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. எனவே, இன்று (3.02.2024 )நடைபெறவுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளை முன்னிட்டு, பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்திற்கு இடையே அமைந்துள்ள பகுதியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படம் வைக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இடத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்திடுமாறு, அரசியல் கட்சிகள், அரசியல் தலைவர்கள், அமைப்புகள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அரசு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1,355 கோயில்களுக்கு குடமுழுக்கு!

# தொன்மையான திருக்கோயில்களை பாதுகாத்து வருகிறார் முதல்வர்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, பிப்.3-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (02.02.2024) 1,000 ஆண்டுகள் தொன்மையான கரூர் மாவட்டம், திருமுக்கூடலூர், அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலை புனரமைக்கும் வகையில் ரூ.5 கோடி மதிப்பீட்டிலான திருப்பணிகளை தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, திருப்பூர் மாவட்டம், வெள்ளகோயில் நாட்ராயசாமி திருக்கோயிலில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் புதிதாக ஒரு வேளை அன்னதானம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தனர். பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவிநாசி, அவிநாசி லிங்கேஸ்வரர் சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு அவர் தந்த உற்சாகம் மற்றும் உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத்துறை புதுப்பொலிவோடு வீறுநடைபோட்டு வருகிறது. நம் முன்னோர்கள் விட்டுச் சென்ற பொக்கிஷமான ஆயிரம் ஆண்டுகள் தொன்மையான திருக்கோயில்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக அத்திருக்கோயில்களை புனரமைத்து திருப்பணி மேற்கொள்ள கடந்த இரண்டு நிதியாண்டுகளில் தலா ரூ.100 கோடி வீதம் ரூ.200 கோடியை முதலமைச்சர் அவர்கள் அரசு மானியமாக வழங்கினார். இந்நிதியுடன் உபயதாரர்களின் பங்களிப்பையும் சேர்த்து 197 திருக்கோயில்களில் ரூ.304.84 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் 12 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நிறைவுப் பெற்றுள்ளது.



இன்றைய தினம் திருமுக்கூடலூர், அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலை புனரமைக்கும் வகையில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் 11 திருப்பணிகள் மேற்கொள்வதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலின் குடமுழுக்கை வரும் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடத்திடும் வகையில் அனைத்துப் பணிகளும் விரைவுப்படுத்தப்படும். அதேபோல ஆயிரம் ஆண்டுகள் தொன்மையான சோமூர், சோமேஸ்வரர் திருக்கோயிலையும் புனரமைத்திட வரும் நிதியாண்டிற்கான திருப்பணி பட்டியலில் சேர்த்திட உத்தரவிட்டுள்ளோம். வரலாற்றில் நாம் படித்த வகையில் இராஜ ராஜ சோழனின் ஆட்சி காலத்தில்தான் திருக்கோயில்கள் உயர்வு பெற்றன என்பார்கள். தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் தான் இது போன்ற தொன்மையான திருக்கோயில்கள் புனரமைக்கப்பட்டு பக்தர்களின் தரிசனத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளையும் செய்து தரும் சிறந்த ஆட்சியாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான் 400 ஆண்டுகளுக்கு பின் திருவட்டாறு ஆதிகேசவ பெருமாள் திருக்கோயிலுக்கும், 300 ஆண்டுகளுக்கு பின் காஞ்சிபுரம் மாவட்டம், சாத்தனஞ்சேரி, கரிய மாணிக்க வரதராஜபெருமாள் திருக்கோயிலுக்கும், 150 ஆண்டுகளுக்கு பின் இராணிப்பேட்டை மாவட்டம், தக்கோலம் கங்காதீஸ்வரர் திருக்கோயிலுக்கும், 123 ஆண்டுகளுக்குப் பின் திருநெல்வேலி மாவட்டம், அரிகேசவநல்லூர், பெரிய நாயகி சமேத அரியநாத சுவாமி திருக்கோயிலுக்கும், நேற்றைய தினம் 60 ஆண்டுகளுக்கு பின் மாமல்லபுரம், தலசயன பெருமாள் திருக்கோயிலுக்கும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. இன்றைய தினம் நடைபெற்ற 16 திருக்கோயில்களின் குடமுழுக்குகள் உள்பட இதுவரை 1,355 திருக்கோயில்களுக்கு குடமுழுக்குகள் நடத்தப்பட்டுள்ளது.

அவிநாசி, அவிநாசி லிங்கேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கு திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர் நிதி ரூ.3.95 கோடி மதிப்பீட்டில் ஆறுமாத காலத்தில் திருப்பணிகள் முடிக்கப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. காங்கேயம் வட்டம், வெள்ளகோவில், நாட்ராய சுவாமி திருக்கோயிலில் ஒரு வேளை அன்னதானத் திட்டம் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. திருக்கோயில்களுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு உணவளிக்கும் வகையில் நாள் முழுவதும் அன்னதானம் 11 திருக்கோயில்களிலும், ஒருவேளை அன்னதானம் 763 திருக்கோயில்களிலும் ஆகமொத்தம் இதுவரை 774 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. திராவிட மாடல் அரசு செயல்படுத்திவரும் இது போன்ற பணிகளை ஆன்மிப் பெரியோர்களும், பக்தர்களும் வெகுவாக பாராட்டி வருகின்றனர். இது எங்களது பணிகளுக்கு புது உத்வேகத்தை அளித்து வருகிறது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், கரூர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வி. செ. ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் க.செல்வராஜ் (திருப்பூர் தெற்கு), இரா.மாணிக்கம் (குளித்தலை), திருமதி க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), கரூர் மாநகராட்சி மேயர் திருமதி வெ. கவிதா, துணைமேயர் ப.சரவணன், திருப்பூர் மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் இல.பத்மநாபன், கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், இந்து சமய அறநிலைத்துறை திருப்பூர் மண்டல இணை ஆணையர் சி.குமரதுரை, உதவி ஆணையர்கள் நா.நந்தகுமார், திருமதி பி.ஜெயதேவி, மாவட்ட அறங்காவலர்க் குழுத் தலைவர்கள் கு.பால்ராஜ், கீர்த்தி சுப்பிரமணியன், அவிநாசி லிங்கேஸ்வரர்திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் சக்திவேல், அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி, தாம்பரம் மாநகராட்சி, 2வது மண்டலம், 15 வது வார்டுக்கு உட்பட்ட ஈஸ்வரி நகர், குளத்து மேடு பகுதியில் சாலை வசதி இல்லாததால் அப்பகுதி பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வந்தனர். இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் சாலை அமைத்து தர வேண்டும் என பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதியிடம் அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கையை ஏற்று ரூபாய் 26 லட்சம் மதிப்பீட்டில் அப்பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டது. இதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தார். உடன் மாமன்ற உறுப்பினர்கள் டி.வி.ராஜா, குளத்து மேடு நாகலிங்கம், முத்து, தாம்பரம் மாநகராட்சி அதிகாரிகள் என பலர் இருந்தனர்.

# பேரறிஞர் அண்ணா 55வது நினைவு நாள்

## கழகப் பொதுச்செயலாளர் **துரைமுருகன்** தலைமையில்

# இன்று (பிப்.3) அமைதிப் பேரணி!

## மாவட்டக் கழகத் தோழர்களுக்கு சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!

காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் “மெட்ராஸ் ஸ்டேட்” என்ற பெயரை “தமிழ்நாடு” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் - சுயமரியாதை சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் - எழுத்து வேந்தர் - தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் - பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளினையொட்டி, **கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன்** அவர்கள் **தலைமையில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் கழக முன்னணியினர் இன்று பிப்ரவரி 3, சனிக்கிழமை காலை சரியாக 8.00 மணிக்கு காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார்கள்.**


**இந்த அமைதிப் பேரணி சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை அருகிலிருந்து புறப்பட்டு அண்ணா சதுக்கத்தை சென்றடையும்.**

கழக இந்நாள் முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் - முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு - உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நல பிரிவு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் அண்ணன் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

நாள்- 02.02.2024

**சென்னை மாவட்ட தி.மு.க.**

# அண்ணா - நினைவில் நிலைத்த நெடுஞ்சித்திரம்!



இன்று பிப்ரவரி 3 - அறிஞர் அண்ணா நினைவு நாள்! இந்த நினைவு நாள் என்பதே ஒரு குறியீடுதான்; அண்ணா அவர்களைப் பொறுத்தவரை, அவர்தம் அருமைத் தம்பிமார்களாகிய நாம், இந்த ஒரு நாள் மட்டுமா அவரை நினைக்கிறோம்? இல்லை; நம் எல்லோருடைய நினைவிலும் எப்பொழுதும் நீங்காத நெடுஞ்சித்திரமாக நிலைத்திருப்பவர் அவர் !

அண்ணா அவர்களைப் பற்றிய நினைப்பே, பல்லாயிரம் பேரை பேச்சுக் கலையில் பழக்கியது; பின்னர் அவர்கள் எல்லாம், மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்றாய் மணம் வீசினர்.

**அண்ணா அவர்களைப் பற்றிய நினைப்பே, பல நூறாயிரம் பேரை எழுத்தாளர்களாக்கியது; அவர்கள் எழுதி எழுதி மேற்சென்றனர். அண்ணா அவர்களோ, திராவிடத்துத் தீரா எழுத்தானார்; திசை எட்டும் ஆட்கொண்டார்.**

**அண்ணா அவர்களைப் பற்றிய எண்ணமே, ஏராளமானோரை அரசியலுக்கு ஈர்த்தது; பொது வாழ்க்கையில் புகுந்து புடம் போட்டுக் கொள்ளச் செய்தது.**

**இவ்வாறு, அண்ணா எல்லோர்க்கும் முதல்வரானார்,முன்னோடி ஆனார், மூலகர்த்தாவானார்.**

அண்ணல் காந்தி அடிகள், விடுதலைப் போரில் அகிம்சையைப் பின்பற்றினார்; வன்முறை தவிர்த்த ஒத்துழையாமையைக் கடைப்பிடித்தார்; எளிமையையும், பொறுமையையும் தரித்துக் கொண்டார்; இவ்வகை ஆயுதங்களைக் கொண்டே, அணி தேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு நம் அன்னை தேசத்தை அடிமைப்படுத்தி, அதிகாரம் செலுத்தி வந்த வெள்ளை ஏகாதிபத்தியத்தை வெருண்டோடச் செய்தார்.

காந்தியாரைப் போலவே, அறிஞர் அண்ணா அவர்கள், “பலாத்காரம் கூடாது. பலாத்காரம் என்றால், ஆயுத பலாத்காரம் மட்டுமல்ல, தத்துவம் மூலம் பலாத்காரம் புகுத்துவதும் கூடாது. தேச ஒற்றுமை, தேசியம் என்று ஏதேனும் தத்துவங்களையே கருவியாக்கிப் பலாத்காரப் படுத்துவது கூடாது” என்று எதிலும் வன்முறையை வெறுத்தார்.

**“எதிரிகள், தாக்கித் தாக்கித் தங்கள் வலுவை இழக்கட்டும்; நீங்கள், தாங்கித் தாங்கி வலுவைப் பெற்றுக் கொள்ளுங்கள்” என்று தம்பிமார்களுக்கு அறிவுறுத்தினார். “கண்டனத்தைத் தாங்கிக் கொள்ளும் திடமனம் இல்லையென்றால்,கடமையை நிறைவேற்ற முடியாது” என்றும்; “கட்டுப்பாடும் ஒழுங்கும் கட்டாயம் நமக்குத் தேவை. இவை சாதாரணமானவைதான். ஆனால் இம்மாதிரி சாதாரண விஷயங்களைக் கொண்டே ஒரு சமூகத்தை எடை போட முடியும்” என்றும்; வலியுறுத்தி, கடமை – கண்ணியம் – கட்டுப்பாடு போதனை செய்தார்.**

தமிழினம், தமிழ் மொழி – மறுமலர்ச்சிக்காகத் திட்டமிட்டுப் பணி செய்தார் அண்ணா. எதையும் தாங்கும் இதயத்தை இயற்கையாகவே பெற்றிருந்ததால், எல்லாவகை இழிமொழிகளையும் தாங்கித் தாங்கி, எதிலும் எதற்கும் அவசரப்படாமல், இந்த பூமி காத்த பொறுமையை மனதில் புடம் போட்டு வளர்த்துக் கொண்டு; “ மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு “ என்ற செறிந்த நாகரிகத்துடன், சீர் தூக்கி, அடி அளந்து நடந்து, நீடு துயிலில் ஆழ்ந்திருந்த திராவிடத்தைச் சிலிர்த்தெழச் செய்தார்.

**தனிநாடு கேட்பதில் உள்ள நியாயங்களை உணர்ந்து, பிரிவினை குறித்து ஆழமாகச் சிந்தித்து, எழுதியும் பேசியும் ‘திராவிட நாடு திராவிடருக்கே’ என முழக்கமிட்ட அண்ணா அவர்கள், அதைக் கைவிட வேண்டிய கட்டாய சூழல் ஏற்பட்ட போது,**

**“இலட்சியவாதிகளான என் தம்பிமார்கள் வளர்க்கும் இந்த இயக்கத்தைக் காப்பாற்றவும், மானிட உரிமையைக் காத்திடத் துணையாகும் ஜனநாயகத்தைக் காப்பாற்றவும், நான் திராவிட நாடு பிரிவினையைக் கைவிடத்தான் வேண்டும் , வேறு வழியில்லை “ என்று மிகுந்த மன திடத்தோடு அண்ணா அறிவித்தார்.**

**எனினும், எழுப்பி வந்த கோரிக்கையிலே இருந்த நியாயத்தைத் தெளிவு படுத்திடும் வண்ணம்,” நான் நாட்டுப் பிரிவினையைத் தான் கைவிடுகிறேனே தவிர, நாட்டுப் பிரிவினைக்கான காரணங்கள் அப்படியேதான் இருக்கின்றன” என்று சொன்னதின் மூலமாக அண்ணா சாதுர்யம் மிக்க அரசியல் ஆளுமை இமயமாக உயர்ந்தார்.**

**கடவுள் இல்லை என்று சொல்வோமானால், நாம் சொல்லும் பிறவற்றை ஏற்றுக் கொள்கிற மனநிலையிலே உள்ளவர்கள் கூட , அவற்றையும் ஏற்றுக் கொள்ளத் தயங்குவர்; கடவுளைப் பற்றி எல்லோரையும் சிந்திக்க வைக்க வேண்டும், மாறுபாடுகளைக் குறைத்து, உடன்பாடுகளை அதிகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், “ ஒன்றே குலம், ஒருவனே தேவன் “ என்னும் திருமூலரின் கருத்தைப் பதிவு செய்து, அண்ணா சமூக விஞ்ஞானியாக அனைவரையும் பிரமிக்க வைத்தார்..**

பிரிவினைக் கோரிக்கை குறித்தும், கடவுளைப் பற்றிய கருத்தாக்கம் தொடர்பாகவும், அண்ணா அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே மேற்கொண்ட நிலைப்பாடுகள், எந்தவித மறுபரிசீலனையும் இன்றி இன்றளவும் இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளாகத் தொடர்வதின் மூலம், அண்ணா ஈடிணையற்ற தொலை நோக்குச் சிந்தனையின் தூய ஊற்று என்று திராவிடம் தெளிவாக ஏற்றுக் கொண்டுள்ளது.

கைக்கொண்ட அணுகுமுறைகளினால் தென்னாட்டுக் காந்தி ஆனார்; ஆகச் சிறந்த சொற் பொழிவுகளினால் இந்நாட்டு இங்கர்சால் ஆனார்; சமூக நோக்கம் கொண்ட நாடகங்களைப் படைத்ததினால், பெர்னாட்ஷா ஆனார் அண்ணா !

“தமிழுக்கு ஒரு சார்லஸ் டிக்கன்ஸ், கோல நடைக்கொரு கோல்ட்ஸ்மித், உணர்ச்சியை உலுக்க ஒரு விக்டர் ஹியோகோ, உரையாடலுக்கு ஒரு ஷெரிடன், கேலிக்கு ஒரு மோலியர், எளிமைக்கு ஒரு எமிலி ஜோலா “என்று கவிஞரும், நாடக ஆசிரியருமான எஸ்.டி. சுந்தரம், மேலை நாட்டின் இலக்கிய ஜோதிகளை அண்ணா அவர்களுக்கு உருவகமாக்கிச் சொல்லி இருப்பது, அவரது பன்முக ஆற்றலுக்கான அழகிய அடையாளம்.

**அனைத்திற்கும் மேலாக, “அண்ணாவை நான் புத்தர் என்றே சொல்வேன். அவர் பொறுமையிலே புத்தர்; பிறருடைய கடுஞ் சொல்லையெல்லாம் தாங்கிக் கொள்வதானாலே புத்தர்; தனக்கு வந்த இழிவைப் பற்றியெல்லாம் கவலைப் படாத தன்மையிலே புத்தர்; இரக்க உணர்வு மிகுந்த, தியாகத் திருவுருவமாக இருந்த அண்ணா, புத்தராக இருந்தார் “ என்று அண்ணா மறைந்த போது தந்தை பெரியார் கூறினார்.**

அறிஞர் அண்ணா என்னும் திராவிட புத்தர், நம் நினைவில் நெடுஞ்சித்திரமாகவும், கலை வண்ணம் மாறாத மாசறு பொற் சிலையாகவும் நிலைத்திருந்து, நமக்கு மட்டுமல்லாமல், நம் சந்ததியினர்க்கும், ஈர்ப்பு சக்தியாக என்றும் இருப்பார் !

**வாழ்க அண்ணா ! வாழ்க அண்ணா ! ! வாழ்க அண்ணா !!!**

•••

**கி.இராஜமாணிக்கம்**

•••

# எல்லோர்க்கும் அண்ணன் அவர்!




சிங்கநடையும், சிங்காரத் தென்றல் நடையும், பொங்கு கடல் நடையும், புரட்சிக் கவிநடையும், தன் உரைநடையால் கண்ட பூமான்.

நோக்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் தம்பிமார் படைமீது விழியோட்டும் கோமான்.

தந்தையுறவை தாயுறவை மிஞ்சும் வகையில் அரசியலில் அண்ணன் – தம்பி உறவை வளர்த்து, நினைக்கும் போதெல்லாம் சிந்தையணு ஒவ்வொன்றிலும் சிலிர்க்கச் செய்த பேரறிஞர் அண்ணா .

தம்பியரை, தாயகத்தை, தமிழினத்தைத் தவிக்க விட்டு, நீடுதுயில் கொண்டதுயரநாள் பிப்ரவரி 3.

தனது நாவன்மைத் திறத்தால், எளிமை, இனிமை, எவர்மனத்தும் நோகாத செயற்பாட்டால், எதிர்ப்பின் நெற்றிப் பொட்டில் தவறாமல் தாக்கும் உத்தியுடன் வெற்றி வலம் வந்து, விந்தையிலும், விந்தை இதுவென வியக்கும்படி ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த அண்ணா, ஆண்டுகள் இரண்டு கூட முழுமையுறாத நிலையில் நீடுதுயில் கொண்ட நாள் பிப்ரவரி 3.



**வழக்கறிஞர்**
**வெ. அன்புவாணன்**
கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

சரித்திரப் பின்புலமின்றி, சாம்ராஜ்யப் பெருமை ஏதுமின்றி, சாமானிய குடும்பத்தில் தோன்றி, தும்பை மலர் உள்ளத்தால், தூயநல் இலட்சியங்களை நெஞ்சில் ஏற்று, அறிவுநடைத் தமிழால், ஆரியத்தின் வேரறுத்து, “அண்ணா! அண்ணா!!” என எந்நாளும் இளைஞர் படை துதிக்க, வெற்றியுலா வந்த பேரறிஞர் அண்ணா, நம்மை விட்டுப் பெரும் பயணம் தொடர்ந்து, இன்றோடு ஆகின்றன, ஆண்டுகள் ஐம்பத்தைந்து!

தமிழுக்கு அணிகலனாய்! தம்பியருக்கு படைகலனாய், அமுத மொழியாம் நம் அன்னை மொழியில், எரிமலைகள் செய்து, இதயசுகம் தரும் தென்றலைத் தவழவிட்டு, ஆண்ட நமது தமிழினத்தின் பெருமை சொல்லி, அன்று அடிமைத்தளையில் மாண்டிட்ட புழுக்களாம் தமிழர் தம்மை, அவர் மீண்டிடப் போர்க்கொடி உயர்த்திய மேலோன் நமது அண்ணா.

அக்ராசனாதிபதியும், அபேட்சகரும், ஆளுமை கொண்டிருந்த தமிழ்நாட்டு அரசியலில், அவைத்தலைவர், வேட்பாளர் என அன்னைத்தமிழில் விளித்த, அருந்தமிழ் காவலர் நமது அண்ணா!

தமிழைப் பழித்த தருக்கர்தம் தலைகளில் கற்கொண்டு, கற்புக்கரசி, நமது பொற்புடைய காவல் தெய்வம், கண்ணகிக்குச் சிலையெடுத்த காவியம் பேசும் தமிழ் வீரர்கள் உலவும் மண்ணில் “ நான்சென்ஸ்” என இகழ்ந்த; ஆனால் நல்ல மனிதர் நேரு பண்டிதரை, “பெரிய மனிதர் சிறிய வார்த்தை பேசி விட்டார். மன்னிப்போம். மறப்போம்!” என சொல்லால், சுவைபட சுட்டிக்காட்டிய பெருந்தன்மையின் பேருருவம் பேரறிஞர் அண்ணா.

கழகத்தில் சிறு கருத்து வேறுபாடுகள் களைவிட்டு, அண்ணாவை, ஜார்மன்னன், பூர்ஷ்வா மனத்தினர் என்றும், சர்வாதிகாரப் போக்கு மிகுந்தவர் என்றும் சிறு கும்பல் சேர்ந்து தமக்குள் பேசியவையெல்லாம் உரு கொண்டு, உண்ணாவிரதம் வரை போய், அண்ணாவை எதிர்த்து அமர்ந்திட்டார் ஈ.வெ.கி.சம்பத்.

கழக முன்னணித் தம்பியரோடு அமர்ந்திருந்த அண்ணா, “அனைவரும் புறப்படுங்கள். தம்பி சம்பத்தின் உண்ணாவிரதத்தை முடித்து வைப்போம்” என அழைத்திட்டார்.

திடுக்கிட்ட தம்பியர், “அண்ணா, சம்பத் உண்ணாவிரதம் இருப்பது, உங்களை எதிர்த்து, என்னென்னவோ இகழ்ந்து பேசி” என்று மறுமொழி உரைத்தனர்.

“இருக்கட்டும்பா. சம்பத் பசிதாங்க மாட்டான்” என்றுரைத்த தாய் மனத்துப் பெருந்தலைவர் பேரறிஞர் அண்ணா.

‘எளியவர், இனியவர், எதிரியேயாயினும் இமைப்பொழுதும் நோகாதவர்’ என்ற பெயர் பெற்ற அண்ணா; கொடுமை கண்டு, கொடுவாள் வீசவும் தயங்கார்.

இதே ஈ.வெ. கி. சம்பத் எல்லை மீறி ஏகடியம் பேசி, “நான் ஒரு LEFTIST” என அறைகூவல் விடுத்தபோது, “LEFTIST ARE LEFT THE PARTY” என்று எச்சரித்த, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காப்பதில் கறைபடியா பேருள்ளம் கொண்ட தலைவர். நமது பேரறிஞர் அண்ணா.

அதே சமயம் “இயக்கத்தை விட்டு, எவர் பிரிந்தாலும், சட்டைக் கிழிவது போலல்ல தம்பி, சதை பிய்ந்ததைப் போல் வேதனைப்படுகிறேன்.” என்று உருகிய பாசப்பறவை நமது நேசமிகு அண்ணா.

அப்படித்தானே, தனது சந்திரமோகன், அல்லது சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் எனது நாடகம் மூலம் தந்தை பெரியார் அவர்களால் “சிவாஜி” எனும் அடைமொழி பெற்று, தலைவர் கலைஞர் அவர்களின் அனல் கொப்பளித்த பராசக்தி திரைப்பட வசனங்கள் மூலம் புகழின் உச்சியை அடைந்து, பின்னர் காங்கிரஸ் இயக்கம் கண்ட சிவாஜிகணேசனை, “எங்கிருந்தாலும், வாழ்க தம்பி கணேசா! “ என மனதார வாழ்த்தினார்.

மேடையில் வீசிடும் மெல்லிய பூங்காற்றாய், இலக்கிய அரங்குகளிலும், அரசியல் மேடைகளிலும், கல்லூரி கலா மன்றங்களிலும், இனிய, எளிய, சொல்லாட்சி மூலம் சுவைபட பேசி, மாலைநேரக் கல்லூரி வகுப்பறை இதுவென கேட்போரை சொக்கவைத்து, தன்பால் ஈர்த்த சொல்லில் வல்லவர் அண்ணா.

சௌமியன், சம்மட்டி, சமதர்மன், ஒற்றன், ஆணி, பரதன், நக்கீரன், குறிப்போன், வீரன், வீனஸ் எனும் புனைப்பெயர்களில் புரட்டு மனிதர்களின், இருட்டு, திருட்டு செயல்களை திரைவிலக்கி, ஆதாரத்துடன் அம்பலப்படுத்திய எழுத்து வேந்தர் அறிஞர் அண்ணா.

“தம்பிக்கு கடிதங்கள்” எனும் தலைப்பில் மடல் தீட்டி,

தமிழர்களின் வரலாற்றை, வெற்றியை, இலக்கியத்தை, காதலை, அவர்கள் ஏந்தி சுழற்றிய வாளின் ஒளி, எடுத்து வீசிய ஈட்டியின் ஓசை ஏற்படுத்திய தமிழ் மறவர் தமது கம்பீரத்தை, சொல்லி, தமிழ் மொழி காக்க, தடந்தோள் உயர்த்திட்ட தம்பியரை, தயார்படுத்திய தளபதி நமது அண்ணா.

தனது அரசியல் குருகுலமான தந்தை பெரியாரின் ஈரோட்டு ‘குடிஅரசு’ இதழில் தான் எழுதிய “ரிப்பன் மாளிகை சீமான்கள்’ எனும் தலையங்கத்தினால் பெரிதும் கவரப்பட்டு எவரையும் எளிதில் பாராட்டாத பெரியார் புளகாங்கிதம் கொண்டு, குடி அரசு இதழ் கட்டிடத்தின் மூன்று மாடிகள் ஏறிவந்து பாராட்டிய பெருமைக்குரிய அண்ணா, அதே தலைவர் பெரியார் மீது கொண்ட கருத்து வேறுபாட்டால், கொள்கை மாறுபாட்டால், திராவிட முன்னேற்றக் கழகம் எனும் தனியியக்கம் கண்ட போதும், “தலைவரில்லை, முன்னேற்றக் கழகத்திற்கு; என் தலைவர் அவர் என்றேனும் ஒரு நாள் வந்தமர்வார். அதுவரையில் காத்திருப்பேன். நான் கண்டதும். கொண்டதும். தலைவர் பெரியார் ஒருவரைத் தான்” என அடக்கத்துடன் பிரகடனப்படுத்தினார்.

இன்னும் கூட தன்னை எளிமையாக வெளிப்படுத்திக் கொண்ட அண்ணா, “எனக்காக நீங்கள் அல்ல உங்களுக்காக நான். அதுகூட தவறு; உங்களால் நான். என்பதே உண்மை” என்றார்.

1967 ல் காங்கிரஸ் கட்சிக்கு மாற்று வேண்டுமென மக்கள் நினைத்திட்ட நேரத்தில், அத்தகு வாக்குகள் சிதறாமல் ஓரணிக்குக் கிடைத்திட, வேறுபட்ட கொள்கைகள், ஒரே பிரச்சினையில் வெவ்வேறு மாறுபட்ட இரு நிலைப்பாடுகள் என இயங்கி வந்த,

இராஜாஜியின் ‘சுதந்திரா கட்சி.’
முஸ்லிம் லீக்
ம.பொ. சிவஞானத்தின் ‘தமிழரசுக் கழகம்.’
ஃபார்வார்டு பிளாக் ( முன்னேற்றக் கட்சி )
மார்க்சிய கம்யூனிஸ்ட்
பிரஜா சோஷலிஸ்ட்
சம்யுக்த சோஷலிஸ்ட்
சி.பா. ஆதித்தனாரின் ‘நாம் தமிழர்’ இயக்கம்

போன்ற கட்சிகளை ஒன்று படுத்தி, கூட்டணி வகுத்து, குறைகளைக் குறைத்து, நிறைகளை உணர்த்தி, ஒன்றுபட்டுச் செயலாற்றி, வெற்றிமலர் பறித்த இராஜதந்திரத்தின் மறுபெயர் அறிஞர் அண்ணா.

மன்னார்குடியில், “திராவிட இயக்கத்தின் முதல் அத்தியாயத்தை நான் முடித்து வைக்கிறேன். இரண்டாம் பாகத்தை என் தம்பி கருணாநிதி தொடருவார் “ என தனது அடியொற்றி நடக்கும் அருமைத் தம்பிகளில் அடுத்த கழக தலைமைப் பொறுப்பு நம்மருந் தலைவர் கலைஞருக்கே, என சொல்லாமல் சொல்லிய தலைவர்; தன்னேறில்லா பேரறிஞர் அண்ணா.

புற்றுநோயின் கொடிய பிடியில் சிக்குண்டு, வாதை தன்னை வதைத்திட்ட போதிலும், மருத்துவர்கள் அறுவை சிகிச்சைக்கு வற்புறுத்திய போது, “இதில் உனக்கு இஷ்டம் தானா, கருணாநிதி?” எனக் கேட்டு, தலைவர் கலைஞரை “ஓ” வெனக் கதற வைத்த பாசப் பெட்டகம் பேரறிஞர் அண்ணா.

வற்றாத வளங்கள் கொண்ட தென்னகம் வடவரின் சூழ்ச்சியால் எத்துறைகளிலும் புறந்தள்ளப்படுவதைக் கண்டு, வெகுண்டு,

“இங்கே,
வெட்டினால் வெள்ளி!
தட்டினால், தங்கம்!
இடித்தால், இரும்புவளம்!”

என ஆதாரத்தோடு அடுக்குமொழியில் வாதிட்ட மண்ணின் மைந்தர் நமது அறிஞர் அண்ணா.

அதுமட்டுமின்றி, “தமிழ்நாட்டில் வல்லபாய் வாய்க்கால், சரோஜினி சதுக்கம், அரவிந்தர் அங்காடி, ஜவஹர் ஜவ்வரிசி, சவர்க்கார் சாம்பார் என்று நாம் தான் எதற்கெடுத்தாலும் வடநாட்டார் பெயரைச் சூட்டிக் கொண்டு மகிழ்கிறோம். ஆனால் அவர்கள் நமது தலைவர்களின் பெயரை ஒருபோதும் சூட்டுவதில்லை. ஏன்? சிந்திப்பீர்” என்று தமிழருக்கு சூட்டையும், சொரணையையும் உணர்த்தியவர் அண்ணா.

இத்தகு பெருமைகளைக் கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு நாளில், சற்றொப்ப 50 ஆண்டுகளாய் சென்னை அண்ணா சாலையிலிருந்து அவரது நினைவகம் வரை நடந்தே வந்து, கண்ணீரஞ்சலி செலுத்திட்ட பெருமகன் தலைவர் கலைஞர், உலகில் தான் ஏற்றுக் கொண்ட தலைவரை அரை நூற்றாண்டு காலமாக இப்படி ஏற்றிப் போற்றிய அதிசயம் வேறெங்கும் நிகழ்ந்ததில்லை என்று சொல்லுமளவிற்கு “அண்ணா! அண்ணா!” என்று இறுதிவரை வாழ்த்திட்ட தலைவர் கலைஞர், அவரது தடம் பற்றி, கட்சியையும், ஆட்சியையும் செம்மையுறு பாதையில் சிறப்பாக செலுத்தும் தமிழினத்தளபதி அவர்கள் வழியில் நடைபோடுவோம்!

# கிளர்ச்சிகள் – ஜனநாயகத்துக்கு முரணானதல்ல!



கிளர்ச்சியாலே வளர்ந்தது கழகம் என்று 'மெயில்' கூறுகிறது. தவறு. மேலெழுந்தவாரியான தோற்றம்; நுனிப்புல் மேயும் போக்கு. 'மெயில்' இதனிடம் நாம் இதனைவிட அறிவு மிக்கதோர் போக்கை எதிர்பார்க்கிறோம். கழகம், கிளர்ச்சிகளை நடத்தி இருக்கிறது; நடத்த இருக்கிறது. கிளர்ச்சிகளை நடத்துவது ஜனநாயகத்துக்கு முரணானதல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால், கிளர்ச்சிகளை நடத்துவதற்காகவே உள்ளது அல்ல கழகம்! கழக வளர்ச்சி கிளர்ச்சிகளை நடத்துவதனாலேயே கிடைத்ததுமல்ல.

கிளர்ச்சிகளைத் தேடி அலையக் கூடாது! தேவைப்பட்டால் நடத்தத் தயங்கக் கூடாது என்பது கழகத்தின் கோட்பாடு. கழகத்துடன் சேர்ந்து வளர்ந்தவர்களுக்கும், தொடர்ந்து அதன் போக்கைக் கவனித்து வந்தவர்களுக்கும் இது புரியும்.

**- பேரறிஞர் அண்ணா**

சென்னை, வண்ணாரப்பேட்டை பகுதியைச் சார்ந்த

# தனசேகர் மூளைச்சாவு அடைந்து உடலுறுப்புகள் தானம்!

## உடலுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் மலர் மாலை வைத்து அரசு மரியாதை!

சென்னை, பிப்.3-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (02.02.2024) சென்னை, புதிய வண்ணாரப்பேட்டை பகுதியைச் சார்ந்த தனசேகர் (வயது 57) என்பவர் மூளைச்சாவு அடைந்து, அவரது உடலுறுப்புகள் தானமாக பெறப்பட்டதைத் தொடர்ந்து, அவரது திருவுடலுக்கு நேரில் சென்று அரசு மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐட்ரீம் மூர்த்தி, அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பாலாஜி, தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் மரு.கோபாலகிருஷ்ணன், துணை முதல்வர் மரு.ஜென்னத் சுகுந்தா, நிலைய மருத்துவ அலுவலர் மரு.வனிதா மலர் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கை வருமாறு:

சென்னை, வண்ணாரப்பேட்டை பகுதியைச்சார்ந்த திரு.தனசேகர் (வயது 57) என்பவர் மூளைச்சாவு அடைந்து இருக்கிறார். அவரின் உயிரை மீட்பதற்கு அரசு ஸ்டான்லி மருத்துவமனை நிர்வாகம் பெரிய அளவில் முயற்சி செய்திருக்கிறார்கள் என்றாலும்கூட மூளைச்சாவு அடைந்திருக்கிறார். அவருடைய குடும்பத்தினர் அவரது உடலுறுப்புகளை தானம் செய்வதற்கு முன்வந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் கடந்த 23.09.2023 அன்று தமிழ்நாட்டில் உடலுறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதை செய்யப்படும் என்கின்ற அறிவிப்பு வெளியிட்டார்கள். அந்தவகையில் அறிவிப்பு வெளியிடப்பட்ட முதல் வாரத்திலேயே தேனி மாவட்டம், சின்னமனூரில் உள்ள அரசு ஊழியர் ஒருவர் மூளைச்சாவு அடைந்து அவருடைய உடலுறுப்புகள் தானமாக பெறப்பட்டது. இந்நிகழ்வில் நான் நேரிடையாக கலந்து அரசு மரியாதை செலுத்தினேன். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதிலும் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட மூன்று மாதத்தில் 61 பேர் மூளைச்சாவு அடைந்தபிறகு அவரது குடும்பத்தினர் விருப்பத்தின்பேரில் உடலுறுப்பு தானம் செய்திருக்கிறார்கள். கடந்த 2022ஆம் ஆண்டு ஒட்டுமொத்தமாக உடலுறுப்பு தானம் செய்தவர்களின் எண்ணிக்கை 156. மேலும் 2023ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பிற்கு பிறகு மூன்று மாதத்தில் மட்டும் 61 பேர் உடலுறுப்பு தானம் செய்திருக்கிறார்கள். அதற்கு முன்னால் உடலுறுப்பு தானம் செய்தவர்கள் 117 பேர் என மொத்தம் 178 பேர் செய்திருக்கிறார்கள். 2022ஆம் ஆண்டைவிட கடந்த 2023ஆம் ஆண்டு உடலுறுப்பு தானம் செய்தவர்களின் எண்ணிக்கை 11.4% அதிகரித்திருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்குபிறகு 4097 பேர் தங்களுடைய மறைவிற்கு பின்னால் உடலுறுப்பு தானம் செய்வோம் என்று பதிவு செய்திருக்கிறார்கள். 2024 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டிருக்கும் நிலையில் இதுவரை 32 பேர் உடலுறுப்பு தானம் செய்துள்ளனர். இப்படி உடலுறுப்பு தானம் செய்துவரும் நிலையில் உடலுறுப்பு வேண்டி காத்திருப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கின்றது. சிறுநீரகம் வேண்டி காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 6,266 பேர், கல்லீரல் 400 பேர், இதயம் 72 பேர், நுரையீரல் 62 பேர், இதயமும் நுரையீரலும் வேண்டி காத்திருப்பவர்கள் 25 பேர், கைகள் வேண்டி காத்திருப்பவர்கள் 27 பேர், சிறுகுடல் 2 பேர், சிறுநீரகம் மற்றும் கல்லீரல் 41 பேர், சிறுநீரகம் மற்றும் கணையம் 42 பேர், கணையம்/சிறுகுடல்/வயிறு 2 பேர் என மொத்தம் 6939 பேர் உடலுறுப்பு தானம் வேண்டி காத்திருக்கிறார்கள். மேலும் கடந்த ஆண்டு 178 உடலுறுப்புகள் தானம் பெறப்பட்டு 1000 பேர் பயன்பெற்று இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணா 55வது நினைவு நாள் - அமைதிப் பேரணி!

## மாதவரம் சுதர்சனம் - கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் பங்கேற்பு! தி.மு. தனியரசு வேண்டுகோள்!

சென்னை, பிப்.3-

திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் - 1-வது மண்டல குழுத் தலைவர் தி.மு.தனியரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி இன்று (3.2.2024, சனிக்கிழமை) காலை 5.45 மணியளவில் திருவொற்றியூர் கழகப் பணிமனை தேரடியில் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திய பிறகு திருவொற்றியூர் பெரியார் நகரில் அமைந்துள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்க சென்னை வடகிழக்கு மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் - மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் ஆகியோர் முன்னிலையில் அமைதிப் பேரணி இன்று நடைபெறுகிறது.

**அமைச்சர் துரைமுருகன் தலைமையில் அமைதிப் பேரணி!**

அதேபோல் இன்று (3.2.2024) காலை 8 மணிக்கு கழக பொது செயலாளர் நீர்நிலை துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் தலைமையில் அரசு விருந்தினர் மாளிகை அருகில் இருந்து அண்ணா நினைவிடத்திற்கு அமைதி பேரணி நடைபெற உள்ளது. ஆகையால் இரு நிகழ்ச்சிகளிலும் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளரும், மண்டலக் குழுத் தலைவருமான தி.மு.தனியரசு கேட்டுக்கொண்டுள்ளார்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (02.02.2024) 1,000 ஆண்டுகள் தொன்மையான கரூர் மாவட்டம், திருமுக்கூடலூர், அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலை புனரமைக்கும் வகையில் ரூ.5 கோடி மதிப்பீட்டிலான திருப்பணிகளை தொடங்கி வைத்தார். உடன் கரூர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வி.செ.ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள், இரா.மாணிக்கம் (குளித்தலை), திருமதி க. சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), கரூர் மாநகராட்சி மேயர் திருமதி.வெ. கவிதா, துணைமேயர் ப. சரவணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் கி.பிரபாகர், மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், இந்து சமய அறநிலைத்துறை திருப்பூர் மண்டல இணை ஆணையர் சி.குமரதுரை, உதவி ஆணையர்கள் நா.நந்தகுமார், திருமதி.பி.ஜெயதேவி, மாவட்ட அறங்காவலர்குழு தலைவர் கு.பால்ராஜ் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# உடல் ஆற்றலை விட அறிவாற்றல்!



இன்று மனிதன் நாகரிகம் பெற்றிருக்கின்றான். உடல் ஆற்றலை விட அறிவாற்றலை மிகுதியாக நம்பவேண்டிய நிலை உருவாகியுள்ளது. ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்ட வேண்டும் என்ற ஏசுவின் பொருளுரையைப் பலர் புரிந்துகொள்கின்றனர். எனினும் சிற்சில நேரங்கள் கோபம் முன் வருகின்றது. நெஞ்சு பொறுக்க மாட்டாது நிலை குலைந்து போகவேண்டி வருகின்றது. 'தீமையை மோதி மிதித்து விடு பாப்பா!' என்று பாரதியார் கூறியதை நாம் செயல்படுத்த எண்ணுகிறோம்.

**- பேரறிஞர் அண்ணா**

# சென்னை குடிநீர் ஏரிகளின் நீர் இருப்பு!

சென்னை, பிப்.3-

3,300 மில்லியன் கனஅடி கொள்ளளவு கொண்ட புழல் ஏரியில் தற்போது 2,659 மில்லியன் கனஅடி நீர் இருப்பு உள்ளது. சென்னை குடிநீருக்காக 159 கன அடி தண்ணீர் வெளியேற்றப் பட்டு வருகிறது.

சோழவரம் ஏரியின் மொத்த கொள்ளளவான 1,081 மில்லியன் கன அடியில் 775 மி.கனஅடி நீர் இருப்பு உள்ளது. சென்னைக்கு குடிநீர் வழங்கும் 5 முக்கிய ஏரிகளில் 84.21 சதவீதம் நீர் இருப்பு உள்ளது. 5 முக்கிய ஏரிகளின் மொத்த கொள்ளளவான 11.757 டி.எம்.சி. யில் 9.901 டி.எம்.சி. நீர் இருப்பு உள்ளது. செம்பரம்பாக்கம் 83.92%, புழல் - 80.57%, பூண்டி 71.69%, சோழவரம் 71.69%; கண்ணன்கோட்டை ஏரி 98.6% நீர் இருப்பு உள்ளது.

### ஒன்றிய அரசின் இடைக்கால பட்ஜெட்

# பா.ஜ.க. அரசின் 10 ஆண்டுகால தோல்வியைப் பிரதிபலிக்கிறது!

## கட்சித் தலைவர்கள் கருத்து!


சென்னை, பிப்.3-

ஒன்றிய நிதியமைச்சர் தாக்கல் செய்துள்ள இடைக்கால நிதி நிலை அறிக்கை, 10 ஆண்டு கால ஒன்றிய பா.ஜ.க. அரசின் தோல்வியை பிரதிபலிப்பதாக உள்ளது என்று தமிழ்நாடு அரசியல் கட்சி தலைவர்கள் விமர்சனம் செய்துள்ளனர்.

இதுகுறித்து, தமிழ்நாட்டின் அரசியல் கட்சி தலைவர்கள் தெரிவித்துள்ள கருத்து வருமாறு:



**கே.எஸ். அழகிரி** (தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்): நாடாளுமன்ற தேர்தலை மனதில் கொண்டு சில கவர்ச்சிகரமான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. 2014ல் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றாத ஒன்றிய பா.ஜ.க. அரசு, சாதனைகள் என்று சொல்வதற்கு எந்த உரிமையும் இல்லை. ஏமாற்றம் மிகுந்த நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்ததற்கான உரிய பாடம் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மக்களால் பா.ஜ.க.வுக்கு புகட்டப்படும்.



**வைகோ** (ம.தி.மு.க. பொதுச் செயலாளர்): நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த 2024-25ம் நிதி ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவு திட்ட அறிக்கையில், பொருளாதார வளர்ச்சி 7.5 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. ஆனால் கொரோனா காலகட்டத்திற்கு பின்பு கடந்த 4 ஆண்டுகளாக பொருளாதார வளர்ச்சி என்பது 7 சதவீத அளவை தொடவில்லை. மாறாக கார்ப்பரேட் நிறுவனங்கள் தான் பலன் அடைந்திருக்கின்றன. 10 ஆண்டுகளில் 19 எய்ம்ஸ் மருத்துவமனைகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று அறிவித்துள்ள நிதியமைச்சர், தமிழ்நாட்டில் மதுரையில் பிரதமர் அடிக்கல் நாட்டிய எய்ம்ஸ் மருத்துவமனை பற்றி மூச்சு விடவில்லை. ஒட்டு மொத்தமாக இடைக்கால நிதி நிலை அறிக்கை 10 ஆண்டு கால பா.ஜ.க. அரசின் தோல்வியை பிரதிபலிப்பதாகத் தான் இருக்கிறது.



**கே.பாலகிருஷ்ணன்** (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர்): இந்தியா வரலாறு காணாத வளர்ச்சியடைந்து விட்டது போல வெற்று முழக்கங்களையும், வாய்ச்சவடால்களையும் தவிர இடைக்கால பட்ஜெட்டில் எதுவும் இல்லை. புதிதாக எந்த முன்வைப்புகளும், திட்டங்களும் இல்லாத நிலையில் கடந்த காலத்தைப் போலவே பெருமுதலாளிகளுக்கும், அந்நிய மூலதனங்களுக்கும் அள்ளிக் கொடுக்கும் கொள்கை தொடரும் என்பதே இதன் பொருள். ஒட்டுமொத்தத்தில் ஏழை, எளிய, நடுத்தர, சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் யாருக்கும் எந்த உதவியும் செய்ய மறுத்தும், அவர்களின் தலையில் சுமைகளை ஏற்றி, வாழ்வாதாரத்தை பறித்து வயிற்றில் அடித்துவிட்டு சாதனை பட்ஜெட் என்று தம்பட்டம் அடித்துள்ளனர்.



**இரா.முத்தரசன்** (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர்): ஐக்கிய விவசாயிகள் முன்னணியும், ஒன்றிய தொழிற்சங்கங்களும் ஒருங்கிணைந்து தொடர் போராட்டங்களை நடத்தி வரும் நிலையிலும், அதன் கோரிக்கைகளை பரிசீலனைக்கும் எடுத்துக் கொள்ளாத நிதி நிலை அறிக்கை ஒன்றிய அரசின் எதேச்சதிகார கார்ப்பரேட் ஆதரவு கொள்கையை உயர்த்தி பிடிக்கிறது. நாட்டின் செல்வ உற்பத்தியின் உயிர் நாடியான உழைக்கும் மக்களின் உணர்வுகளை கருத்தில் கொள்ளாத நிதி நிலை அறிக்கை, ராமர் கோயிலையும், அதனை சுற்றி கட்டமைக்கப்படும் அரசியல் வியூகத்தையும் வார்த்தை ஜாலங்களில் கட்டமைத்துள்ளது. இடைக்கால நிதிநிலை அறிக்கை வழக்கம் போல் ஏழை, எளிய, உழைக்கும் மக்களுக்கும், சிறு, குறு நடுத்தர தொழில்களுக்கும் பெருத்த ஏமாற்றம் அளிப்பதாக அமைந்துள்ளது.

### பா.ஜ.க. அரசின் மோசமான சாதனை

# ஒன்றிய அரசின் இடைக்கால பட்ஜெட்:

## சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் அறிக்கை!

லக்னோ, பிப்.3-

ஒன்றிய பா.ஜ.க. அரசின் மோசமான சாதனைகளின் எதிரொலிதான் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைக்கால பட்ஜெட் என்று சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

‘10 ஆண்டுகளாக மக்கள் விரோத பட்ஜெட்டுகளை தாக்கல் செய்து மோசமான சாதனையை பா.ஜனதா அரசு உருவாக்கி இருக்கிறது.

இந்த சாதனையை முறியடிக்க முடியாது. ஏனெனில் நேர்மறையான அரசுஅமையும் நேரம் வந்து விட்டது. இதுதான் பா.ஜனதாவின் கடைசி பட்ஜெட்’ என சமாஜ்வாடி தலைவர் அகிலேஷ் யாதவ், கூறியுள்ளார்.



மத்திய பிரதேச முன்னாள் முதல்மந்திரி கமல்நாத் கூறுகையில், ‘பிரதமர் மோடி வாக்களித்திருந்த ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்பு குறித்து நிதி மந்திரி அறிவிப்பு வெளியிடுவார் என நம்பியிருந்தோம். ஆனால் அது குறித்து எதுவும் இல்லை. அப்படியானால் 10 ஆண்டுகளில் 20 கோடி வேலை வாய்ப்பு என்ற இலக்கு எட்டப்பட்டு விட்டதா?’ எனவும் அவர் வினா எழுப்பியுள்ளார்.

# வணிகர்களின் எதிர்பார்ப்புகளை பொய்த்துப் போகச் செய்த பட்ஜெட்!

## ஒன்றிய நிதிநிலை அறிக்கைக்கு - வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கண்டனம்!

சென்னை, பிப்.3-

ஒன்றிய அரசின் இடைக்கால பட்ஜெட்டில், வணிகர்களின் எதிர்பார்ப்பு பொய்த்துப்போனது என்று வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு பொதுச்செயலாளர் கோவிந்தராஜுலு வெளியிட்ட அறிக்கை: நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னதாக அறிவிக்க இருந்த ஒன்றிய அரசின் பட்ஜெட் மீது அகில இந்திய அளவில் குறிப்பாக, வணிகர்கள் மிகப்பெரும் எதிர்பார்ப்புகளோடு காத்திருந்தார்கள்.

உதாரணமாக ஒரே நாடு ஒரே வரி, ஒரே தேர்தல் என்ற பிரதமரின் ஒற்றை மந்திர முழக்கத்தின் அடிப்படையில், ஜி.எஸ்.டி வரி விதிப்பில் மாதாந்திர வருவாய் ஏரத்தாழ 1.73 லட்சம் கோடியை தொட்டிருக்கின்ற நிலையில், ஜி.எஸ்.டி வரியில் உள்ள பல நிலைகளை ஒருங்கிணைத்து ஒரே வரி அறிவிப்பு வெளிவரும் என்கிற மிகப்பெரும் எதிர்பார்ப்பு வணிகர்களிடம் இருந்து வந்தது. ஜி.எஸ்.டி வரியில் உள்ள மொத்த குளறுபடிகளையும் இந்த பட்ஜெட் அறிவிப்பு களைந்திடுவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையை நிதி அமைச்சரின் இன்றைய பட்ஜெட் அறிவிப்பு வணிகர்களின் எதிர்பார்ப்புகளை பொய்த்து போகச் செய்திருக்கிறது.

எவ்வித மாற்றமும் இன்றி நேர்முக, மறைமுக வருவாயை அப்படியோ இருந்த நிலையிலேயே அறிவித்திருப்பதும் ஏற்கத்தக்கதாக இல்லை. குறிப்பாக, தனிநபர் வருமான வரி உச்சவரம்பு 10 லட்சம் ரூபாய் வரை விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டிருப்பது, நடுத்தர மக்களிடையே மிகப்பெரும் அதிருப்தியை உருவாக்கி இருக்கிறது.



காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் வளாக மக்கள் நல்லுறவு மையக் கூட்டரங்கில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், நடைபெற்ற அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் 92 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.21,62,832/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், ஒன்றிய குழுத்தலைவர்கள் மலர்க்கொடி குமார், ஆர்.கே.தேவேந்திரன், மாவட்ட ஊராட்சி குழுத் துணைத் தலைவர் நித்தியா சுகுமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் இரா.மலர்விழி ஆகியோர் உள்ளனர்.

# குழந்தை இராமர் சிரிக்கிறார்!




தியாகராயர் நகரில் திடீர்ப் பிள்ளையார்
அன்று பால்குடித்தார்!
தொழில் நுட்பம் வளர்ந்திருக்கிறது
கையில் வில்லும் அம்புமாக
அயோத்தியில் இப்போது
குழந்தை இராமர் சிரிக்கிறார்!

பள்ளித் தலம் அனைத்தும்
கோயில் செய்குவோம் என்றார் பாரதி!
1992, டிசம்பர் 6 இல்
இடிக்கப்பட்டது பாபர் மசூதி
இப்போது இராமர் கோயில்!

தொடரப் போகும் பட்டியலில்
வாரணாசி ஞானவாபி
மதுரா ஷாகி ஈத்கா மசூதிகள்
இருப்பதாகச் சொல்கிறார்கள்!

நெருங்கிக் கொண்டிருக்கிறது தேர்தல்!
நவீனத் தொழில் நுட்ப
நச்சுக் கழிவுகளைக் கொட்ட
மக்கள் தலைகளைப்
பங்கு போடத் தொடங்கிவிட்டார்கள்!

தேர்தலில்
வேட்பாளர்களுக்கு இடையே
போட்டி இல்லை!
ஏனெனில்
வாக்குறுதிகளை, தேர்தல் அறிக்கைகளை
வேட்பாளர்கள் தருவதில்லை.
கட்சிகளுக்கு இடையே கூட
போட்டி இல்லை!
ஏனெனில்
தேர்தல் நேரத்தில் கூட்டணி,
கட்சிகளைக் கடந்தது.



ம.ரா.

எனினும் தேர்தலை
மதங்களின் போட்டியாக இல்லாமல்
கொள்கைகளின் போட்டியாக
மாற்றத் தொடங்கி இருக்கிறார்
தமிழ்நாடு முதலமைச்சர்!

ஆட்சி அதிகார அமிர்தம் வேண்டி
மக்களைக் கடைகிறார்கள்!
அளவுக்கு மீறினால்
அமிர்தமும் நஞ்சாகாதா?

இராமரின் மூதாதையரைத் தேடி
திருவரங்கம் வருகிறவர்கள்
பக்தியில் சாதி ஆதிக்கம் அழிய
சமத்துவபுரம் உருவாக்க நினைத்த

இராமாநுசரையும்
எண்ணிப் பார்க்க வேண்டாமா?

ஜனநாயகத்தின்
கண்களைக் கட்டிவிட்டு
கருநாடகக் கல்லில்
மைசூர் சிற்பியின் கற்பனையில்
அயோத்தியில்
ராம் லாலா எனப்படும்
குழந்தை ராமருக்குக்
கண்திறந்திருக்கிறார்கள்!

நோபல் பரிசு பெற்ற
நம்மூர் வெங்கி ராமகிருஷ்ணன்
சொல்கிறார்.
மரபணுவில் சிதைவுதான்
முதுமைக்கும் இறப்புக்கும் காரணமாம்.
மக்கள் சிந்தனை மரபணுக்களில்
செயற்கைச் சிதைவுகள்!

கை, கால் உறுப்புகளின்
சேர்க்கை மட்டும் இல்லை
மனிதன்
மனதின் உருவம்!

மனம்
உணர்வும் அறிவும் கலந்த மயக்கம்!
நிகழ்வுகளைச் சொற்களால்
காலத்தோடு பிணைத்து
நினைவுகள் ஆக்குவது
பாவனையின் விவரிப்பு!

தன் அறிவை அறிவதே மனித நோக்கம்!
அறிவின் அசைவே பிரபஞ்சம்

பக்தியும் யோகமும் மட்டும்
மார்க்கம் இல்லை!
ஞானம் மார்க்கமாக வேண்டும்!

மனம்தான் மனிதன்
மனதின் போக்கை அறிவதே
ஞான மார்க்கம்!

புராணப் புதைகுழிகளைக்
கண்டுபிடித்து
நவீனப்படுத்துவது இல்லை
ஞான மார்க்கம்!

ஞானம்
மக்களின் மன மகிழ்ச்சி!
ஈசுவர அல்லா தேரே நாம்

அயோத்தியில் தசரதனிடம்
பாலராமனை அனுப்பும்படி

விசுவாமித்திரர் கேட்கிறார்
மன வருத்தத்தில் தசரதன்!
கலக்கத்தில் இராமன்!
கலக்கத்திற்குக் காரணம் கேட்கிறார்
விசுவாமித்திரர்.

இராமர் சொல்வதாக
யோக வாசிஷ்டம் எனும்
மகா ராமாயணம் சொல்கிறது.
உலக அறிவு ஏற்பட்டதால்
ஒரு பெரிய சந்தேகம்;
தொடர்ச்சியாக வாழ்வில் விரக்தி.
நம் ஆசைகளுக்கும் ஓர் அளவில்லை.
ஓர் ஆசை தீரும்முன்
நம் மனது
மற்றொன்றைப் பற்றி நிற்கிறது!
நாம் படும் சந்தோஷங்களே
நமது தீவினைக்குக் காரணங்கள்!
சந்தோஷப்படும்படியாக
பிரபஞ்சத்தில் என்ன இருக்கிறது?
கேட்டவர் இராமர்!

“பல நூறாண்டு காத்திருப்புக்குப் பின்
துறவு, தவம், தியாகம் முடிந்து
அயோத்திக்கு இராமர் வந்திருப்பதாகவும்
ஆயிரம் ஆண்டுகள் கடந்தும்
மக்கள் இந்நாளை
மனதில் வைத்திருப்பர்” என்றும்
பிரதமர் மக்களுக்கு
அருள் வார்த்தை சொல்லியிருக்கிறார்.

இப்போது
பீகார் நிதிஷ் குமார்
நிலையற்ற மாண்புமிகுவைக் காக்க
நிலைத்திருக்க வேண்டிய
ஜனநாயக மாண்புகளை
மலிவுப் பதிப்பாக்கி இருக்கிறார்!
ஆயிரம் ஐநூறு
பண மதிப்பிழப்பு போல
மதிப்பிழக்கச் செய்கிறார்கள்
ஜனநாயகத்தை!

மக்கள் தலைவர்கள்
உலவிய நாட்டில் பதவி மோகிகள்!

ஊடக வெளிச்சத்திலும்
சத்தத்திலும்
உண்மைகளை மறைக்கிறார்கள்!
அதனால்
ஊடகங்களிலும் இப்போது
குழந்தை இராமர் சிரிக்கிறார்!

**நன்றி: கணையாழி**
**பிப்.2024**

டெல்டா மாவட்டங்களில் பயிரிடப்பட்ட சம்பா பயிர்களைக் காத்திட

# மேட்டூர் அணையிலிருந்து இன்று முதல் தண்ணீர் திறப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, பிப். 3-

டெல்டா மாவட்டங்களில் பயிரிடப்பட்ட சம்பா பயிர்களைக் காத்திட மேட்டூர் அணையிலிருந்து இன்று (3.2.2024) முதல் இரண்டு டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

நடப்பு ஆண்டில் வடகிழக்குப் பருவ மழைப்பொழிவு குறைவாகப் பெய்த காரணத்தாலும், காவிரி நதி நீர்ப் பற்றாக்குறையாலும், டெல்டா மாவட்டங்களில் பயிரிடப்பட்ட சம்பா பயிர்கள் பாதிக்கப்பட்டு வருவதால் மேட்டூர் அணையிலிருந்து நீர் திறந்து விடக் கோரி விவசாயப் பெருமக்களிடமிருந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை கிடைக்கப் பெற்றதன் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் சம்பா நெற்பயிரின் நிலையினை அறிந்திட தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில், கிராம அளவில்

30 குழுக்கள் அமைக்கப்பட்டு, 298 கிராமங்களில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த குழுக்களின் அறிக்கையின் அடிப்படையில், திருவாரூர் மாவட்டத்தில் 4,715 ஏக்கரும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 18,059 ஏக்கரும், என மொத்தம் 22,774 ஏக்கர் சம்பா நெற்பயிர்கள் பாசன நீர்ப்பற்றாக்குறையால் பாதிக்கப்படும் என அறியப்பட்டுள்ளது.

எனவே, விவசாயப் பெருமக்களின் நலன் கருதி நெற்பயிரினைக் காத்திட, மேட்டூர் அணையிலிருந்து இரண்டு டி.எம்.சி. தண்ணீரை 3.02.2024 முதல் திறந்துவிட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். எனவே, விவசாயப் பெருமக்கள் இப்பாசன நீரினை சிக்கனமாகப் பயன்படுத்தி சம்பா நெற்பயிரைப் பாதுகாத்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூட்டுறவுத் துறையின் சார்பில்

# 26 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமண ஆணைகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

சென்னை, பிப்.3-

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், நேற்று (2.2.2024) சென்னை, தலைமைச் செயலகத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் 26 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனம் ஆணைகளை வழங்கினார்.

கூட்டுறவுத் துறையில் பல்வேறு பதவிகளில் பணி புரிந்து இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தகுதி பெற்ற 26 நபர்களுக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணிகளின் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார். அடிப்படையில் 26 நபர்களுக்கு வழங்கப்படுகிறது. இப்பணியிடம் தொகுதி 4-இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட பணியிடங்களாகும். இப்பணியிடத்திற்கான சம்பள விகிதம் நிலை-8 (ரூ.19,500-71,900) ஆகும்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசும் போது தெரிவித்ததாவது :

கூட்டுறவுத்துறையில் கடந்த காலங்களில் பணியாற்றி வந்த குடும்பங்களைச் சார்தோர் பணியில் இருந்த காலகட்டங்களில் அவர்கள் இயற்கை எய்தியிருந்தால் அந்த குடும்பத்திற்கான இழப்புகள், குடும்பத்தலைவர் களை இழந்த நிலையில் பொருளாதார நெருக்கடியில் சிக்க நேரிடும் என்ற அடிப்படையில் தான் அரசின் சார்பில் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி ஆணைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் கூட்டுறவுத்துறையில் கடந்த காலங்களில் பணிக்காலங்களில் இயற்கை எய்தியவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவு அளிக்கின்ற வகையில் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு கல்வித்தகுதிக்கு ஏற்றவாறு பணியினை வழங்குவது என முடிவெடுத்து அதன் அடிப்படையில் இன்றைய தினம் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களின் ஆலோசனையின்படி, இன்னும் சொல்லப்போனால் இந்த பணி ஆணையை கூட அவர்களுடைய தலைமையில், அவர்களுடைய கரங்களால் வழங்கப்பட இருந்தது. ஆனால், வெளிநாட்டுப் பயணம், நிதி நிலைக் கூட்டம், சட்டமன்ற தொடர் கூட்டம் தொடர்ந்து நாடாளுமன்ற தேர்தலுக்கான அறிவிப்பு வராலாம் என்ற சூழ்நிலையில் தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்கள் அந்தந்த துறைகளில் இருக்கக்கூடிய பணிகளை முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையில், இன்று இந்த 26 குடுமங்களின் வாரிசுதாரர்களுக்கு அவர்களுடைய கல்வித்தகுதிக்கு ஏற்றவாறு பணி நியமன ஆணை வழங்கப்படுகிறது.

இன்று பணி ஆணைகளைப் பெறுகின்ற வாரிதாரர்கள், தங்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் எப்படி இந்தத் துறையின் முன்னேற்றத்திற்காக தங்களை அர்ப்பணித்து பாடுபட்டார்களோ, அதைப் போல நீங்களும் இந்தத் துறையின் வளர்ச்சிக்கும், அதே நேரத்தில் உங்களுடைய குடும்பத்தின் வளர்ச்சிக்கும் நல்லவர்களாக இருந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நல்லநேரத்தில் உங்களை எல்லாம் அன்போடு வாழ்த்தி, உங்களுக்கெல்லாம் பணி நியமன ஆணைகளை வழங்க வாய்ப்பினை வழங்கிய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். கே.கோபால், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் டாக்டர் என்.சுப்பையன் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஏற்றுமதி வழிமுறைகளும், சட்டதிட்டங்களும் குறித்த பயிற்சி!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, பிப்.3-

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன வளாகத்தில், ஏற்றுமதி இறக்குமதி வழிமுறைகளையும், சட்டதிட்டங்களையும் குறித்த பயிற்சி வரும் 13.02.2024 முதல் 15.02.2024 தேதி வரை காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் ஏற்றுமதி சந்தையின் தேவை, கொள்முதலுக்கான வாய்ப்புக்கள், ஏற்றுமதி இறக்குமதி சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்கள், வங்கி நடைமுறைகள், அந்நிய செலாவணியின் மாற்று விகிதங்கள், காப்பீடு குறித்த தகவல்கள், ஏற்றுமதி-இறக்குமதி விதிமுறைகள் மற்றும் ஆவணங்கள், போன்றவை பயிற்றுவிக்கப்படும். மேலும், இப்பயிற்சியில் ஏற்றுமதியாளர்களுக்கான ஊக்க உதவிகள் பற்றியும் அவைகளை பெறும் முறைகளை பற்றியும் ஆலோசனைகளும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் பற்றியும் விளக்கப்படும்.

ஏற்றுமதி சார்ந்த தொழில் துவங்க விரும்பும் அல்லது தற்போது உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்ய விரும்பும் 18 வயது நிரம்பிய 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைவரும் சேரலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் WWW.EDITN.IN என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்:

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத் தாங்கல், சென்னை - 600 032. 44-22252081/22252082, 8668102600 / 86681 00181 / 7010143022. அரசு சான்றிதழ் வழங்கப்படும். முன்பதிவு அவசியம் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம், கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் க.அரிகிருஷ்ணன் உடல் நலம் குன்றி வீட்டில் சிகிச்சை பெற்றுவருகிறார். அவரது இல்லத்திற்கு தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணி நூல் அமைச்சர் ஆர்.காந்தி நேரில் சென்று நலம் விசாரித்தார். உடன் திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிகேசன் உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில்

# உதகை தீட்டுக்கல்லில் - மாவட்ட கால்நடை பண்ணையில் ஆய்வு!

## அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மேற்கொண்டார்!

நீலகிரி, பிப். 3 -

நீலகிரி மாவட்டம், உதகை தீட்டுக்கல் மாவட்ட கால்நடை பண்ணையின் செயல்பாடுகள் குறித்து, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச் சந்திரன் முன்னிலையில், மீன்வளம் மினவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

நீலகிரி மாவட்டம், உதகை தீட்டுக்கல் மாவட்ட கால்நடை பண்ணையில் பொலி காளைப் பிரிவு, உறைவிந்து உற்பத்தி பிரிவு, தரக்கட்டுபாடு பிரிவு, விவசாயப் பிரிவு ஆகிய பிரிவுகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராபரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் (01.02.2024) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் கிராம பொருளாதாரம் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் கால்நடைத்துறைக்காக பல்வேறு அறிவிப்புகளை அறிவித்து செயல் படுத்தி வருகிறார்கள். கடந்த 09.03.2023 அன்று மாவட்ட கால்நடை பண்ணையில் 47.50 கோடி ரூபாய் செலவில் மூன்று ஆண்டுகளில் 7.5 இலட்சம் பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்ய ஏதுவாக அமைக்கப்பட்டுள்ள பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து உற்பத்தி நிலையத்தை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். இதன் மூலம் கிடேரி கன்றுகளின் பிறப்பு விகிதத்தை அதிகரிக்க அதிநவீன தொழில்நுட்பம் மூலம் பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்தினை உற்பத்தி செய்து அதனைக் கொண்டு கால்நடைகளுக்கு கருவூட்டல் செய்வதன் மூலம்

சுமார் 90 சதவிகிதத்திற்கு மேல் கிடேரி கன்றுகள் பிறப்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது

இந்நிலையத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மூலமாக பசு மற்றும் எருமை இனங்களுக்கு உறைவிந்து குச்சி மூலம் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக 50 சதவிகிதம் காளைக் கன்றுகள் மற்றும் 50 சதவிகிதம் கிடேரி கன்றுகள் பிறப் பதற்கு வழி வகுக்கிறது. இந்நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து குச்சிகளை கொண்டு, பசுக்களுக்கு கருவூட்டல் செய்வதன் மூலம் அதிக எண்ணிகைகளான கிடேரி கன்றுகள் பிறப்பதற்கு வழி வகுப்பதுடன், அதிக அளவில் கறவை பசுக்களை பால் உற்பத்திக்கு கொண்டு வந்து, பால் உற்பத்தியை பெருக்கிடவும். விவசாயி களின் வருமானத்தை இரட்டிப்பாக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இப்பண்ணையில் தரமிக்க உறைவிந்து குச்சி களை உயர்தர

ஆரோக்கியமான ஜெரிச்சி மற்றும் சாஹிவால் இளங்களைச் சார்ந்த 123 பொலிகாளைகளிலிருந்து பெறும் விந்துவைக் கொண்டு தயாரித்து பசு இனத்தில் செயற்கை கருவூட்டல் செய்து அவற்றின் தரத்தை மேம்படுத்தி, விவசாயிகளை பயன்பெற செய்வதாகும். இப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, பண்ணையில் பொலிகாளைப் பிரிவு, உறைவிந்து உற்பத்தி பிரிவு, தரக்கட்டுபாடு பிரிவு, விவசாயப் பிரிவு ஆகிய பிரிவுகள் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

அதேபோல இப்பண்ணையிலேயே மாட்டுத்தீவனங்கள் தயாரித்து, நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் விவசாமிகளுக்கு குறைந்த விலையில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது. மானாவாரி நிலங்களில் புற்களை வளர்க்க மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலமாகவும், தன்னார்வ தொண்டு நிறுவனத்தார் மூலமாகவும் நடைமுறைப்படுத்தி சிறப்பான முறையில் செயல்படுத்தப்படவுள்ளது என மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அலுவலகத்தில் வண்ண மீன்கள் காட்சிகள் அருங்காட்சியகம் உள்ளிட்டவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.



மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி,வார்டு–151, லட்சுமி நகர் விரிவு நலச்சங்க விளையாட்டுத் திடலில் 151வது வார்டு மாமன்ற உறுப்பினர் ச.சங்கர் கணேஷ் தலைமையில் ஏரியா சபை கூட்டத்தில் காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றி பொது மக்களிடமிருந்து புகார் மனுக்களைப் பெற்று மனுக்களுக்கு தீர்வு காணப்படும் என்று உறுதி அளித்தார்.உடன் வட்டக் கழக செயலாளர் அ.மோசஸ்,மாவட்ட பிரதிநிதி சேகர்,வட்ட கழக நிர்வாகிகள் செ. இராமையா,வி. பன்னீர் செல்வம்,கி.குமார்,ப. சரவணன்,ஏரியா சபை உறுப்பினர்கள் துரை,ஏ. செந்தில் குமார், பிரசாந்த்,செ.ராஜா, லோ.சங்கர் கணேஷ்,ப. மணிகண்டன், செயற்குழு உறுப்பினர்கள் க.சேகர், அ.மதனகோபால், L. சீனிவாசன் உள்ளிட்ட கழக தோழர்கள், பொது நலச் சங்க நிர்வாகிகள், பொது மக்கள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.ஏ. காஜாமொய்தீன்

**பிப்ரவரி 3 (2018)**



**மாணவப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணியாற்றியவர்.**

**ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் திருவல்லிக்கேணி பகுதி பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்து, மாநில சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு துணைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர், தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பாராட்டுகளைப் பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# இயக்கத்தின் மூலமே! ஆணிவேர் ஆலமே! எங்கள் அண்ணா!...



அலைதவழ் ஆழி முத்தே!
அழகுவான் கதிரே! ஓங்கு
மலைதவழ் அருவி ஊற்றே!
மணக்கின்ற முல்லைக் காடே!
கலைதவழ் திருவே! காஞ்சி
கருதந்த தமிழ்க்கற் கண்டே!
சிலைதவழ் பொலிவின் வண்ணம்
சிறக்கின்ற எங்கள் கோவே!

தித்திக்கும் தேனே! எங்கள்
திராவிடத் திருவி ளக்கே!
எத்திக்கும் புகழ்ம ணக்கும்
இனிப்புறு தமிழே!
எந்தக்கத்தி க்கும் அறுப டாத
கார்முகில் நிலவே! கொண்ட
உத்திக்கும் எழுத்தால் பேச்சால்
உயரத்தின் இமயம் நீயே!

உருவத்தில் குள்ளம்! ஆனால்
உள்ளத்தால் ஆழி வெள்ளம்!
திருக்குறள் முழுங்கு வாயில்
தீந்தமிழ் துள்ளும்! பாகாய்
உருகிடு நடையால் நெஞ்சை
உவமைகள் அள்ளும்! தாய்மை
வருடிடும் விரல்கை போன்றே
வார்த்தைகள் அறிவில் வெல்லும்!

ஊனத்தால் செவிடு, நொண்டி,
ஊன்பேடு, குருடு, கூனல்,
ஈனத்தால் நொந்தார்! என்றன்
இனத்தாரோ கிடந்தார் வீழ்ந்தே!
வானத்தால் வறட்சி நீங்கி
வையகம் தழைத்தல் போன்றே
மானத்தால் தமிழ ரானார்!
மீட்பரே அண்ணா உன்னால்!

மொழிப்போரில் களங்கள் கண்டு
மூத்தவர் பெரியார் தம்மை
விழிபோலப் பார்வை கொண்டாய்!
விதையென மண்ணில் வீழ்ந்தாய்!
வழிதோன்று மாந்தர் யார்க்கும்
விரிநிழல் 'தரு'போல் நின்றாய்!
குழிவீழ்ந்த தமிழர் கையில்
கோல் தந்தே தூக்கி விட்டாய்!

வடவரின் ஆதிக் கத்தை
வீழ்த்தினாய்! வீரங் காட்டி
இடக்கரை வால்ந றுக்கி
இந்திக்கு முடிவு கண்டாய்!
மடக்கினாய் நுனிநின் நாவின்
மடைவெள்ள ஆங்கி லத்தால்!
குடத்திடை இருந்த நாட்டைக்
குன்றேற்றி வைத்தாய் அண்ணா!

தண்டமிழ் மண்ம ணக்கத்
தமிழ்நாடு பெயரைச் சூட்டித்
திண்டோளார் குதிக்க வைத்தாய்!
சீர்திருத் தமணம் காதல்
கொண்டார்க்குச் சட்டம் செய்தே
கொள்கையில் பெரியார் நிற்க
உண்டாக்கி வைத்தாய்! தொண்டு
உலகெல்லாம் பரவச் செய்தாய்!

விலையற்ற மாணிக் கம்நீ!
விடியல்நீ! உயர்வை எண்ணி
உலகத்த மிழ்மா நாட்டால்
ஓங்குற்றுப் புகழ்ப டைத்தாய்!
நிலத்திடைக் கொள்கை காக்க
நீகண்ட தங்கத் தம்பி
கலைஞரின் தோள்கள் காய்க்க
கழகத்தைச் சுமக்க விட்டாய்!

நீவிட்ட பணிதொ டர்ந்து
நீணிலம் பொன்னாய் மாற
ஏவினார் மறவர் கூட்ட
இயக்கத்தை நடத்தும் மூச்சால்
கூவிற்றார் ஆரி யத்தைக்
குழிதோண்டிப் புதைப்ப தற்கே!
ஆவிதம் உடலி ருக்க
அண்ணன்த ளபதி வெல்வார்!

இற்றுவாழ் மொழிக்கு லத்தில்
இந்தியால் தமிழ்மொ ழிக்குப்
புற்றுநோய் படரா வண்ணம்
பூவிழி இமையால் காத்தாய்!
புற்றுநோய் உன்னைப் பற்றப்
புதைகுழி உறக்கம் கொண்டாய்!
வற்றாத கங்கைக் கண்ணீர்
வீழ்ச்சியில் தோற்றோம் அண்ணா!

கவிஞர்
**தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்



# உன் இலட்சியம் காப்போம்! அண்ணா!!



புவிப்பரப்பில் சிறந்தவனே! சின்னக் காஞ்சி
புரத்தினிலே பிறந்தவனே! தமிழாய் பொங்கிச்
செவிப்பரப்பில் புகுந்தவனே! உலக மக்கள்
சிரம்வணங்கத்தகுந்தவனே!உரிமைவேட்கைத்
தவிப்படங்கத் “தமிழ்நாடு" பெயரைச் சூட்டித்
தலைநிமிர வைத்தவனே! சங்க காலக்
கவிப்புலவர் வரிகளைப்போல் தமிழர் நெஞ்சில்
கல்வெட்டாய்நிலைத்தவனே! எங்கள்அண்ணா!

மாடமணி மாளிகையின் மலர்மெத் தைமேல்
மஞ்சம்போட் டிருந்தஅர சியலை, நித்தம்
பாடுபடும் ஏழையர்தம் குடிசைக் குள்ளும்
பவனிவரச் செய்தவனே! பரண்மேல் வைத்த
ஏடுகளில் துயில்கொண்ட தமிழைத் தட்டி
எழுப்பியஎம் கோமானே! எட்டுத் திக்கும்
மேடைகளில் எதிரொலித்த விடியற் பாட்டே!
“மேதை" எனும் சொல்லுக்கோர் எடுத்துக் காட்டே!

“பங்காரு, நடராசர்" தமிழன் னைக்குப்
படையலிட்ட அறிவமுதே! பாசத் தேனே!
பொங்கார்வத் தம்பியர்க்குக் களத்தில் கூட
“பொறுமை"சொல்லித் தந்தவனே! மகர யாழில்
சங்கீதம் மீட்டதுபோல், சொற்பெ ருக்கில்
சந்தமழை பொழிந்தவனே! சரித்தி ரத்தின்
சிங்காத னத்தில்எம்மை அமர வைத்துச்
சென்றவன்நீ! ஆரியத்தை வென்ற வன்நீ!

வம்புக்கு வந்தாரைத் தன்வா தத்தால்
வசமாக்கிப் போட்டவனே! வடஆ திக்கக்
கம்பிக்குள் சிறைப்பட்ட மொழியை, நாட்டைக்
காப்பாற்றி மீட்டவனே! தினம்வி ழித்துத்
தம்பிக்கு நீவரைந்த கடித மெல்லாம்
தமிழுக்குக் கருவூலம் அன்றோ! எங்கள்
நம்பிக்கைச் சூரியன்நீ உதிக்கா விட்டால்
நாடேது? தமிழர்க்கு நாதி ஏது?

மாற்றலரை யும்கவர்ந்த மகத்து வம்நீ!
மனிதத்தின் புனிதம்நீ! வளம்குன் றாமல்
ஊற்றெடுத்த கற்பனையின் உறைவி டம்நீ!
உவமைகளின் கொள்ளிடம்நீ! புகழ்ப்பொன் னேட்டில்
காற்றடித்துச் சாயாத இமய மும்நீ!
காவியம்நீ! ஓவியம்நீ! காலத் தாயின்
நோற்றவத்தால் வந்துதித்த தவம கன்நீ!
நூற்றுக்கோர் ஊழிக்குப் பிறப்ப வன்நீ!

அண்ணா!நின் உரையில், தீ பரவச் செய்தாய்!
ஆயினும்அத் “தீ"பிறரை எரிக்க வில்லை!
கண்ணீரில் எழுதுகோல் நனைத்தே, ஈரக்
கதைபுனைந்தாய்! எனினும்அது கரிக்க வில்லை!
மண்மீதில் இறுதிஊர் வலம்உ னக்கு!
மழலைகளும் அன்றைக்குச் சிரிக்க வில்லை!
விண்ணே! நீ புதைந்துவிட்டாய் எனும்துன் பத்தை
விழுங்கிவிட்டோம்! அதுஇன்னும் செரிக்க வில்லை!

கடலலையின் தாலாட்டில், உப்புக் காற்றில்
கண்ணுறங்கும் அண்ணா!நின் நினைவு நாளில்,
உடன்பிறப்புக் கூட்டத்தை விழித்துப் பார்நீ!
உணர்வலைகள் ததும்பியெழும் உற்சா கம்பார்!
அடல்மறவர்! ஆம், உன்றன் ஆசி பெற்ற
அன்புமகன் “தளபதி" இந் நாட்டுக் காகக்
கொடைவழங்கும் உழைப்பைப்பார்! ஓய்வில் லாத
கொள்கைநெடும் பயணத்தின் வெற்றி யைப்பார்!

நீதிபதி ஆசனத்தில் அமர்ந்தி ருக்கும்
“நேற்றையநம் சுப்பனைப்பார்! குப்ப னை"ப்பார்!
சாதிமதப் பேதமின்றிச் சண்டை யின்றிச்
“சமத்துவ புரங்கள்"எங்கும் மலர்வ தைப்பார்!
ஆதிமொழித் தமிழேஎம் உயிர் மூச் சென்றே
அறிவித்த ஆக்கம்பார்! தொன்று தொட்ட
வேதனையின் இருளனைத்தும் விலகி, இன்று
விவசாயி விழியில், ஒளி வெள்ளத் தைப்பார்!

ஆண்டவனுக் கருகில்போய் கருவ றைக்குள்
அர்ச்சகராய் நிற்கும்அந்த இளைஞ னைப்பார்!
பூண்டெழுந்த சபதத்தால் சிற்றூர்தொறும்
பொறியாளர், மருத்துவர்தம் “புதுமு கம்"பார்!
ஆண்டுதொறும், திங்கள்தொறும், கிழமைதொறும்
அல்ல!அல்ல! நாள்தொறும்ஓர் வளர்ச்சி யைப்பார்!
மீண்டும்இந்தத் தமிழகத்தைச் சுற்றிப் பார்நீ!
மீட்சிபெற்ற தாயகத்தின் மாட்சி யைப்பார்!

“படியரிசித் திட்டம்"என் றுரைத்தாய்! இன்று
பசியாறி மனம்குளிரும் மக்க ளைப்பார்!
“குடல்கருகும் வறுமைஒலி" என்றாய்! ஏழைக்
குடிசைக்குள் தொழிலாளர் உவகை நீ பார்!
வடபுலம்தான் வாழ்கிறதென் றுரைத்தாய்! தெற்கும்
வளர்கிறதே! இன்றந்த வனப்பை நீ பார்!
“கடமையிலே தவறாத முதல்வர்" என்றே
கைகூப்பி எழும், மக்கள் களிப்பி னைப்பார்!

“ஒப்பாரும் மிக்காரும் இலாத வண்ணம்
உயர்வாய்நீ! “ என்றுரைத்த உன்ன தம்பார்!
“அப்பாவைப் போலபிடி வாதக் காரன்!
அரிமாவை நிகர்இளைஞன்! “ என்றுன் நாவால்
எப்போதோ நீயுரைத்த இளைஞ னைப்பார்!
இன்றைக்கு “மாண்புமிகு முதல்வர்" ஆகித்
தப்பாமல் தொண்டுசெய்யும் உறுதி யைப்பார்!
“தலைவன்"என்றே நிமிர்ந்துநிற்கும் தகுதி யைப்பார்!

மடிமீதில் தூக்கிவைத்துக் கொஞ்சும் போதில்
“வருங்காலம் உன்காலம்" எனும்நின் வாழ்த்துப்
படியேபே ராற்றலினால் ஆட்சி செய்யும்
பக்குவம்பார்! “ தளபதி"நற் பண்பி னைப்பார்!
இடிதாங்கி போல்நின்றே இயக்கம் காக்கும்
இனமானத் தொண்டர்களின் இன்மு கம்பார்!
கொடிதாங்கி இளைஞரணி அணிவ குக்கும்
கூட்டத்தில் இராணுவத்தின் பேரெ ழில்பார்!

கயலோடு, புலி,வில்லைக் கொடியில் தாங்கிக்
“கலைஞர்" அன்று புறப்பட்ட பயணம், இன்று
செயலாக்கம் பெற்றதண்ணா! “சமூக நீதி"
திசைதோறும் ஊடுருவும் செய்தி கேட்டே
உயிர், உள்ளம் சிலிர்த்திடநீ எம்மோ டில்லை!
உன்மீதில் ஆணை!இதோ கலைஞர் பிள்ளை!
புயல்வேகத் “தளபதி"யின் சேனை! ஆவி
போயினும்உன் இலட்சியத்தைக் காப்போம்! அண்ணா!

கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**



---

மாநில மகளிரணி முன்னாள் புரவலர்

## திருமதி நூர்ஜகான் பேகம் பேரன்

### ஜிமன் முகமது இஸ்மாயில் 4 ஆம் ஆண்டு நினைவு நாள்!



சென்னை, பிப். 3 -

மாநில மகளிரணிப் புரவலராக இருந்தவரும், கழக மூத்த முன்னோடியுமான மறைந்த திருமதி நூர்ஜகான் பேகம் அவர்களது பேரனும் செய்தி மக்கள் தொடர்புத்துறை உதவி இயக்குநர் திருமதி ரோசன் குர்சீதா பேகத்தின் மகனுமான ஜிமன் முகமது இஸ்மாயில் (வயது 28) 5.2.2020 அன்று உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார்.

திருச்சியில் ஜமால் முகமது கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதுகலை பட்டப்படிப்பில் எம்.பி.ஏ. பட்டம் பெற்றவர் இவர்.

கழகத்தின் மீதும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மீதும், கழகத் தலைவர் தளபதி அவர்கள் மீதும் மிகுந்த அன்பு நிறைந்தவராக விளங்கியவர். அன்னாரின் நினைவு நாளான 5.2.2024 திங்கட்கிழமை அன்று அவரது இல்லத்தில், அன்னார் நினைவு போற்றும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

கழக முன்னணியினர் பலரும் இதில் கலந்து கொள்கின்றனர்.

---

## பேராற்றல் பெற்ற பெருநூல் - திருக்குறள்!



'**தி**ருவள்ளுவர் நாள்' விடுமுறை விட மாநில அரசு மனமுவந்து ஒப்புக் கொண்டுள்ளது; மகிழ்ச்சிக்கு உரிய செய்தி. தமிழ்ப் புலவர் பெருமக்களுள் 'வான் புகழ்' கொண்டவன் வள்ளுவன்; வாழ்க்கை விளக்கம் செய்த பெருமகன்; என்றும் நின்று நிலைக்கும் பேராற்றல் பெற்றது அவருடைய பெருநூல் - திருக்குறள். எவ்வழிச் செல்வோரையும் தன் வழி ஈர்த்து ஒன்றுபடுத்தும் இயல்புடையது அந்நூல். உலகப் பொதுமறை என்று அதனைக் கூறினால் அது மிகைமொழியாகாது.

- **பேரறிஞர் அண்ணா**

---

கடலுக்கு மேலேயும் கடலுக்கு அடியிலும்

## பாலங்கள் கட்ட வேண்டியது அவசியம்!

### மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மு.சண்முகம் வலியுறுத்தல்!



புதுடெல்லி,பிப்.

மாநிலங்களவையில் 02.02.2024 அன்று கழக உறுப்பினரும் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளருமான மு.சண்முகம் நேரமில்லா நேரத்தில் (ஜீரோ ஹவர்) பேசும் பொழுது தனுஷ்கோடி இலங்கை தலைமன்னார் இடையே கடலுக்கு அடியிலும், கடலுக்கு மேலேயும் பாலங்கள் கட்ட வேண்டியது அவசியமானது என வலியுறுத்தினார்.

மாநிலங்களவையில் தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு. சண்முகம் பேசியது வருமாறு:

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாகக் கடல் வழியாகத் தகவல் தொடர்புகளை இலங்கைக்கும், இந்திய முக்கிய நிலப்பகுதிக்கும் (மெயின் லேண்ட்) ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்காக பல ஆய்வுகள் (சர்வேக்கள்) நடத்தப்பட்டு உள்ளன. திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. மன்னார் வளைகுடாவையும், பாக் ஜலசந்தியையும் இணைப்பதற்காக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்காலத்தில் சேது சமுத்திரம் கால்வாய்த் திட்டம் உருவாக்கப்பட்டு, அனைத்து செயல்பாட்டுக்கான அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டன. பாலம் கட்டும் பணியும் கூட ஐக்கிய முற்போக்கு ஆட்சிக் காலத்திலேயே தொடங்கப்பட்டது. துரதிஷ்டவசமாக பா.ஜ.க. ஆட்சி ஏற்பட்டவுடனே அப்பணி தடைப்பட்டது. அதைத் தொடர்ந்து அது கைவிடப்பட்டது.

எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த ஆண்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் சேது சமுத்திரத் திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்காக கோரிக்கை விடுத்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்தார். ஆனால் ஒன்றிய அரசு அதற்கு எந்த பதிலும் அளிக்கவில்லை.

இந்திய கடலோர முனையான தனுஷ்கோடியிலிருந்து இலங்கையின் தலைமன்னாருக்குக் இடையே வெறும் 25 கி.மீ. தூரம் தான் உள்ளது. அதை எளிதாக ஒரு பாலத்தின் மூலம் இணைக்க முடியும். அது துறைமுக இணைப்புகளையும் மக்கள் நடமாட்டத்தையும் மேம்படுத்தும். மத்திய அரசு அத்திட்டம் குறித்து பரிசீலிப்பதற்காக 1955 ஆம் ஆண்டு டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அக்குழு அது பற்றி பரிசீலித்து அது செயல்படக் கூடியதும், சரியானதும் என்றும் கண்டறிந்தது. எனினும் கடலுக்குள் கால்வாய் வெட்டுவதற்குப் பதிலாக கடலுக்கு மேலாக அல்லது கீழாக பாலம் கட்டுவதை முனைப்பாக வலியுறுத்தியது.

எனவே நான் ஒன்றிய அரசை குறிப்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களையும் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்களையும் கடலுக்கு மேலாக ஒரு பாலம் கட்டுவது குறித்தும் அல்லது தனுஷ்கோடிக்கும், இலங்கையின் தலைமன்னாருக்கு இடையே கடலுக்கு அடியில் ஒரு பாலம் கட்டுவது குறித்தும், பொருளாதார மற்றும் வர்த்தகத் தொடர்புகளை மேம்படுத்தவும் இந்தியா இலங்கை இடையே மக்கள் சென்று வருவதற்கும் வழிவகை செய்யும்வண்ணம் கட்டுவது குறித்தும் பரிசீலிக்கும்படி வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு மாநிலங்களவையில் நேரமில்லா நேரத்தில் கழக உறுப்பினர் மு.சண்முகம் அவர்கள் வலியுறுத்திப் பேசினார்.

---

பேரறிஞர் அண்ணா 55 வது நினைவு நாள் அமைதிப் பேரணி!

## சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

### பகுதிச் செயலாளர் வி.இ.மதியழகன் எம்.சி. அறிக்கை!

சென்னை, பிப். 3

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி, 15 வது மண்டலக் குழுத் தலைவர் வி.இ.மதியழகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் தந்த காவியத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு நாளை ஒட்டி, கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன் தலைமையில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் இன்று (3.2.2024 சனிக்கிழமை) காலை 7 மணியளவில், சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

இந்த அமைதிப் பேரணி வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகில் இருந்து புறப்பட்டு அண்ணா சதுக்கத்தை சென்றடையும்.

ஆகவே இந்த அமைதிப் பேரணியில் சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதிக்குட்பட்ட, மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி,வட்டக் கழக அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி கழகச் செயலாளர் வி.இ.மதியழகன் எம்.சி. தெரிவித்துள்ளார்.

---

## ஒன்றிய இடைக்கால பட்ஜெட் ஒட்டுமொத்த ஏமாற்றமே!

### 'தினகரன்' நாளேடு தலையங்கம்!

சென்னை, பிப்.3-

ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்துள்ள இடைக்கால பட்ஜெட் ஒட்டு மொத்த ஏமாற்றமே என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அது வருமாறு:-

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் பட்ஜெட்டை தாக்கல் செய்தார். ஆனால், அதில் வெறுமைகளே அணிவகுத்து நிற்கிறது என்பது பொருளாதார ஆய்வாளர்களின் பெருந்த ஆதங்கம். நாட்டு மக்கள் நன்றாக வாழ்கின்றனர். எதிர்காலத்திற்காக நன்றாக சம்பாதிக்கின்றனர். அவர்களின் சராசரி வருமானமும் 50 சதவீதம் உயர்ந்துள்ளது. வரி செலுத்துவோரின் எண்ணிக்கை 8 கோடிக்கு மேல் அதிகரித்துள்ளது என்று ஒன்றிய நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். இப்படி வரி செலுத்தும் சாமானியர்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினர், சம்பளம் வாங்கும் வரி செலுத்துவோர், தங்களுக்கு வருமான வரிக்கான நிவாரணம் ஏதாவது கிடைக்குமா என்று எதிர்பார்த்தனர். ஆனால், இதுபோன்றவர்களுக்கு எந்த விதமான வரிச்சலுகையும் அறிவிக்கப்படவில்லை. இந்தவகையில் அமைச்சரின் கூற்றுப்படி எடுத்துக் கொண்டால் முதற்கட்டமாக 8 கோடி மக்களை இந்த பட்ஜெட் ஏமாற்றியுள்ளது.



இந்தியாவின் முதுகெலும்பாக இருப்பது விவசாயம். விவசாயத்தைப் பொறுத்தவரை கடன் தள்ளுபடி என்பது விவசாயிகளின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால், அதற்கான எந்த அறிவிப்பும் பட்ஜெட்டில் இடம் பெறவில்லை. இதற்கு மாறாக உணவு மானியம் 77 ஆயிரம் கோடி, உர மானியம் 25 ஆயிரம் கோடி என்று மொத்தம் 31 ஆயிரம் கோடி குறைக்கப்பட்டுள்ளது. உணவு மானியம் குறைக்கப்பட்டுள்ளது, ரேஷனில் வழங்கப்படும் உணவு தானியங்களை நம்பி வாழும் ஏழை, எளிய நடுத்தர குடும்பங்களை வெகுவாக பாதிக்கும். உரத்திற்கான மானியம் குறைக்கப்பட்டுள்ளதால் அதன் விலையேற்றம் அதிகரிக்கும் என்பது இயல்பான ஒன்று. இந்த இரண்டும் ஏழைகள் மற்றும் விவசாயிகளை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

அதேபோல் இந்தியாவில் விவசாயத்திற்கு அடுத்த பெரும் தொழிலாக இருப்பது ஜவுளி உற் பத்தி சார்ந்த நெசவுத்தொழில். தற்போதைய ஒன் றிய அரசு, கடந்த 10 ஆண்டுகளில் ஜவுளித் தொழிலில் மேம்பாடு என்பதை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை. இதனால் ஏற்றுமதி என்பது 4 சதவீதமாக குறைந்து நலிந்து நிற்கிறது ஜவுளித்தொழில். அதே நேரத்தில் சீனாவில் இருந்து இறக்குமதியை தாராளப்படுத்தியுள்ளது. குறிப்பாக ஜி.எஸ்.டி. என்பது ஜவுளித் தொழிலை அதல பாதாளத்திற்கு கொண்டு சென்றுள்ளது. இடைக்கால பட்ஜெட்டிலும் ஜவுளித்துறைக்கான அறிவிப்புகள் எதுவும் வெளியிடப்படவில்லை.

மிக முக்கியமாக மக்களின் அத்தியாவசிய தேவைகளான எரிபொருட்களின் விலை குறைப்பு குறித்த எந்த அறிவிப்பும் இல்லை. கச்சா எண்ணெய் விலை பெருமளவில் குறைத்துள்ள நிலையில் பெட்ரோல், டீசல் விலை குறைப்பு, வீட்டு உபயோக சிலிண்டர் விலை குறைப்பு போன்ற அறிவிப்புகளை இந்த பட்ஜெட்டில் எதிர்பார்த்து காத்திருந்தனர் ஒட்டுமொத்த மக்கள். ஆனால், ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.

இந்த வகையில் கற்றார், கல்லார், கழனியில் உழல்வோர், சிறுதொழில் செய்வோர், பெரும் முதலீடுதாரர்கள் என்று ஒட்டுமொத்த மக்களுக்கும் பெருத்த ஏமாற்றம் என்பதை மட்டுமே பரிசாக தந்துள்ளது இடைக்கால பட்ஜெட். இது மட்டுமன்றி பட்ஜெட்டில் வெளியிடப்பட்டுள்ள பல்வேறு புதிய அறிவிப்புகள், பல மாநிலங்களில் சிறப் பான நடைமுறையில் இருப்பவை. உதாரணமாக கர்ப்பப்பை வாய் புற்று நோயை ஒழிப்பதற்கான தடுப்பூசித்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் தமிழகத்தின் பல மாவட்டங்களில் சிறப்பான செயல்பாட்டில் உள்ளது என்பதையும் கோடிட்டு காட்ட வேண்டியதும் அவசியம் என்றால் அது மிகையல்ல.

இவ்வாறு 'தினகரன்' தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

---

## அஞ்ஞானத்தை விரட்டும் அறிவுப்படை!



**சா**க்ரடீசோ கிரேக்க நாட்டுக் கீர்த்தி வாய்ந்தவராக மட்டும் நின்று விடவில்லை - உலக உத்தமர் என்று பெயரெடுத்தார் - கிரேக்க நாட்டிலே மட்டுமல்ல; அவர் படை திரட்டியது. உலகெங்கும் படை திரட்டினார் - அவர் வாழ்நாள் முழுவதும் மட்டுமல்ல - இன்றும் அவருடைய படை, பணி புரிந்துதான் வருகிறது - அறிவுப்படை - அஞ்ஞானத்தை விரட்டும் படை.

- **பேரறிஞர் அண்ணா**

---

கடலூர் மேற்கு மாவட்டம்

## பண்ருட்டி வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

கடலூர் மேற்கு மாவட்டம், பண்ருட்டி வடக்கு ஒன்றியச் செயலாளர் இராதாகிருஷ்ணன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ஆர். சந்தோஷ்குமார்**, (2வது தெரு, சிறுவத்தூர், பண்ருட்டி 607106, கடலூர் மாவட்டம்) அவர்கள் பண்ருட்டி வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்: 2-2-2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---



கழக துணை அமைப்புச்செயலாளர் ப.தாயகம்கவியின் மாமியார் மறைந்த திருமதி. சந்திராம்மாள் (வயது 89) உடலுக்கு திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், மாநில மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர்.எ.வ.வே. கம்பன், வந்தவாசிஎஸ்.அம்பேத் குமார்,எம்.எல்.ஏ. செங்கம் மு.பெ.கிரி, எம்.எல்.ஏ.செய்யாறு ஒ.ஜோதி,எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழகத் தோழர்களும் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.



சென்னை, வண்ணாரப்பேட்டை பகுதியைச் சார்ந்த தனசேகர் (வயது 57) என்பவர் மூளைச்சாவு அடைந்து, அவரது உடலுறுப்புகள் தானமாக பெறப்பட்டதைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவரது திருவுடலுக்கு அரசு மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி, அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பாலாஜி, தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் மரு. கோபாலகிருஷ்ணன், துணை முதல்வர் மரு.ஜென்னத் சுகுந்தா, நிலைய மருத்துவ அலுவலர் மரு.வனிதா மலர் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.

கழகப் பொதுச்செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் தலைமையில் இன்று நடைபெறும்

# அண்ணா நினைவுநாள் அமைதிப் பேரணியில் - ஆயிரக்கணக்கில் பங்கேற்பீர்!

## காஞ்சி வடக்கு மாவட்டக் கழகத்தினருக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், பிப்.3-

சென்னையில் கழகப் பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் தலைமையில் இன்று (3.2.2024) நடைபெறும் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55-வது நினைவு நாள் அமைதிப் பேரணியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து கழகத்தினர் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து பங்கேற்கும்படி காஞ்சி புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: -

காஞ்சி தந்த காவியத் தலைவர் - உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டு கொலு வீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் - தமிழ் மொழி உயர்வுக்காகவும் - தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும் - தமிழ்நாடு வளம் பெற வேண்டும் என்பதற்காகவும், தனது வாழ்நாள் எல்லாம் ஓயாது உழைத்த உத்தமர். 'கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு' எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்ற தம்பிமார் பெரும்படையைக் கண்டு நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன்,

சுயமரியாதைச் சுடரொளி - சொக்க வைக்கும் பேச்சாளர் - எழுத்து வேந்தர். தென்னகத்தின் தனிப்பெரும் அரசியல் தலைவர் "தென்னாட்டு காந்தி" - "இந்நாட்டு இங்கர்சால்" - என்று அனைவராலும் போற்றிப் பாராட்டிப் புகழப்படும் அரசியல் மாமேதை - பேரறிஞர் அண்ணா அவர்களின் 55-வது நினைவு நாளையொட்டி, பேரறிஞர் அண்ணா பிறந்த மாவட்டமான காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளை ஊராட்சி கிளைக்கழக அலுவலகங்களிலும் கழக கொடிக்கம்பங் களின் முன்பு, கழகத்தின் அனைவரின் இல்லங்களின் முன்பும் இன்று (3.2.2024 - சனிக்கிழமை) காலையிலேயே பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுரு வப் படத்தை அலங்கரித்து வைத்து மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



கழகத்தினர் கழக நிர்வாகிகள் அனைவரும் அஞ்சலி செலுத்திய பின்னர் சென்னையில் அண்ணா சாலையில் பேரறிஞர் அண்ணா சிலை அருகில் இருந்து கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. உள்ளிட்ட கழக முன்னணியினர் பங்கேற்கும் அண்ணா நினைவு நாள் அமைதிப் பேரணியில் பங்கேற்க வரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் உள்ளிட்ட கழகத்தினர் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து அண்ணா நினைவு நாள் அமைதிப் பேரணியில் பங்கேற்று சிறப்பிக்கும்படி அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், 22-01-2024 அன்று மாலை 5 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனவரி21 அன்று சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் எழுச்சியுரையாற்றும்போது தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளான பொறுப்பு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ மாநகர / பகுதி/ ஒன்றிய/ நகர/ பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட "நிர்வாகிகள் சந்திப்பு" கீழ்க்கண்ட அட்டவணைப்படி. சென்னை, அண்ணா சாலை, "அண்ணா அறிவாலயத்தில்" நடைபெறும்.

| தேதி | நேரம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 03.02.2024 | காலை 10.00 மணி | வடசென்னை, தென் சென்னை |
| | மாலை 3.00 மணி | மத்திய சென்னை, திருபெரும்புதூர் |
| 04.02.2024 | காலை 9.00 மணி | திருவண்ணாமலை, ஆரணி |
| | மாலை 3.00 மணி | பெரம்பலூர், திருச்சி |
| 05.02.2024 | காலை 9.00 மணி | கரூர், திண்டுக்கல் |
| | மாலை 3.00 மணி | காஞ்சிபுரம், புதுச்சேரி |

குறிப்பு: அந்தந்த நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பாகவே அரங்கத்திற்குள் வந்து அமர்ந்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் கடந்த 21.01.2024 அன்று சேலத்தில் நடைபெற்ற *எழுச்சிமிகு இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் திருவள்ளூர் மத்திய மாவட்டம் சார்பில் பங்குபெற்ற இளைஞர்களுக்கு இரண்டாம் கட்டமாக பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி தோழர்கள் 126 பேருக்கு நினைவுப் பரிசாக கைக்கடிகாரத்தை முன்னாள் அமைச்சர் மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. வழங்கினார் உடன் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், பொதுகுழு உறுப்பினர் வி.குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ் குமார், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி ராஜேஷ், ஒன்றிய நிர்வாகிகள் அண்ணாமலை, ஏ.ஜனார்த்தன், ஏ.ஆர்.பாஸ்கர், வி.பி.பிரகாஷ், வயலை பிரபாகரன், ஏ.ஜி.ரவி, டி.குமரேசன், மு.ராஜாராம், டி. திருமலைராஜ், பரிமேலழகன், ஞானமூர்த்தி உள்பட பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி. முருகேசன்

### பிப்ரவரி 3 (2003)



இளம்வயதிலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, காஞ்சிபுரம் ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து 7 முறை பொறுப்பேற்று, முப்பது ஆண்டுகள் கழகப் பணியாற்றியவர்.

மேல் ஒட்டிவாக்கம் ஊராட்சிமன்றத் தலைவராகவும், துணைத் தலைவராகவும் – காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1989, 1996 ஆகிய இருமுறை காஞ்சிபுரம் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு காஞ்சிபுரத்தில் திருப்பாற்கடல் குடிநீர் திட்டத்தையும் – பாலாற்றின் குறுக்கே உயர் மட்ட பாலங்களையும் கழக ஆட்சியில் கொண்டு வந்தார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

முன்னாள் முதலமைச்சர்

# ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் திருவுருவச் சிலைக்கு மாலை!

## அமைச்சர் செஞ்சிமஸ்தான் மரியாதை செலுத்தினார்!

திண்டிவனம், பிப். 3 -

தமிழ்நாட்டின் முதல் முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரின் 130 வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

இதை முன்னிட்டு விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் ஓமந்தூர் ஊராட்சியில் அவரது மணி மண்டபத்தில் உள்ள ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரின் திருவுருவச் சிலைக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபக் சிவாச், கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் மணி பட்டத்தில் வைக்கப்பட்டிருந்த ஓமந்தூர் ரெட்டியார் அவர்களின் புகைப்படத்தை பார்வையிட்ட அமைச்சர் செஞ்சி மஸ்தான் அங்கு வைக்கப்பட்டிருந்த பார்வையாளர் புத்தகத்தில் கையெழுத்துத் திட்டார்.

எம்.ஆர். ஆறுமுகம் தலைமையில்

# ஆம்பூரில் பேரறிஞர் அண்ணா 55-வது நினைவு நாள் ஊர்வலம்!

ஆம்பூர், பிப். 3 -

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் நகர தி.மு.க சார்பில் அமைதி ஊர்வலம், இன்று (03.02.2024) காலை 10 மணியளவில் பழைய தி.முக. அலுவலகத்திலிருந்து நகர கழகச் செயலாளர் எம்.ஆர்.ஆறுமுகம் தலைமையில் புறப்படும். பொதுக்குழு உறுப்பினர் எம்.ஏ.ஆர். ஷபிர் அகமது, செயற்குழு உறுப்பினர் சாம்செல்ல பாண்டியன், நகர கழக நிர்வாகிகள் எஸ். தேவராஜ், எஸ்.ரபீக் அஹமது, ஏ.தாஸ், ஏ.ஜெயபாரதி, நசீர் அகமது, ஜி.வில்வநாதன், எம்.நரேஷ், ஆர்.சந்திப்ராஜ், டாக்டர் சங்கர், எம்.சரண்ராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். ஊர்வலத்தை நகர மன்ற தலைவர் பி.ஏஜாஸ் அகமத் துவக்கவுள்ளார். பேரறிஞர் அண்ணா சிலைக்கு ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், ஆர்.எஸ்.ஆனந்தன் ஆகியோர் மாலை அணிவிக்கின்றனர்.

இந்நிகழ்வில் மாவட்டக் கழக, நகர கழக, கிளை கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், தலைமை கழக பேச்சாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.எஸ். முருகேசன்

### பிப்ரவரி 3 (2004)



மாணவப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணியாற்றியவர்.

கூத்தைப்பார் ஊராட்சி மன்றத் தலைவராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1977ல் திருவெறும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



சென்னை, சேப்பாக்கம், பொதுப்பணித் துறை வளாகத்தில் உள்ள பொதுப்பணித் துறை சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் அலுவலகக் கட்டடத்தை நேற்று (02.02.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, பொதுப்பணித்துறை அரசு முதன்மைச்செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன் மற்றும் பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் கே.ஆயிரத்தரசு இராஜசேகரன் மற்றும் பொதுப்பணித்துறை அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை, சேப்பாக்கம், பொதுப்பணித் துறை வளாகத்தில் உள்ள பொதுப்பணித் துறை சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் அலுவலகக் கட்டடத்தை நேற்று (02.02.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, பொதுப்பணித்துறை அரசு முதன்மைச்செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், மற்றும் பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் கே.ஆயிரத்தரசு இராஜசேகரன் மற்றும் பொதுப்பணித்துறை அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### போதுமான நிதியை ஒன்றிய அரசு விடுவித்து

# சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தை வேகப்படுத்த வேண்டும்!

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, பிப்.3-

சென்னை மெட்ரோ இரயில் நிலை 2 திட்டத்தை வேக படுத்திட போதுமான நிதியை ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டும் என மாநிலங்களவையில் இரா. கிரிராஜன் எம்.பி., வலியுறுத்தினார்.



இதுகுறித்து அவர் கூறியதாவது :

சென்னை மெட்ரோ இரயில் நிலை2 திட்டம், பெருநகர சென்னை மண்டலத்தில் பொது போக்குவரத்தை எளிதாக்குவதற்கான ஒரு முக்கியமான போக்குவரத்து உள்கட்டமைப்பு முயற்சியாகும். போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், அதிக மக்கள் தொகையின் தேவைகளை நிறைவு செய்யவும் 118.9 கி.மீ. நீளத்திற்கு மூன்று வழித்தடங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ரூ.61,843 கோடி மதிப்பிலான சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டத்தை சென்னையில் 2 ஆண்டுகளுக்கு முன்பு செயல்படுத்த தமிழக அரசுக்கு மத்திய அரசு அனுமதி அளித்தது. மத்திய அரசு விரைவில் ஒப்புதல் அளிக்கும் என எதிர்பார்த்து தமிழக அரசு நிதியுதவி அளித்து வருகிறது. பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் ஒப்புதல் இன்னும் நிலுவையில் இருப்பதால் மத்திய அரசு ஒரு ரூபாய் கூட செலுத்தவில்லை.

இந்த ஆண்டு பட்ஜெட்டில் இந்த திட்டத்திற்காக தமிழக அரசு ரூ.10,000 கோடி ஒதுக்கியுள்ளது. ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமை (JICA) 52.01 கிலோ மீட்டர் நீளமுள்ள இரண்டாம் கட்டத்தை நிர்மாணிக்க ரூ.20,196 கோடி கடனுதவியை வழங்க முன் வந்துள்ளது, மீதமுள்ள 66.89 கி.மீ. நீளத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) கொள்கை அளவில் நிதியளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழக அரசு உறுதியாக இருந்தாலும், மத்திய அரசு அதற்கு இணையான நிதியை விடுவிக்கத் தவறினால், இருதரப்பு / பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து கடனுதவி உரிய காலத்தில் விடுவிக்கப்படாவிட்டால், இத்திட்டத்திற்கு சிக்கல் ஏற்படும்.

எனவே, மத்திய அரசின் பொருளாதார மதிப்பீட்டுக் குழுவின் ஒப்புதலை விரைந்து வழங்கவும், அதற்கு இணையான நிதியை மத்திய அரசிடமிருந்து பெறவும், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறப்படும் கடனுதவியை உரிய நேரத்தில் வழங்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு இரா.கிரிராஜன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

### ஒன்றிய அரசின் இடைக்கால பட்ஜெட்

# பொறுப்பும் தொலைநோக்கும் இல்லாத ஒன்று!

## ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கண்டனம்!

சென்னை, பிப். 3-

ஒன்றிய அரசு தாக்கல் செய்த இடைக்கால நிதி நிலை அறிக்கை பொறுப்பும் தொலைநோக்கும் இல்லாத ஒன்று என ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது:-

ஒன்றிய அரசின் இடைக்கால பட்ஜெட்டில் பொறுப்புக்கூறல் மற்றும் தொலை நோக்குப் பார்வை ஆகிய இரண்டையும் காணவில்லை. கடந்த பத்து ஆண்டுகளில் அளித்த வாக்குறுதிகளில் எத்தனை நிறைவேற்றப்பட்டுள்ளன என்ற விவரமும் இல்லை. பொருளாதாரம் மற்றும் நிர்வாகத்தில் ஆளும் பா.ஜ அரசின் அணுகுமுறை பணக்காரர்களுக்கு ஆதரவாக உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் வாக்குறுதியளிக்கப்பட்ட இரண்டு கோடி பேருக்கு வேலைகள் பற்றியோ அல்லது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவது அல்லது விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவது பற்றியோ பேசவில்லை.

இது பணக்காரர்களுக்கான அரசு. பணக்காரர்களுக்காக, பணக்காரர்களால் நடத்தப்படும் அரசு இது. உணவுப் பணவீக்கம் தற்போது 7.7 சதவீதமாக உள்ளதை குறிப்பிடவில்லை. சீனாவின் ஜிடிபி நமது ஜிடிபியை விட ஐந்தரை மடங்கு அதிகம். அவர்களின் ஆண்டு வளர்ச்சிக்கு ஏற்றவாறு மூன்று சதவிகிதம் வளர்ச்சியடைந்தால், நாம் 15 சதவிகிதம் வளர வேண்டும். எனவே ஜிடிபி பற்றி பேச வேண்டாம். வளர்ச்சி, தனிநபர் வருமான வளர்ச்சி பற்றி பேசுங்கள். கடந்த 5 முதல் 10 ஆண்டுகளில் இந்தியா எவ்வாறு முன்னேறியுள்ளது என்பது குறித்து கடந்த மூன்று நாட்களில் அலுப்பூட்டும் வகையில் மீண்டும் மீண்டும் தற்பெருமை பேச்சுக்கள் பேசப்படுகின்றன.



10 சதவீதம் பேர் நாட்டின் செல்வத்தில் 60 சதவீதத்தை வைத்திருக்கிறார்கள். தேசிய வருமானத்தில் 57 சதவீதத்தை சம்பாதிக்கிறார்கள் என்பதையும், கடந்த 10 ஆண்டுகளில் வருமான சமத்துவமின்மை கணிசமாக விரிவடைந்துள்ளது என்பதையும் அரசு அலட்சியமாக கடந்துள்ளது. இந்த அரசு நடைமுறையில் 50 சதவீத மக்களை மறந்துவிட்டது. 10 ஆண்டுகால பா.ஜ ஆட்சியில் பொருளாதார நிலை மோசமாக உள்ளது என்பதை இந்திய மக்கள் அங்கீகரிப்பார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.




தலைமைச் செயலகத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில், நேற்று (02.02.2024) கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில், கூட்டுறவுத் துறையில் கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. கே. கோபால், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.


## தென்காசி வடக்கு மாவட்டம் தெரு முனை பிரச்சார பொதுக்கூட்டங்கள் நடைபெறும் இடங்கள்

| நாள் | ஒன்றியம்/நகர/பேரூர் | பேச்சாளர் | பகுதிகள் | |
|---|---|---|---|---|
| பிப்ரவரி 3 | சங்கரன்கோவில் தெற்கு | புகழேந்தி M.A.,EX.MLA., கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் | 3 பகுதி | அரியநாயகிபுரம்<br>திருவேட்டநல்லூர்<br>விரசிகாமணி |
| பிப்ரவரி 4 | குருவிகுளம் தெற்கு | | 3 பகுதி | குருவிகுளம்<br>கே.புதூர்<br>சம்பகுளம் |
| பிப்ரவரி 5 | சங்கரன்கோவில் நகரம் | | 3 பகுதி | வார்டு 5<br>வார்டு 14<br>வார்டு 28 |
| பிப்ரவரி 8 | சங்கரன்கோவில் வடக்கு | சேலம் சுஜாதா தலைமைக் கழக பேச்சாளர் | 3 பகுதி | கரிவலம்வந்தநல்லூர்<br>சுப்புலாபுரம்<br>மாங்குடி |
| பிப்ரவரி 9 | குருவிகுளம் மேற்கு | | 3 பகுதி | சுப்புலாபுரம்<br>மலையடிப்பட்டி<br>குலசேகரபேரி |
| பிப்ரவரி 10 | வாசுதேவநல்லூர் வடக்கு | | 3 பகுதி | விஸ்வநாதபேரி<br>ராமநாதபுரம்<br>திருமலாபுரம் |
| பிப்ரவரி 11 | குருவிகுளம் கிழக்கு | புதுக்கோட்டை விஜயா தலைமைக் கழக பேச்சாளர் | 3 பகுதி | இளையரசனேந்தல்<br>புளியங்குளம்<br>பாறைப்பட்டி |
| பிப்ரவரி 12 | மேலநீலிதநல்லூர் மேற்கு | | 3 பகுதி | கடம்பன்குளம்<br>தன்னூத்து<br>சுப்பையாபுரம் |
| பிப்ரவரி 13 | திருவேங்கடம் பேரூர் | சைதை சாதிக் கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் | 2 பகுதி | திருவேங்கடம்<br>செல்லப்பட்டி |
| பிப்ரவரி 14 | மேலநீலிதநல்லூர் கிழக்கு | | 3 பகுதி | கோ.மருதப்பபுரம்<br>ரெங்கசமுத்திரம்<br>கீழநீலிதநல்லூர் |
| பிப்ரவரி 15 | இராயகிரி பேரூர் | தூத்துக்குடி சரத்பாலா கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் | 2 பகுதி | காமராஜர் சிலை முன்பு<br>கோட்டை விநாயகர் கோவில் முன்பு |
| பிப்ரவரி 16 | வாசுதேவநல்லூர் பேரூர் | | 2 பகுதி | வார்டு 1<br>வார்டு 15 |
| பிப்ரவரி 17 | புளியங்குடி நகரம் | புகழேந்தி M.A.,EX.MLA., கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் | 3 பகுதி | வார்டு 10<br>வார்டு 17<br>வார்டு 7 |
| பிப்ரவரி 18 | மேலநீலிதநல்லூர் தெற்கு | | 3 பகுதி | தேவர்குளம்<br>மூவிருந்தாளி<br>மடத்துப்பட்டி |
| பிப்ரவரி 19 | சிவகிரி பேரூர் | கந்திலி கரிகாலன் தலைமைக் கழக பேச்சாளர் | 2 பகுதி | கலையரங்கம் முன்பு<br>கீழரதவீதி |
| பிப்ரவரி 20 | வாசுதேவநல்லூர் தெற்கு | | 3 பகுதி | வெள்ளானைக்கோட்டை<br>நகரம்<br>சங்கனாபேரி |



மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்

உயர்திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர் அவர்கள்

ஈ.ராஜா M.A.B.L.,

சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்ட கழக செயலாளர்

## தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க.

# உடன்பிறப்பே... 43

**தி.மு.க. என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த திருவாரூர் கு.தென்னன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## திருவாரூர் கு.தென்னன்

## நண்பர் என்ற தகுதியில் முதலில் நின்றவர்!




2012-ஆம் ஆண்டு, ஒரு நூல் வெளிவந்தது. அந்த நூலின் தலைப்பு **'கலைஞரின் காதலர் திருவாரூர் கு.தென்னன்'**. திருவாரூர் துரைச்செல்வம் எழுதியிருந்த, அந்த நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்கி இருந்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அதில், "எனக்கு எத்தனையோ நண்பர்கள் உண்டென்ற போதிலும், 'நண்பன்' என்ற தகுதியில் முதலில் வைத்துக் கருதப்படுபவர் எனது அருமை நண்பன் தென்னன்" எனக் குறிப்பிடுகிறார்.

கலைஞரின் நண்பர் எனில், கழகத்தினருக்கு அன்பர். கலைஞரின் பொதுவாழ்க்கை தொடங்கிய காலத்தில் இருந்தே, அவருடன் பயணிக்கத் தொடங்கிய உடன்பிறவா உடன்பிறப்புதான் திருவாரூர் கு.தென்னன்.

### விளையாட்டுத் தோழமை

கலைஞர் தனது 11-வது வயதில் தென்னனைச் சந்திக்கிறார். திருக்குவளையில் பிறந்த கலைஞர், தனது கல்விக்காக, திருவாரூர் வந்து தங்குகிறார். தென்னனின் தந்தை குப்புசாமி அவர்கள் ராசிபுரத்தில் பிறந்து, திருவாரூரில் அடைக்கலமானவர்.

திருவாரூர் கீழவீதி மானந்தியார் தெருவில் விளையாட்டுத் தோழமையாக இருவரும் அறிமுகமாக, கொள்கைத் தோழமையாக உறுதிகொண்டார்கள். கலைஞர் பிறப்பதற்கு ஓர் ஆண்டுக்கு முன்பு, 1923-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4- ஆம் தேதி பிறந்தவர் தென்னன்.

மூத்தவர் என்றாலும், வயது வித்தியாசம் பார்க்காத பால்ய நண்பர்கள். இருவரது நட்புக்கும் பல கதைகள் ஆதாரமாக உள்ளன என்றாலும், கழக உறவே அவர்களை காலத்தின் அடையாளமாக மாற்றுகிறது.

### கழகத் தோழமை

தென்னன் அவர்களின் இயற்பெயர் தெட்சணாமூர்த்தி. பகுத்தறிவு, சுயமரியாதை இயக்கத்தினர் தமிழ்ப் பெயர்களைச் சூட்டிக்கொண்ட காலத்தில், தனது நண்பர் தெட்சணாமூர்த்தியின் பெயரை 'தென்னன்' என மாற்றி வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். தென்னனும், நண்பர் என கலைஞருடன் நெருக்கம் கொண்டிருந்தாலும், கழக உடன்பிறப்பாக கலைஞரைத் தலைவராகவே வரித்துக் கொண்டவர்.

தென்னன் அவர்களின் நட்பு, கழகப் பணியாகக் கலந்திருப்பதை கலைஞர் பலமுறை எழுதி இருக்கிறார். கடந்த ஆண்டு தென்னன் அவர்களின் நூற்றாண்டு நினைவில் கழகத் தலைவர், நமது முதலமைச்சர் அவர்கள் நினைவுகூர்ந்தார்.

"முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளை எனப்படும் 'முரசொலி' தொடங்கப்பட்டபோது அதன் நிதிப் பொறுப்பைக் கவனிக்கக் கூடியவராகவும், அச்சிடப்பட்ட இதழ்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியை கலைஞருடன் இணைந்து மேற்கொள்ளக் கூடியவராகவும் இருந்தவர் தென்னன் அவர்கள்.

1957-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் குளித்தலைத் தொகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் முதன்முதலாகப் போட்டியிட்டபோது அவரது வெற்றிக்கு அல்லும் பகலும் பாடுபட்டவர்களில் ஒருவர். தலைவர் கலைஞர் அவர்களின் ஒவ்வொரு வெற்றியிலும் துணை நின்று அகம் மகிழ்ந்த நண்பர். கழகம் சந்தித்த நெருக்கடிகளின் போதெல்லாம் தலைவர் கலைஞருக்கு நிழலாகத் துணை நின்ற தோழர். பலன் கருதா நட்புக்குரியவர் தென்னன்" எனப் போற்றிப் புகழ்ந்தார்.

அந்தப் போற்றுதலுக்கு முழு உரிமையுடையவர் தென்னன். கழகத்தில் அவரது உழைப்பும், தலைவரோடு நெருக்கமாக இருந்தாலும், அதைத் தனது நலனுக்காகப் பயன்படுத்த முனையாத பண்பும் தென்னனிடம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள். கலைஞரின் பெயருக்குக் கடுகளவும் சேதம் வரக்கூடாது என கங்கணம் கட்டிக் கொண்டவர் தென்னன்.

### கட்சிப் பணிகள்

திருவாரூர் கழகத்தில் நகரச் செயலாளராகவும் கழகத்தினரின் அன்பைப் பெற்றிருந்தார் கலைஞரின் நண்பர். 1972 ஆம் ஆண்டுகளில் கழகம் பிளவைச் சந்தித்தபோது, கீழத் தஞ்சைப் பகுதியில் கழகத்துக்கு சேதம் வராமல் காத்து நின்றதில் தென்னனின் பங்கு அதிகம். திருவாரூர், நாகப்பட்டினம், வேதாரண்யம் எனச் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 'அரைவேக்காடு' என நாடகம் எழுதி அரங்கேற்றி, கொள்கைப் பிரச்சாரம் நிகழ்த்தியவர்.

> **அகவை முதிர்ந்த நிலையிலும், கழகத்தினரை அரவணைத்துப் போற்றி, இளையவர்களுடன் இணக்கமாக கட்சிப் பணியாற்றிய பண்பாளர் தென்னன்.**

கூட்டுறவுத் துறை பணிகளில் அதிக ஆர்வம் கொண்டவர் தென்னன். திருவாரூர் பால் வழங்கும் சங்கம், கமலாம்பிகா வங்கித் தலைவர் எனப் பொறுப்புகளை ஏற்றுத் திறம்பட நிர்வகித்தார். அதன்மூலம் அந்தப் பகுதி விவசாயிகளின் முன்னேற்றத்துக்குக் காரணமாக இருந்திருக்கிறார். கூட்டுறவுத் துறை உழைப்புக்காக ஒன்றிய அரசு வழங்கிய விருதினைப் பெற்று வந்தவர் தென்னன்.

### மெய்க்காவலர் தென்னன்

கல்லக்குடிப் போராட்டத்தில் கைதாகி இரண்டு மாதங்கள் கலைஞருடன் சிறையில் இருந்தவர் தென்னன். திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஐந்தாயிரம் கழகத்தினரைக் கொண்டு திராவிட அரசாங்கத்தை நிறுவி இருந்தார் கலைஞர். அங்கு பிரதம மந்திரியாக இருந்த கலைஞரின் மெய்க்காவலராக இருந்தவர், அவரது உற்ற நண்பரான தென்னன்தான்.

மிசா நெருக்கடியின்போது ஓராண்டு சிறை வாழ்க்கையையும் அனுபவித்தவர் தென்னன். கலைஞரின் பால்ய நண்பர் என்பதால், கலைஞர் தனது சொத்துகளைத் தென்னனிடம் கொடுத்து வைத்திருப்பார் எனக் காவல்துறை அலசி எடுத்தார்களாம். ஆனால், எவ்வளவு துழாவியும் தென்னன் வீட்டில் கருப்புச் சிவப்புக் கரை வேட்டியும், கலைஞர் எழுதிய புத்தகங்களையும் தவிர, வேறு கண்டுபிடிக்க ஒன்றுமில்லை. கலைஞரும் அப்படி எதுவும் கொடுத்திருக்கவில்லை. இதே விசாரணையைச் சிறையிலும் எதிர்கொண்டு மீண்டு வந்தவர் தென்னன். இரும்பு மனிதரின் நண்பரல்லவா. அந்தக் கொள்கை உறுதிக்குச் சொல்லவா வேண்டும்?

### இனிப்பான சம்பவங்கள்

எம்.எல்.சி. பதவிக்கான வேட்பாளர்கள் தேர்வின்போது, தென்னனையும் விண்ணப்பம் செய்யச் சொல்லி இருக்கிறார் கலைஞர். வேண்டாம் என மறுத்தாலும், கலைஞர் வலியுறுத்தியதால், கடிதம் அளித்திருக்கிறார் தென்னன். அப்போது கழகத்தினரும், உறவினர்களும் அவர் எம்.எல்.சி. ஆகிவிட்ட உணர்வில் இருந்துள்ளனர். ஆனால், தென்னன் கலைஞரின் நுட்பம் அறிந்தவராயிற்றே... அமைதியாக இருந்திருக்கிறார். அவர் நினைத்ததுபோலவே தென்னன் பெயர் எம்.எல்.சி. பட்டியலில் இல்லை.

அது தொடர்பான அறிவிப்பின்போது, "எம்.எல்.சி. பதவி கேட்டு பலரும் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். என் நண்பன் தென்னன்கூட கடிதம் அளித்தார். நான் தென்னனுக்குக்கூடப் பரிந்துரை செய்யவில்லை. ஆகையால், நான் சொல்லி எதுவும் நடக்காது என்பதை உணர்ந்து, கழகத்தின் பொதுக்குழு முடிவினை, அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என கலைஞர் அறிவிக்கிறார்.

அதேநேரத்தில், தென்னனே எதிர்பார்க்காத வகையில், அவரது 84-வது வயதில் திருவாரூர் நகர்மன்றத் தலைவராக்கி நட்பைப் போற்றினார் முத்தமிழறிஞர் கலைஞர். தமிழ்நாட்டிலேயே முதிய வயதில் நகர்மன்றப் பொறுப்புக்குத் தேர்வானவர் தென்னன் அவர்கள்தான். அந்தப் பொறுப்பில் இருந்தபோது, கலைஞர் திருவாரூர் தொகுதியில் போட்டியிட வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றினார் தென்னன். இப்படிக் கொள்கை உறவுடன் பல அனுபவங்களைக் கொண்டுள்ளது அவர்களது தோழமை.

### வாழ்க! வணக்கம்!

இருவரும் 'வாழ்க, வணக்கம்' போல இணைபிரியாத முழக்கம் போன்றவர்கள் என சிறுவயதிலேயே பெயர் எடுத்தவர்களாம். 'வணக்கம்' என்றால் கலைஞர், 'வாழ்க' என்றால் தென்னன். 'வாழ்க வருகிறாரே, எங்கே வணக்கத்தைக் காணவில்லை' எனக் கேட்பார்களாம்.

இப்படி நாளொரு மேனி, பொழுதொரு பிரச்சினையுமாக திருவாரூர் நகர வீதிகளில் வலம் வந்த நண்பர்கள், இருவரில் ஒருவர் மாபெரும் மக்கள் இயக்கத்தின் தலைவரானார். அந்தப் புகழில் மயங்காமலும் மங்காமலும் காத்தார் மற்றொரு நண்பர்.

அகவை முதிர்ந்த நிலையிலும், கழகத்தினரை அரவணைத்துப் போற்றி, இளையவர்களுடன் இணக்கமாக கட்சிப் பணியாற்றிய பண்பாளர் தென்னன், உடல்நலிவுற்று 2011 டிசம்பர் 15 அன்று மறைவெய்தினார். "என் நிரந்தர நண்பனை இழந்தேனே" எனக் கண்ணீர் உகுத்தார் கலைஞர்.

அந்தப் பண்பாளர் தென்னனின் நூற்றாண்டு கடந்த ஆண்டு போற்றப்பட்டது. அப்போது கழகத்தின் இன்றைய தலைவர் காலத்தால் அழியாத அந்த நட்பை, கொள்கை உறவைப் போற்றினார்.

"கொள்கை உறுதிமிக்க அவரது கழகப் பணிகளை இன்றைய தலைமுறையின் உடன்பிறப்புகள் அறிந்து பின்பற்றுவதே, தென்னன் அவர்களின் நூற்றாண்டுக்கு நாம் செய்யும் சிறப்பு. நட்பென்ற சொல்லுக்குரியவராக வரலாற்றில் என்றும் வாழ்வார் திருவாரூர் கு.தென்னன்" என்றார். தென்னனிடமிருந்து கற்பதே கலைஞருக்கு நாம் செய்யும் மரியாதை.

**...துடிக்கும்**

## வெறுப்புப் பேச்சின் விபரீதங்கள்!

பா.ஜ.க. விதைக்கும் மதவெறியினால் ஏற்படப்போகும் ஆபத்துகள், எத்தனை விபரீதமானது என்பதற்கு டெல்லியில் நடந்திருக்கிற ஒரு சம்பவம் உதாரணமாகி இருக்கிறது. காங்கிரஸ் மூத்த தலைவரான மணிசங்கர் அய்யரின் மகள் சுரண்யா, டெல்லி ஜாங்புரா பகுதியில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். அயோத்தி ராமர் கோவில் திறப்பு விழாவுக்கு இரு நாட்களுக்கு முன்பு, தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் அவர் ஒரு பதிவிட்டிருந்தார்.

"ராமர் கோவில் திறப்பு விழாவை எதிர்க்கும் வகையிலும், சிறுபான்மையினருக்கு ஆதரவாகவும் நான் உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன்" என்று சுரண்யா அந்தப் பதிவில் கூறியிருந்தார். வலதுசாரிகள் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து அவரை நெருக்கடிக்கு உள்ளாக்கினர்.

அதன் உச்சகட்டமாக டெல்லி ஜாங்புரா குடியிருப்போர் நலச்சங்கம், மணிசங்கர் அய்யர் மற்றும் அவரது மகள் சுரண்யாவுக்கு நோட்டீஸ் ஒன்றை அனுப்பியுள்ளது. 'ராமர் கோவில் குறித்த கருத்துக்காக மன்னிப்புக் கேளுங்கள், இல்லாவிட்டால், வீட்டை விட்டு வெளியேறுங்கள். வெறுப்புப் பேச்சை சகித்துக் கொள்ளும் மக்கள் இருக்கும் பகுதிக்குச் செல்லுங்கள்' என்று பகிரங்கமாக மிரட்டியிருக்கிறார்கள்.

எத்தகைய ஆபத்தை நோக்கி, பா.ஜ.க. நாட்டை இழுத்துச் செல்லும் என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது. சரி, சுரண்யா மட்டுமா ராமர் கோயில் திறப்பைக் கண்டித்தார்? பா.ஜ.க.வின் அரசியல் லாபத்துக்காக, ராமர் கோவிலைக் கட்டி முடிக்கும் முன்பே திறக்கிறார்கள், என்று 4 சங்கராச்சாரிகள் கண்டித்தார்களே? சுரண்யாவின் மீது வெறுப்பைக் கக்கும் மதவாதிகள் எவரும் சங்கராச்சாரிகளைச் சீண்டிக்கூடப் பார்க்கவில்லையே..? ஏன்..?

## :ப்ளாஷ்பேக்





சேதுராமன்

### ஊக்கப்படுத்தும் மோதிரம்!

1994 ஆம் ஆண்டு மதுரை தமுக்கம் மைதானத்தில், கழக நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அன்றைய மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் அக்கினிராசு அவர்கள் தலைமையில், நடைபெற்ற கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் பங்கேற்றார். அதிக நிதி வசூலித்துக் கொடுத்தவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், சால்வையும் மோதிரமும் அணிவித்து, எங்களைப் பாராட்டினார். தலைவரிடம் பெற்ற பாராட்டு, என் வாழ்நாளில் நடைபெற்ற மிகச் சிறந்த நிகழ்வு என்பேன்.

**-எஸ்.சேதுராமன், மாநில துணைச் செயலாளர், விவசாயத் தொழிலாளர் அணி, மதுரை.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்க ளுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தனிமைச் சிறை!

**1965 ஆம் ஆண்டு பிப்ரவரி 16 ஆம் நாள் 'முரசொலி' அலுவலகத்தில் எழுத்துப் பணிகளை முடித்துவிட்டு, வீடு திரும்பிய கலைஞர் நள்ளிரவில் கைது செய்யப்பட்டார். இந்திய பாதுகாப்புச் சட்டத்தில் நாட்டிலேயே முதன்முதலாக கைது செய்யப்பட்டிருந்த கலைஞர், 2 நாட்கள் அலைக் கழிக்கப்பட்டு பாளையங்கோட்டை, தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது அவரைச் சந்திக்கச் சென்ற அண்ணாவிடம், குடும்பத்தினரைப் பற்றிக் கேட்காமல், தருமபுரி தேர்தல் நிலவரம் எப்படி இருக்கிறது, என்று கட்சி குறித்துத்தான் கேட்டார். கலைஞரின் கழகப் பற்றை உச்சிமுகர்ந்து பாராட்டினார் அண்ணா.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 377




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 173 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 20 – சனிக்கிழமை 03 பிப்ரவரி 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 173: Thiruvalluvar Year - 2055 - Thai 20 - Saturday 03 February 2024 - Chennai 12 Pages சிறப்பிதழ்!

## தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் 9



# கழகத்தைப் பரப்பியதில் கலைஞரின் உழைப்பு முக்கியம்!

## தந்தை பெரியார்

நண்பர் திரு. கருணாநிதி அவர்களின் படத்தினைத் திறந்து வைப்பதில் எனக்கு பெரும் மகிழ்ச்சியே. சமீபத்தில் ஒரு பள்ளிக் கட்டிட திறப்பு விழாவிற்காக சென்றிருந்தேன். அந்த விழாவிற்கு அமைச்சர் கோவிந்தசாமி அவர்களும் வந்திருந்தார்கள். அந்தப் பள்ளியின் நிர்வாகிகள் நான் பேசிக் கொண்டிக் கும்போது இடையில் வந்து இரகசியமாக என் காதில் அண்ணாதுரை அவர்களின் படத்தினைத் திறந்து வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். நான், “இதில் என்ன இரகசியம் வேண்டி இருக்கிறது, அண்ணாதுரையின் படத் தினைத் திறந்து வைப்பது எனக்கு பெருமைதான்” என்று கூறி அண்ணா படத்தைத் திறந்து வைத்தேன்.



ஒருவருடைய படத்தினைத் திறப்ப தென்றால் அவரைப் பற்றி அவரது தொண்டுகளைப் பற்றி சிலவற்றைச் சொல்லவேண்டியது அவசியமும் சம்பிரதாயமும்ஆகும். **நண்பர்கருணாநிதி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள அறிவாளிகள் முன் வரிசையில் உள்ள அறிவாளி ஆவார். தி.மு.கழகம் இந்த அளவு பரவுவதற்கு அவரது முயற்சியும் அறிவும்தான் காரணமாகும். அண்ணாதுரை கழகத்தில் தலைவராக இருந்தார். அவரும் கழகத்தைப் பரப்பி னார் என்றாலும் கருணா நிதியின் உழைப்பும் முக்கியம்.** இல்லா விட்டால் கழகத்தின் செல்வாக்கு இந்த அளவு வளர்ந்து இருக்காது. இதைச் சொல்வதால் அண்ணாதுரையை நான் குறைத்துச் சொல்வதாகாது. அண்ணாதுரைக்கு பல வேலை, அவர் ஒருவராலேயே கழகத்தை இந்த அளவு பரப்பி இருக்க முடியாது. கருணாநிதி அவர்கள் அண்ணாதுரைக்கு வலது கரமாக இருந்து உதவி வந்திருக்கிறார்.

நண்பர் இளம் வழுதி அவர்கள் சொல்வது போல; **பள்ளிக் கூடத்தை விட்டதும் என்னிடம் நண்பர் கருணாநிதி நேராக வந்தார். “எனக்கு பொதுத்தொண்டு செய்ய ஆவலாக இருக்கிறது” என்று கூறினார். நானும் “என்னிடம் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். நீங்களும் இருங்கள்” என்று சொன்னேன். எனது வீட்டிலேயே இருந்தார். குடிஅரசு ஆபிசுக்குப் போய் வந்து கொண்டிருந்தார். பிறகு எழுதவும் மேடையில் பேசவும் ஆரம்பித்தார். நல்ல கருத்தாளர் ஆவார், எழுச்சியுள்ளவராவார். வரவர நல்ல கருத்து பிடிபட்டது, பிரச்சாரக் கலையும் பிடிபட்டது.**

அண்ணாதுரையாவது, கருணாநிதி யாவது; என்னைக் குறிப்பிட்டு, என் காரியத்தைக் குறிப்பிட்டு இதுவரை ஒரு சிறு குறை கூட கூறியது கிடையாது. இன்று வரைக்கும் அண்ணாதுரை ‘என் தலைவர் பெரியார்தான்’ என்று கூறுகிறார். அதே போல் கருணாநிதியும் என்னை எங்கு கண்டாலும், செல்லப்பிள்ளை மாதிரி நெருங்கி, பின் உரிமையோடு உரையாடு வார். இன்னமும் தி.மு.க.வுக்கு கருணாநிதி யின் தொண்டு பயன்படத்தக்கதாகும். அவரது தொண்டும் முயற்சியும் பிறர் கடைபிடிக்க வேண்டியதாகும். அவரது படத்தைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**(திட்டக்குடி - 12.6.1967)**

# பேரறிஞர் அண்ணாவுடன் கலைஞரின் சந்திப்பு!



**(திருவாரூரில் நடந்த மிலாது நபி விழாவில் பங்கேற்றிட பேரறிஞர் அண்ணா அவர்கள் வருகை தந்திருந்தார்.**

**இச்சந்திப்பு குறித்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எழுத்தில் காண்போம்!)**

“தம்பி, தெரியுமா செய்தி? அண்ணா திருவாரூருக்கு வரப்போகிறார், நபிகள் நாயகம் விழாவில் கலந்துகொள்ள...” என்றார் டி.என்.ராமன். இயக்கத்தைக் கட்டி வளர்த்தவர் களில் தலைசிறந்தவர் இவர்.

இந்தச் செய்தி என் செவிகளில் தேனாகப் பாய்ந் தது. ‘அண்ணா வரப்போகிறார். எனது இதயங் கவர்ந்த இலட்சியத் தலைவர் வரப்போகிறார்’ என்று என் உள்ளம் மகிழ்ச்சிப் பெருக்கால் துள்ளி யது. அப்போது நான் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டு இருந்தேன். 1938ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழகத்தில் தீவிரமாக நடந்தபோதே, நான் என்னையொத்த சிறுவர் களுக்குத் தலைமை தாங்கி இந்தி எதிர்ப்பு முழக்கங் களுடன் ஊர்வலம் நடத்தியவன். மேலும் ‘முர சொலி’ என்னும் துண்டுத்தாளை அவ்வப்போது வெளியிட்டு என் எண்ணங்களை எழுத்துக்க ளாக்கி, என் பணியைத் தொடங்கியவன்.

1940ஆம் ஆண்டில் திருவாரூரில் நடைபெற்ற நீதிக் கட்சி மாநாட்டில்கூட அண்ணாவை அருகில் இருந்து காணும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இப் போது, இயக்கத் தலைவர்களுடன் தொடர்பு நெருக் கமாகி இருந்ததால், அண்ணாவைக் கண்டு மகிழ லாம் எனப் பேராவல் கொண்டு இருந்தேன்.

‘விடுதலை’ ஏட்டில் அண்ணாவின் எழுத்துக்கள் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு இருந்தன. பின்னர், அவர் காஞ்சியில் இருந்து ‘திராவிட நாடு’ இதழைத் தொடங்கியதும் ‘இளமைப் பலி’ என்ற தலைப்புடன் ‘திராவிட நாடு’ இதழுக்கு ஒரு கட்டுரை தீட்டிஅனுப்பினேன். அதுவும் விரைவில் அண்ணா அவர்களால் வெளியிடப்பட்டது.

அண்ணாவின் இதழில் என் எழுத்துக்கள் இடம் பெற்றதும் என் உற்சாகம் கரை புரண்டது. என் எழுத்துக்களை அண்ணா அங்கீகரித்து விட்டார் அல்லவா? இந்தச் சமயத்தில்தான் அண்ணா திரு வாரூர் வரும் செய்தி தித்திப்பாக எனக்குத் தரப்பட் டது. என் இயல்பிற்கேற்றவாறு கூட்டத்துக்கான முன்னேற்பாடுகளில் நானும் முனைந்தேன். விளம்பரத்தாள்கள் விநியோகித்தல், சுவரொட்டி ஒட் டுதல், கொடி தயாரித்தல், மேடை அமைத்தல் போன்ற சிறு சிறு ஆக்க வேலைகளில் ஈடுபட்டேன்.

## முத்தமிழறிஞர் கலைஞர்

**“கருணாநிதி! உன்னை அண்ணா அழைத்து வரச் சொன்னார்” என்று வந்தார் ஒருவர்.**

**“அண்ணாவா?”**

**“ஆமாம், ஆமாம். ‘திருவாரூரில் கருணாநிதி என்பவர் யார்? அவரை நான் பார்க்க வேண்டும்” என்றார். “நமது இயக்கத்தில் நீ ஒரே ஒரு கருணா நிதிதானே!” என்றார்.**

கையைத் துடைத்துக்கொண்டு உடனே புறப்பட் டேன். என் உள்ளத்தில் அச்சம் ஒரு பக்கம், ஆனந் தம் ஒரு பக்கம், வியப்பு ஒரு பக்கம், திகைப்பு ஒரு பக்கம், மகிழ்ச்சி பாதி, பயம் பாதி. மனத்தைத் திடப் படுத்திக் கொண்டு புறப்பட்டேன்.

வக்கீல் வெங்கடாச்சாரியார் வீட்டின் மாடியில் அண்ணாவைத் தங்கவைத்து இருந்தார்கள். அண்ணாவைச் சூழ்ந்து திருவாரூரின் இயக்கப் பிரமுகர்களான திரு டி.என்.ராமன், டி.என்.லட் சப்பா, ரங்கராசு, சிங்கராயர் போன்றோர் அமர்ந்து இருந்தனர்.

**அண்ணாவுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, “அழைத்தீர்களாமே?” என்றேன். வார்த்தைகள் தெளிவாக வரவில்லை.**

**“நீதான் கருணாநிதியா?” வெண்கல மணி ஒலித்தது.**

**“ஆமாம், அண்ணா!”**

**“என்ன செய்கிறாய்? படிக்கிறாயா தம்பி!”**

**“ஆமாம்.”**

**“ ‘இளமைப் பலி’ எழுதியது நீதானே?”**

**“நான்தான் எழுதினேன்!”**

**“சரி, கட்டுரை நன்றாகத்தான் இருந்தது. ஆனால், உனக்கு இப்போது அந்த வேலை தேவை இல்லை. படிப்பை முடித்துப் பட்டம் பெற்ற பிறகு எழு தத் தொடங்கலாம். கவனமாகப் படி!” என்றார் அண்ணா.**

**என்ன பதில் சொல்வது என்று எனக்குத் தெரிய வில்லை. எழுத்துப் பணியை நிறுத்தச் சொல்கி றாரே! என்னால் இயலுமா?**

**“வருகிறேன், அண்ணா!” என்று மட்டும் சொல்லி விட்டு அங்கிருந்து நகர்ந்தேன்” .**

## எல்லாம் ஒரே சாதிதான் !



சிலர் கேட்கலாம்; நாங்கள் அழைத்தால் வர மறுக்கிறாய் ? இஸ்லாமியர் அழைத்தால் செல்கிறாய்; கிறித்தவர்கள் அழைத்தால் செல்கிறாய்; என்று கேட்கலாம். நாங்கள் என்பது – நாங்கள் வேறு, நீங்கள் வேறு என்று எண்ணுகிற நேரத்தில்தான் – நாங்கள் என்ற சொல்லுக்குப் பொருள் உண்டு.

நாங்கள் என்பதிலே – நான் என்னை, தமிழன், திராவிடன் என்று சொல்லிக் கொண்டாலுங்கூட, அவர்கள் சொல்வதைப் போல, இந்து மதக்காரர், இந்து மதத்தைச் சேர்ந்தவர் – ஆனால் இந்து மதத்திலே இருப்பவர்கள் எங்களை அழைக்கின்ற நேரத்தில், எல்லோரும் சமம், வாருங்கள் என்றழைத்தால் அட்டியின்றி செல்வேன்; நீயும், நானும் ஒன்று ஆண்டவன் முன்பு என்றழைத்தால் தட்டாமல் செல்வேன். ஆண்டவன் படைப்பிலே மேல் சாதி, கீழ் சாதி என்று இல்லை; எல்லாம் ஒரே சாதிதான், மனிதசாதி தான் என்று சொல்லி அழைத்தால் கட்டாயம் செல்வேன்.

நான் இந்துக் கடவுள்களுடைய விழாக்களிலே கலந்து கொள்ள வேண்டும் அல்லது வேண்டாம் என்ற இந்தப் பிரச்சினையில் நான் என்றைக்கும் என்னைச் சிக்க வைத்துக் கொள்ள விரும்புவதில்லை.

**- கலைஞர்**



# நாள்தோறும் நெகிழ்வுதான்... வாழ்வெல்லாம் நினைவுதான்!

**முதல்வர் மு.க.ஸ்டாலின்**
தலைவர், தி.மு.க.

அரும்பெரும் தலைவர்கள் பலரும் வருகை தந்த கோபாலபுரம் இல்லத்தில் வளர்ந்த எனக்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடனான நெகிழ்வான நினைவுகள் என்று எதைச் சொல்வது, எதை விடுவது? ஒரு தந்தையாக என்னை வளர்த்தெடுத்தவர். அதை விட இயக்கத்தின் தலைவராக இருந்து என்னை வார்த்தெடுத்தவரும் அவரே.

சிறுவயதில், என் உடன்பிறந்தவர்களுடனும் உறவினர்களுடனும் கோபாலபுரம் இல்லத்தில் தாய்தந்தையின் முகம் கண்டு மகிழ்ந்திருந்த நான், இளமைப் பருவம் துளிர்விடும் போதே அரசியல் பொதுவாழ்வில் ஆர்வம் கொண்டவனாக, அக்கறை உடையவனாக மாறினேன் என்றால், அதற்கு காரணம், தமிழ்நாட்டின் தலைப்பெழுத்தைத் தீர்மானிக்கும் இடமாக கோபாலபுரம் இல்லத்தை தலைவர் கலைஞர் உருவாக்கி வைத்திருந்ததுதான்.

கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. என்ற அமைப்பைத் தொடங்கியபிறகு, அரசியல் ஆர்வம் மேலும் அதிகமானது. கழகத்தின் கொள்கைப் பிரச்சார நாடகங்களில் பங்கேற்று நடிக்க ஆரம்பித்தேன். அஞ்சுகம் நாடக மன்றத்தின் சார்பில், ‘முரசொலி’ அடியார் அவர்கள் எழுதிய ‘முரசே முழங்கு’ என்ற நாடகத்தில், நான் தலைவர் கலைஞர் அவர்கள் வேடத்தில் நடித்தேன். பின்னாளில், திரைத்துறையில் நல்ல பல கதாபாத்திரங்களை ஏற்று நடித்த கலைஞர்கள் அந்த நாடகத்தில் என்னுடன் பங்கேற்றிருந்தனர்.

1971இல் ‘முரசே முழங்கு’ நாடகத்தின் 40ஆவது நிகழ்வு நிறைவடைந்தபோது, சென்னை திருவல்லிக்கேணி என்.கே.டி. கலா மணிமண்டபத்தில் முதல்வர் கலைஞர் தலைமையில் விழா நடைபெற்றது. புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதில் பங்கேற்று வாழ்த்துத் தெரிவித்தார். நாடகத்தில் என்னுடைய கதாபாத்திரத்தைப் பாராட்டி, தலைவர் கலைஞர் அவர்கள் எனக்கு கணையாழி அணிவித்தபோது, 1959-ல் சென்னை மாநாகராட்சித் தேர்தலில் கழகம் பெற்ற மகத்தான வெற்றிக்கு காரணமான தலைவர் கலைஞர் அவர்களுக்கு பேரறிஞர் அண்ணா கணையாழி அணிவித்த நிகழ்வு நெஞ்சில் நிழலாட, நெகிழ்ந்து போனேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் பேசும்போது, **“இந்த நாடகம் இன்று நிறைவு பெறுகிறது என்று நான் கூறுவதற்குக் காரணம், ஸ்டாலின் இந்த வேலையைத் தொடரக் கூடாது என்பதற்காகத்தான். புராணக்காரர்கள் பாஷையில் சொல்ல வேண்டுமென்றால் விடையார்த்தி உற்சவம் என்று சொல்லலாம். அதாவது, கோவில்களில் உற்சவங்களையெல்லாம் முடித்து கடைசித் திருவிழாவாக விடையார்த்தி உற்சவத்தை நடத்துவார்கள். அதைப் போல இந்த நாடகம் இன்று நடத்தப்படுகிறது என்று கருதுகிறேன்.**

**குடும்பமே இயக்கப் பணிகளில் ஈடுபடுவதை எண்ணுகிற நேரத்தில் ஒரு பக்கத்தில் மகிழ்ச்சி அடைகிறேன். அதே நேரத்தில் எப்படி நான் என்னுடைய தாய் தந்தையருக்கு அடங்காத பிள்ளையாக இருந்தேனோ, இந்த இயக்கத்தில் ஈடுபட்டேனோ அதைப் போல என்னுடைய பிள்ளைகளும் இருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது நான் செய்த குற்றத்திற்கு ஏற்ற தண்டனைதான் எனக்கு கிடைத்திருக்கிறது என்று கருதுகிறேன். அந்தத் தண்டனை தமிழ்நாட்டை வாழ வைக்கிற காரியத்திற்கு உறுதுணையாக இருப்பதால் இப்படிப்பட்ட தண்டனைகள் அடிக்கடி கிடைக்க வேண்டுமென்று எண்ணினாலும் கூட, ஸ்டாலின் போன்றவர்கள் கொஞ்சம் ஒழுங்காக முறையாகப் படித்து, எனக்கு இருக்கிற ஒரே ஒரு குறை (கல்லூரிப் பட்டம் பெறாதது) அவர்களுக்கு இல்லாத அளவில் அவர்கள் படிக்க வேண்டும்”** என்று தலைவர் உணர்ச்சிப்பூர்வமாகக் குறிப்பிட்டுப் பேசினார்.

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர் அவர்கள் என்னுடைய நடிப்பாற்றலையும், நாடகத்தின் கருத்தையும் பாராட்டிவிட்டு, **“தான் பெற முடியாத கல்லூரிக் கல்வியை ஸ்டாலினும் இழந்துவிடக்கூடாது என்று கலைஞர் சொன்னார். அதை அவர் எவ்வளவு வேதனையோடு சொன்னார் என்பதை ஸ்டாலின் உணர வேண்டும். ஒரு தந்தை நூறு பக்கங்களில் மகனுக்கு எழுத வேண்டிய கடிதத்தை அவர் ஒரு வரியில் குறிப்பிட்டார்”** என்று தலைவர் கலைஞர் அவர்களின் ஏக்கத்தை எம்.ஜி.ஆர். அவர்களும் தன் உரையில் எடுத்துரைத்தார்.

‘முரசே முழங்கு’ நாடகம் நிறைவு பெற்றாலும் என்னுடைய இயக்கப் பணியும், கலைப்பணியும் தொடர்ந்து கொண்டேதான் இருந்தன. 1971-ல் கோவையில் நடைபெற்ற கழகத்தின் மாணவர் மாநாட்டின் தலைவர் அண்ணன் எல்.கணேசன் அவர்கள் உரையாற்றும்போது, “மாணவர் பட்டாளம் உயிர்த்தியாகம் உள்பட எந்தத் தியாகத்திற்கும் தயாராக இருந்து இனம், மொழி காக்கும் வீரர்களாக வேண்டும்” என்றார். நான், “எனக்கு இரண்டு நிமிடங்கள் பேச வாய்ப்பு தாருங்கள்” என்று கேட்டு வாங்கிப் பேசினேன்.

**“என்னுடைய தந்தைக்கு நான்கு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். அந்த நான்கு ஆண் பிள்ளைகளில் ஒரு ஆண் பிள்ளை போய்விடுவதால் என்னுடைய தந்தை நிச்சயம் கவலைப்படமாட்டார். அதுவும் மொழிக்காக, ஒரு இனத்திற்காக தனயனை இழந்த தந்தை என்று என்னுடைய தந்தைக்குப் பாராட்டு கிடைக்கும். எனவே எத்தகைய தியாகத்தை செய்வதற்கும் தயார்.. தயார்”** என்றேன்.

நான் பேசுவதை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தார் மேடையிலிருந்த தலைவர் கலைஞர். அவர் உரையாற்றும்போது, **“ஒழுங்காகப் படிக்காமல் பட்டம் பெறாமல், அரசியலில் ஈடுபட்டால் என்னைப் போல முதலமைச்சராக ஆகலாம் என்று யாரும் தவறாகக் கருதிக்கொள்ளாதீர்கள். இது விதிவிலக்கு. விதிவிலக்கு, வழிகாட்டிகள் ஆகாது. எனவே விதிவிலக்குகளை வழிகாட்டிகளாக எடுத்துக் கொள்ளக்கூடாது”** என்று மீண்டும் படிப்பையே வலியுறுத்தினார். பட்டம் பெற்று, பண்பாளன் என்ற பெயர் பெற்று, பாரோர் புகழக் குடும்பத்தின் பெருமையை உயர்த்துவதுதான் பெற்றெடுத்தவர்களுக்கு நீங்கள் செய்யும் கைம்மாறு என்றார் தலைவர்.

‘கல்வியே அழிவில்லாத செல்வம்’ என்பதால்தான் கல்வி உரிமைக்காகவும், அதனடிப்படையிலான வேலை உரிமைக்காகவும் திராவிட இயக்கம் தோன்றியது. பெரியார், அண்ணா, கலைஞர் உள்ளிட்ட தலைவர்கள் அனைவரும் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி, அந்த வாய்ப்பை அனைத்து மக்களும் பெறுவதற்காக அயராது பாடுபட்டு வெற்றி பெற்றனர். என்னுடைய தந்தையாக என் பொதுவாழ்வுப் பணிகளில் தலைவர் கலைஞர் அவர்கள் மனநிறைவு கொண்டாலும், இயக்கத்தின் தலைவராக இந்த இனத்தை வாழவைக்கும் தலைவராக என்னுடைய கல்வி மீதான அவரது அக்கறை எப்போதும் தொடர்ந்தது.

**நெருக்கடிநிலைக் காலத்தில் மிசா சிறைவாசத்தில், கொடூரத் தாக்குதலை எதிர்கொண்டேன். என் மீது விழுந்த அடிகளில் பலவற்றை அண்ணன் சிட்டிபாபு தாங்கிக்கொண்டு, தன் உயிரைக் கொடுத்து என் உயிரைக் காத்தார். அந்தச் சிறைவாசத்தின்போது, உரிய அனுமதி பெற்று, சென்னை மாநிலக் கல்லூரியில் தேர்வுகளை எழுதினேன். பின்னர், பி.ஏ. பட்டம் பெற்றேன். அதன் மூலம், தந்தையின் - அல்ல.. அல்ல.. - தலைவரின் எண்ணத்தையும் எதிர்பார்ப்பையும் நிறைவேற்றினேன்.**

அவருடைய விருப்பப்படி, கல்லூரியில் பட்டம் பெற்றாலும், நான் அவரிடம் பெற்ற உயர்ந்த பட்டம் என்பது, **“ஸ்டாலின் என்றால் உழைப்பு..உழைப்பு.. உழைப்பு”** என்று எனக்கு தலைவர் அவர்கள் அளித்த அங்கீகாரம்தான். அந்த உழைப்பும் அவரிடம் கற்றதுதான். அதை இன்றளவும் தமிழ்நாட்டு மக்களுக்காக வழங்கிக் கொண்டிருக்கிறேன். **உயர்கல்வியில் முன்னணி பெற்றுள்ள தமிழ்நாடு இன்னும் பல படிகள் முன்னேறி, உலகின் உயர்கல்வித் தலைநகராகத் தமிழ்நாடு திகழவேண்டும் என்றும், தமிழ்நாட்டு மாணவர்களுக்கு நிகரானவர்கள் உலகில் இல்லை என்று கூறும் நிலை வரவேண்டும் என்பதற்காகவும் உழைத்துக் கொண்டிருக்கிறேன்.**

அந்த உந்துவிசையை எனக்கு இன்றும் வழங்கிக்கொண்டிருப்பது தலைவர் கலைஞரின் அன்றைய பேச்சுதான்.

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரை உச்சரிக்கும்போதே நெகிழ்கிறேன். அவர் நினைவுகளுடனேயே என் வாழ்வைத் தொடர்கிறேன்.**

## இராமானுசரும், திராவிட வேதமும்!



ஆழ்வார்களுடைய நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திராவிட வேதம் என்று யாரால் சொல்லப்பட்டதென்றால், இராமானுசரால் சொல்லப்பட்டது. அந்தத் திராவிட வேதம் இன்றைக்கு வைணவக் கோவில்களில் எல்லாம் பாடப்படுகிறது, படிக்கப்படுகிறது என்றால், அதற்கு மூல காரணமாகத் திகழ்பவர் இராமானுசர்தான் !

அவர் ஆன்மிகவாதிதான். ஆன்மிகவாதி என்றாலுங்கூட, அந்த ஆன்மிகத்தோடு கலந்து அவர் அளித்த கருத்து சாதாரணமானதல்ல.

உத்தமர் காந்தி அடிகள், ஆலயப் பிரவேசம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்து - அதை நிறைவேற்றுவதற்கு முன்பு - 850 ஆண்டுகளுக்கு முன்பு அதை கர்நாடக மாநிலத்திலே நடத்திக் காட்டியவர் இராமானுசர் அவர்கள் ஆவார்கள்.

கர்நாடக மாநிலத்தில் திருநாராயணபுரம் என்று அழைக்கப்பட்டு - இன்றைக்கு மேலக்கோட்டை என்று அழைக்கப்படுகின்ற அந்த ஊர்க் கோவில்களில் ஆதி திராவிடர்கள் - தாழ்த்தப்பட்ட சாதிக்காரர்கள் நுழையக் கூடாது என்ற தடையை அகற்றி - ஆலயப் பிரவேசத்தை, காந்தி அடிகளுக்கு 850 ஆண்டுகளுக்கு முன்பு நடத்திக் காட்டிய பெருமை ஒருவருக்கு உண்டென்றால், அது இராமானுசர் ஒருவருக்குத்தான் உண்டு. அத்தகைய சீரிய, செழுமிய, புரட்சிகரமான கருத்துகளுக்குச் சொந்தக்காரராக அவர் விளங்கினார் !

**- கலைஞர்**

# “கலைஞரின் உள்ளம் அன்பெனும் பிடிக்குள் அடங்கும்”



அமைச்சர்
**துரைமுருகன்**
கழக பொதுச் செயலாளர்

முத்தமிழறிஞர் கலைஞருடன் உடன்பிறப்புகளின் சந்திப்பு என்பது நெகிழ்ச்சியானது மட்டுமல்ல, வரலாற்றுச் சுவடும் ஆகும்!

கலைஞர் அவர்களுக்கு உடன்பிறப்புகளோடு பேசுவதும் அவர்களோடு இருப்பதும் நெகிழ்ச்சியான நேரமாகும்!

தனிமையில் இருப்பது என்பது பலருக்கும் பிடித்தமான நேரமாகும்!

ஆனால் தலைவர் கலைஞருக்கு அதுதான் மிக வேதனையானது!

உடன்பிறப்புகளோடு கலைஞர் உடனிருந்த நேரமும் அப்போதைய உரையாடல்களில் பிறப்பெடுத்த பல கருத்துகளும் இலக்கியம்!

**தலைவர் எந்த இடத்தில் யாரோடு இருந்தாலும் அந்த இடம் மகிழ்ச்சிக்குரியதாகவே இருக்கும்!**

**கலைஞர் அவர்கள் தினம் தினம் அவர் குடும்பத்தினரோடு செலவிட்ட நேரத்தைவிட கழக உடன்பிறப்புகளோடு உறவாடிய நேரம்தான் அதிகமாக இருக்கும், மகிழ்ச்சியான தருணங்களில் மட்டுமல்லாமல் உடன்பிறப்புக்களின் துயரமான தருணங்களிலும் பங்கேற்பது நம்முடைய நெஞ்சை நெகிழ வைப்பதாக இருக்கும்!**

**தலைவர் அவர்கள் சென்னையில் இருந்தால் ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் அண்ணா அறிவாலயம் வந்துவிடுவார்! உடன்பிறப்புக்களை சளைக்காமல் சந்திப்பார்! அதில் மகிழ்ச்சியும் இருக்கும் - துன்பம் கொண்ட இரக்கமாகவும் இருக்கும்.**

ஒரு நாள் அண்ணா அறிவாலயத்தில் உட்கார்ந்து உடன்பிறப்புகளைச் சந்தித்துக் கொண்டிருந்தார். அப்போது மதுரை மாவட்டச் செயலாளராக இருந்த பொன்முத்துராமலிங்கம் ஒரு நபரை உடன் அழைத்துக் கொண்டு வந்திருந்தார். கலைஞர் அவர்கள் பொன்முத்துராமலிங்கத்தைப் பார்த்து “என்ன செய்தி?” என்று கேட்டார். பொன்முத்துராமலிங்கம் உடன் அழைத்து வந்திருந்தவரை அறிமுகம் செய்து வைத்து, அவரைப் பற்றி உயர்வாக சில கருத்துக்களை தெரிவித்துவிட்டு, “இவர் இலக்கியத்தின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர், மதுரை மாவட்ட இலக்கிய அணிச் செயலாளர் பொறுப்பு கேட்கிறார்” என்று சொன்னார்.

**‘உடனே கலைஞர், அந்த புதிய நபரைப் பார்த்து, “கவிதையெல்லாம் படிப்பீர்களா? சங்க இலக்கியம் எல்லாம் தெரியுமா?” என்று கேட்டுவிட்டு, “கம்ப ராமாயணத்தை எழுதியது யார்?” என்று கேட்டார். உடனே அந்த நபர் கொஞ்சமும் யோசிக்காமல், “நீங்கதான் அய்யா” என்றார். அதாவது கம்பராமாயணத்தை எழுதியது கலைஞர்தான் என்று கூறினார். இதைக் கேட்ட அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தோம். அந்த நபர் பேந்த பேந்த விழித்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த பொன். முத்துராமலிங்கம் அந்த நபரைப் பார்த்து, “நீங்க கொஞ்சம் வெளியே இருங்க, நான் வரேன்” என்று சொல்லி அந்த நபரை அங்கிருந்து அப்புறப்படுத்தினார்.**

### இன்னொரு நிகழ்வு

கலைஞர் அவர்கள் அவருக்கே உரிய பாணியில் தொல்காப்பியத்திற்கு உரை எழுத முடிவெடுத்தார். ஒரு வார காலத்திற்கு யாரும் எளிதில் அணுக முடியாத இடத்திற்குச் செல்ல வேண்டும் என்று யோசித்து, கோவா செல்வது என்று முடிவு செய்தார். தயாளு அண்ணியார், கலைஞருடைய டாக்டர் கோபால், நான் - எங்கள் மூவரையும் அழைத்துக் கொண்டு கலைஞர் கோவா சென்றார். கலைஞர் அவர்கள் பொதுவாகவே காலை நேரத்தில் எழுந்து எழுதுவதில் அதிக ஆர்வம் கொண்டவர். கோவாவிலும் ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து எழுத ஆரம்பித்து விடுவார். மடியிலே ஒரு பேடை வைத்து எழுதுவார். ஒவ்வொரு தாளையும் எழுதி முடித்தவுடன் அடுத்த தாளை திரும்ப எடுப்பதற்குள் எழுதிய தாள் பறந்து கீழே விழுந்துவிடும். அப்படி அவரைச் சுற்றி அறை முழுவதும் எழுதிய தாள்கள் சிதறிக் கிடக்கும். தயாளு அண்ணியார் அவற்றையெல்லாம் சேகரித்து வைப்பார்.

**ஒரு நாள் கலைஞர் எழுதிய தாள்களை டாக்டர் கோபால் அவர்கள் சேகரித்து அடுக்கி வைத்துக் கொண்டிருந்தார். கலைஞர் அவர்கள் அன்றைய தினம் எழுதிய தாள்களை ஏதோ ஒரு ஆர்வத்தில், டாக்டர் வாசித்துக் கொண்டிருந்தார். அந்த நேரம் கலைஞரும் அன்றைய எழுத்துப்பணியை முடித்துக் கொண்டார். டாக்டரைப் பார்த்து, “என்ன டாக்டர் பேப்பரை எல்லாம் நீங்களே அடுக்கி வைத்துக் கொண்டிருக்கிறீர்களா?” என்று கேட்டார். உடனே கோபால் அவர்கள், “ஆமாங்கய்யா, இன்றைக்கு உங்கள் எழுத்துக்களைப் படிக்கிற பாக்கியம் எனக்குக் கிடைத்தது. ரொம்ப அற்புதம் அய்யா. இப்படி யாராலும் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுத முடியாது அய்யா” என்றார்.**

**இதைக் கேட்ட கலைஞர் சிரித்துவிட்டு பக்கத்து அறையில் இருந்த என்னை அழைத்து, “துரை, டாக்டர் நான் எழுதியதைப் படித்துவிட்டு ‘சிலப்பதிகாரத்திற்கு இப்படி யாரும் உரை எழுத முடியாது’ என்கிறார். இவருக்கு சிலப்பதிகாரமும் தெரியவில்லை, தொல்காப்பியமும் தெரியவில்லை” என்று கூறிவிட்டு வாய்விட்டுச் சிரித்தார்.**

### இன்னொரு நிகழ்வு

ஒரு நாள் நானும் தலைவரும் அண்ணா அறிவாலயத்திற்கு போனோம். போகிற பொழுதே தலைவருக்கு மூடு சரியில்லை. அந்த நிலையில், கலைஞரின் கார் அண்ணா அறிவாலயத்தின் உள்ளே சென்று நின்றது. காரிலிருந்து இறங்கி அவர் அறைக்குப் போகும் வழியில் கடையநல்லூரைச் சார்ந்த ராஜாமணி என்ற தோழர் கலைஞரை இடைமறித்து, சிலரைப் பற்றி மளமளவென குற்றச்சாட்டுக்களைச் சொல்ல ஆரம்பித்தார். ஏற்கெனவே மூடு சரியில்லாத நிலையில் இருந்த கலைஞருக்கு ராஜாமணியின் பேச்சு எரிச்சலை ஊட்டியது. “போயா நீ மட்டும் யோக்கியனா? மற்றவனைப் பற்றி குறை சொல்ல வந்துட்ட. ஒரு கட்சிக்காரனை இன்னொரு கட்சிக்காரன் குறை சொல்லும் வழக்கம் என்னைக்கு நிற்குதோ, அன்று தான் கட்சி உருப்படும்” என்றார் கோபமாக.

ராஜாமணி தலைவருக்கு வேண்டியவர்தான். தலைவர் இப்படி பேசியதைக் கேட்டு அவர் அசந்து போய் தலைவரிடம் ஏதும் கூறாமல் வெளியே போய்விட்டார்.

பின்னர், தலைவர் அவர்கள் யாரிடத்திலும் எதுவும் பேசாமல் கையை தாடைக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு அமைதியாக உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தார். பின் என்னைப் பார்த்து, “துரை, நான் அவனை ரொம்ப திட்டிட்டேன், அவன் எங்கே இருக்கான் பாரு?” என்றார்

நான் உடனே கலைஞரின் அறைக்கு வெளியே வந்து அங்குமிங்கும் தேடினேன், ராஜாமணியை காணவில்லை. அறிவாலயத்திற்கு வெளியே ஆட்டோக்காரரிடம் பேரம் பேசிக்கொண்டிருந்தார்.

நான் அவரிடம் சென்று, “கலைஞர் உன்னைக் கூப்பிடுகிறார்” என்று சொல்லி கலைஞரிடம் அழைத்து வந்தேன்.

**ராஜாமணி தலைவரின் அறைக்குள் நுழைந்ததும், தலைவர், ராஜாமணியைப் பார்த்து, “ராஜாமணி என்னை மன்னிச்சிடுய்யா. நான் ஏதோ ஒரு டென்ஷனில் இருந்தேன், உன்னைத் திட்டிவிட்டேன்” என்றார். ராஜாமணி மட்டும் அல்ல, இதைக் கேட்ட நாங்கள் அனைவருமே அசந்து போய்விட்டோம்.**

**இதைக்கேட்ட ராஜாமணி, “அய்யா... நீங்கள் போய் என்னிடம் மன்னிப்புக் கேட்கலாமா?” என்று கூறிக்கொண்டே காலில் விழுந்து புரண்டு புரண்டு அழுதார்.**

**‘தொண்டனின் மனம் புண்பட்டுவிடக் கூடாது’ என்ற கலைஞரின் நிலைப்பாட்டிற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.**

### மற்றொரு நிகழ்வு-
### நெஞ்சைப் பிழிகிற நிகழ்வு

ஒரு நாள் கலைஞர், அண்ணா அறிவாலயத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். சண்முகசுந்தரம் என்ற வழக்கறிஞர் கழகத்தின் சார்பாக நீதிமன்றங்களில் வாதாடுகிறவர். ஜெயலலிதா உட்பட பல அ.தி.மு.க. காரர்களை நீதிமன்றத்தில் தோலுரித்துக் காட்டியவர். ஒரு நாள் சண்முகசுந்தரம் அவருடைய அறையில் உட்கார்ந்திருந்தார். ஜெயலலிதாவிற்கு வாதாடியவர்களின் தூண்டுதலின் பேரில் சிலர் சண்முகசுந்தரத்தின் அறைக்குள் நுழைந்து சண்முகசுந்தரத்தை கண்மூடித்தனமாக தாக்கினர். அரிவாளைக் கொண்டு பல இடங்களில் அவரை வெட்டினர். யாரும் எதிர்ப்பாராத நேரத்தில் இந்நிகழ்வு நடந்தது.

அங்கிருந்த வக்கீல்கள் தாக்கியவர்களைப் பிடிக்க முற்படும் முன் அவர்கள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர். வக்கீல்களும் அவர்களைப் பிடிப்பதைக் காட்டிலும் அடிபட்டுக் கிடக்கும் சண்முகசுந்தரத்தை காப்பாற்றுவதுதான் முக்கியம் என்று நினைத்து அவரை உடனடியாக அருகில் இருந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

**இந்த தகவல் அண்ணா அறிவாலயத்தில் இருந்த கலைஞருக்கு கிடைத்தது. எதற்குமே அஞ்சாத தலைவர் படபடப்புக்குள்ளானார். வண்டியில் உட்கார்ந்து மிக வேகமாக மருத்துவமனைக்கு சென்றார். உள்ளே அறையில் சண்முகசுந்தரம் படுத்திருந்தார். பல இடங்களில் வெட்டப்பட்ட காரணத்தால் சண்முகசுந்தரத்தின் உடலிலிருந்து இரத்தம் வெள்ளமாக ஓடிக்கொண்டிருந்தது. கலைஞர் சண்முகசுந்தரத்தைப் பார்த்து கண்கலங்கிவிட்டார். சண்முகசுந்தரத்திற்கு திருமணமாகி கொஞ்சநாள்தான் ஆகியிருந்தது. அவரது மனைவியும் ஒருபக்கம் நின்று அழுதுகொண்டிருந்தார். அந்தக் காட்சி என் கண் முன் அப்படியே நிழலாடுகிறது.**

இப்படி முத்தமிழறிஞர் கலைஞருடன் உடன்பிறப்புகளின் நெகிழ்ச்சியான சந்திப்புகள் எத்தனையோ.

# கல்வி - சமூக மாற்றம்!


கல்வி, சமூக மாற்றத்திற்கு ஒரு கருவி என்ற வகையிலேதான் (Education is a tool for social change) ஒரு மேல்நாட்டு அறிஞன் குறிப்பிட்டான்.

இதே கருத்தைத்தான் வள்ளுவப் பெருந்தகை,

**“அறிவு அற்றம் காக்கும் கருவி செருவார்க்கும்**
**உள்ளழிக்கல் ஆகா அரண்”**

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் மக்கள், கல்வி வாய்ப்புகளைப் பெற்றிருந்தவர்கள், கல்லாதவர்களை அடக்கி ஒடுக்கித் தங்கள் ஆதிக்கத்திற்குக் கொண்டுவந்த வரலாறும் உண்மை.



அந்தக் காலக் கட்டத்திலேதான் - தமிழகத்தைப் பொறுத்தவரை 1916-ஆம் ஆண்டு வாக்கில், தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தோற்றம் கொண்டது. அந்தத் தோற்றத்திற்குப் பிறகுதான் எல்லோருக்கும் கல்வி வாய்ப்பு வேண்டும்; வேலை வாய்ப்பு வேண்டும் என்ற உரிமைக் குரல் விண் முட்ட எழுந்தது.

அந்த உரிமைக் குரல்களின் முன்னோடிகளாக இருந்த திராவிட இயக்கத்தின் தலைவர்களை யாரும் மறந்துவிட முடியாது. அவர்களுடைய உழைப்பின் வடிவம்தான், என் எதிரே அமர்ந்திருக்கின்ற பல்லாயிரக்கணக்கான ஆசிரியப் பெருமக்கள் என்று சொன்னால், அதை யாரும் மறைக்கவும் முடியாது; மறுக்கவும் முடியாது.

அந்த இயக்கத்தின் தோன்றலாக இருக்கின்ற அரசுதான் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கழக அரசு !

**- கலைஞர்**

# அண்ணன் கலைஞர் என்னைச் செதுக்கிய தேவன்! என் அரசியல் ஆசான்!



அமைச்சர் **கே.என்.நேரு** கழக முதன்மைச் செயலாளர்

திருச்சி மாவட்டம் தீரர்கள் கோட்டம்!

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் உள்ளம் கவர்ந்த மாவட்டம் திருச்சி மாவட்டம்! அதற்குப் பல காரணங்கள் உண்டு.

அண்ணன் கலைஞர் அவர்கள் தலைமையேற்று திருச்சி மாவட்டத்தில் முதன்முதலில் 1953 ஜூலை 15இல் நடத்தியது, கல்லக்குடி ரயில் மறியல் போராட்டம்: அதில் ஆறுமாத சிறைத் தண்டனை: அதுவும் திருச்சி மத்திய சிறையில்தான்.

1957 தேர்தலில் முதன்முதலில் போட்டியிட்டு வென்று பேரவை உறுப்பினரானது அன்றைய ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தின் குளித்தலை தொகுதியில்தான் !

அந்தக் குளித்தலையில் நங்கவரம் விவசாயிகள் போராட்டத்தில் முன்னிலையேற்றுப் போராடியதும், பேரவையில் ஆற்றிய கன்னிப் பேச்சில் நங்கவரம் போராட்டம் குறித்துப் பேசியதும், போராட்டத்தில் வெற்றி பெற்று விவசாயிகளின் கூலி உயர்வைப் பெற்றுத் தந்த வரலாறு நிகழ்ந்ததும் திருச்சி மாவட்டத்தில்தான்!

இந்தியை எதிர்த்து, இரயில் நிலையப் பெயர்ப் பலகைகளில் தந்தை பெரியார் அவர்கள் இந்தி எழுத்துகளைத் தார் பூசி அழிக்க: முத்தமிழறிஞர் கலைஞர் இந்தி எழுத்துகளைத் தார் பூசி அழித்ததும் திருச்சி தெப்பக்குளம் அஞ்சல் அலுவலகப் பெயர்ப் பலகைகளில்தான்!

விலைவாசி உயர்வைக் கண்டித்து, 1962இல் தஞ்சை மாவட்ட ஆட்சியர் வாயிலில் மறியல் செய்து மூன்று மாத காலம் சிறைத் தண்டனை பெற்று அதை அனுபவித்ததும் திருச்சி மத்திய சிறையில்தான் !

ஆளும் கட்சியாகக் கழகம் திகழ்ந்தபோதும், எதிர்க் கட்சியாக விளங்கியபோதும் மிகப் பெரிய மாநாடுகளை நடத்தி அண்ணன் கலைஞர் அவர்கள் வெற்றிப் பாதையில் கழகத்தைச் செலுத்திய வரலாறுகளும் திருச்சியில்தான் !

இத்தகைய வரலாற்று நிகழ்வுகளின்போது தமிழ்நாட்டின் அரசியல் கலைமாமேதை அண்ணன் கலைஞர் அவர்களின் ஆணை கேட்டு அரசியல் பயணத்தில் பல வெற்றிப் படிக்கட்டுகளை நிர்மாணித்த அனுபவங்களை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

அரசியல் மாமலை அண்ணன் கலைஞர் அவர்கள் என்னிடம் நம்பிக்கை வைத்து திருச்சி மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றும் வாய்ப்பை எனக்கு வழங்கினார்கள்.

அண்ணன் கலைஞர் அவர்கள் அன்றைக்கு என்மேல் வைத்த நம்பிக்கைக்கு வெற்றி சேர்க்கும் வகையில், இன்றும் அவர் வீரமைந்தர், இன்றைய முதலமைச்சர் தளபதி அவர்களின் காலத்திலும் அவர் வழியில் கழகத்தை வளர்த்து வருகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் 1956 மே, 17, 18, 19, 20 ஆகிய நாள்களில் திருச்சி மாநகரில்தான் நடைபெற்றது.

1990 பிப்ரவரி 9, 10, 11 ஆகிய நாள்களில் கழகத் தலைவர் அண்ணன் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வீற்றிருந்து - திருச்சியில் நடத்திய 6-வது மாநில மாநாடு மகத்தான பெற்றிபெற உழைத்து அண்ணன் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டேன்.

அதேபோல, கழகத்தின் 8-வது மாநில மாநாட்டை 1996 ஜனவரி 26, 27, 28 ஆகிய நாள்களில் அண்ணன் கலைஞர் அவர்களின் தலைமையில் திருச்சியில் வெற்றிகரமாக நடத்தியதில் இரவு பகலாகப் பாடுபட்டு உழைத்துள்ளேன்.

கழகத்தின் ஒன்பதாம் மாநில மாநாட்டினை திருச்சி மாவட்டக் கழகச் செயலாளராக வீற்றிருந்து 2006 மார்ச் 3, 4, 5 ஆகிய நாள்களில் பிரம்மாண்டமாக நடத்தி கழகத் தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களின் பாராட்டைப் பெற்றுப் பெருமிதம் கொண்டேன்.

**அடுத்து, கழகத்தின் பத்தாவது மாநில மாநாட்டை திருச்சியில் நடத்திடும் அருமையான வாய்ப்பை அண்ணன் கலைஞர் அவர்கள் என்னிடம் ஒப்படைத்தார்கள். கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, 2014ஆம் ஆண்டு பிப்ரவரி 15, 16 ஆம் நாள்களில், அண்ணன் கலைஞர் அவர்கள் தலைமையில் திருச்சி - திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் பிராட்டியூர் அருகே மிகப்பிரம்மாண்ட மாக நடத்தி, “மாநாடு என்றால் திருச்சி! திருச்சி என்றால் நேரு! நேரு என்றால் மாநாடு! மாநாடு என்றால் நேரு! இந்தப் பெருமை தமிழ் நாட்டிலேயே - திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றிலேயே நேருவைத் தவிர வேறு யாருக்கும் இல்லை” என்று மனந்திறந்து கூறிய அண்ணன் கலைஞர் அவர்களின் பாராட்டைப் பெற்றுப் பெருமிதம் கொண்டது என் வாழ்வில் மறக்கமுடியாத மாபெரும் வரலாற்றுப் பொன்னேடாகும்.**

அது மட்டுமல்ல, தந்தை வழியில் மகத்தான தலைவராகத் திகழும் இன்றைய முதலமைச்சர் - கழகத் தலைவராகப் பொறுப்பேற்று - 2021இல் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்தபோது, அவரது ஆணைப்படி திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் சிறுகனூர் அருகே 2021 மார்ச் 14 அன்று கழகத்தின் 11-வது மாநில மாநாட்டையும் நடத்தினேன். அதன்மூலம் திராவிட நாயகர் முதலமைச்சர் தளபதி அவர்கள் அண்ணன் கலைஞர் அவர்கள் கூறிய “மாநாடு என்றால் நேரு; நேரு என்றால் மாநாடு” என்பதை நினைவுபடுத்திப் பாராட்டியதையும் நான் பெற்ற பெரும்பேறாகக் கருதுகிறேன்.

அண்ணன் கலைஞர், அருமைத் தளபதி ஆகியோர் மட்டுமல்லாமல் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், தம்பி உதயநிதி அவர்களும் கழக இளைஞர் அணியின் செயலாளராக இரண்டாவது மாநில மாநாட்டைப் பொறுப்பேற்று சேலம் மாநகரில் பிரம்மாண்டமாக நடத்தியபோது, அதே பாராட்டுமொழிகளை நினைவுபடுத்தி அவர் உரையாற்றியதும் என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வாகப் பதிந்துவிட்டது.

### 1989இல் மின்துறை அமைச்சர் பொறுப்பில் ஆற்றிய பணிகள்:

1989ஆம் ஆண்டு அண்ணன் கலைஞர் அவர்கள் மூன்றாம் முறையாக தமிழ்நாட்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்கள். அப்போது, **“தம்பி நேரு! மின்சாரத் துறை அமைச்சர் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன்; தமிழ்நாட்டில் தற்போது 60 சதவீத மின்வெட்டு நிலவுகிறது. அதை நீக்கி, தமிழ் நாட்டு மக்களுக்கு முழுமையான மின்வசதியை அளித்திட வேண்டும். கடுமையான பணி; வெற்றிகரமாக நிறைவேற்றுவாய் என்ற நம்பிக்கை உன்மேல் எனக்கு நிறைய உண்டு”** என்று கூறி மின்துறை அமைச்சர் பொறுப்பை முதன்முதலில் எனக்களித்தார்.

### வடசென்னை அனல்மின் திட்டம்!

1989-1990ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கிடைத்த மின்சாரம் 3017 மெகாவாட். அப்போது மாநிலத் திட்டக்குழு 1994-1995இல் 6345 மெகாவாட் மின்சாரம் தேவைப்படும் என்றது.

எனவே, கூடுதலாகத் தேவைப்படும் 3328 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்திடும் முயற்சியைத் தொடங்கினேன்.

அப்போது, வடசென்னை அனல்மின் திட்டம் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் திட்ட மிடப்பட்டது. அதன் நில எடுப்பு தொடர்பாக வி.ஜி.பி. நிறுவனம் உச்சநீதி மன்றத்தில் தொடுத்த வழக்கு நிலுவையில் உள்ளது. அத்திட்டத்தைச் செயல்படுத்தினால் தமிழ்நாட்டிற்கு 2050 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்: தற்போதைய மின்வெட்டுகளை முழுமையாக நீக்கிவிடலாம் என்று முதலமைச்சர் அண்ணன் கலைஞர் அவர்களிடம் கூறினேன்.

உடனே, வி.ஜி.பி. நிறுவனத்தின் உரிமையாளர் வி.ஜி.சந்தோஷம் அவர்களை அழைத்துப் பேசினார் அண்ணன் கலைஞர்.

வடசென்னை அனல்மின்நிலையத்தை அமைத்திடத் தேவைப்படும் நிலத்திற்காக எண்ணூர், புழுதிவாக்கம் பகுதிகளில் 2171 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தும் பணி 1986இல் எம்.ஜி.ஆர். ஆட்சியில் தொடங்கப்பட்டது. அதில், வி.ஜி.பி. நிறுவனத்திற்கு 1000 ஏக்கர் நிலமும், கிருத்துவ நகர் சங்கத்திற்கு 117 ஏக்கர் நிலமும் இருந்தன. அவர்கள் நில எடுப்பை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது; அவர்கள் உச்சநீதிமன்றம் சென்றனர், அங்கு வழக்கு நிலுவையில் இருந்தது. அது தொடர்பாகத்தான் நான் கூறியபடி, வி.ஜி. சந்தோஷம் அவர்களை அண்ணன் கலைஞர் அழைத்துப் பேசினார். அவரோ, “என் அண்ணன் வி.ஜி.பன்னீர் தாஸ் அவர்களின் கனவு, அங்கு, ஒண்டர் லேண்ட் அமைப்பது, அதனால் எங்களால் நிலத்தை விட்டுக் கொடுக்க முடியாது “ என்றார்.

உடனே அண்ணன் கலைஞர் அவர்கள், அவரிடம், “உங்கள் அண்ணன் கனவு, ஒண்டர் லேண்ட் அமைப்பது: எங்கள் அண்ணன் பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவு தமிழ்நாட்டு மக்களை வாழவைப்பது; அதற்கு மின்சாரம் தேவை. எனவே, வழக்கை உடனடியாக வாபஸ் பெற்று நிலத்தை ஒப்படையுங்கள்” என வலியுறுத்தினார்.

அதன் அடிப்படையில், அவர்கள் உச்சநீதிமன்றத்தின் வழக்கை வாபஸ் பெற்றனர். நில எடுப்புப் பணி முடிந்து, வடசென்னை அனல்மின் நிலையம் அமைத்திட அன்றைய குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்களை அழைத்து, முதலமைச்சர் அண்ணன் கலைஞர் அவர்கள் தலைமையில் அடிக்கல் நாட்டும் விழாவை மின்துறை அமைச்சராக 1.7.1989 அன்று நான் நடத்தினேன்.

அப்படித் தொடங்கப்பட்ட வடசென்னை மின்நிலையத்தின் மூன்று அலகுகளும் செயல்படத் தொடங்கிய பின்னர்தான் தமிழ்நாட்டின் மின்சாரப் பிரச்சினை தீர்ந்து இன்றுவரை அமைதி நிலவுகிறது என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்கிறேன் நான் !

### 1996இல் கூட்டுறவு, உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சராக நான்;

1996இல் அண்ணன் முத்தமிழறிஞர் கலைஞர் நான்காம் முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அவர் என்னிடம் கூட்டுறவு, உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் பொறுப்பைத் தந்தார்.

**அப்போது, அண்ணன் கலைஞர் அவர்களின் அறிவுரைகளை ஏற்று - எல்லா உணவு அட்டைகளுக்கும் 20 கிலோ அரிசி மாதந்தோறும் வழங்கச் செய்தேன். தமிழ்நாட்டில் பட்டினிச் சாவு இல்லாத நிலை ஏற்பட்டது. ஒன்றிய அரசு அரிசியின் விலையை கிலோ ரூ.11.80 என உயர்த்திய போதும் மக்களுக்கு ரூ.3.50. விலையிலேயே வழங்கினேன். அதன்மூலம் அண்ணன் கலைஞர் அவர்களின் பாராட்டு கிடைத்தது எனக்கு.**

அது மட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதிலும் ஏழை எளியோர்க்கு மண்ணெண்ணெய் வழங்கும் 500 நிலையங்களை நிறுவினேன்.

5291 புதிய நியாய விலைக் கடைகளும், முழுவதும் மகளிரே நடத்தும் 210 கடைகளும், அப்போது புதிதாகத் திறக்கப்பட்டு; மக்கள் அனைவரும் கலைஞர் அரசைப் பாராட்டினர்.

### 2006இல் போக்குவரத்துத் துறை அமைச்சராக நான்!

2006இல் அண்ணன் கலைஞர் அவர்கள் ஐந்தாம் முறை முதலமைச்சரானபின் என்னைப் போக்குவரத்துத் துறை அமைச்சராக்கினார்.

**போக்குவரத்துத் துறையில் அண்ணன் கலைஞர் அவர்களின் அறிவுரைகளைப் பெற்றுப் புரட்சிகரமான பல திட்டங்களை நிறைவேற்றினேன் என்பதை எண்ணும்போது பெருமித உணர்வு என் நெஞ்சில் ஊற்றெடுக்கிறது.**

**2006-2011 ஐந்து ஆண்டுகளிலும் ஒரு பைசாகூட பேருந்துக் கட்டணத்தை உயர்த்திடாமல் சீரிய முறையில் நிர்வாகத்தை நடத்தி, வருவாயைப் பெருக்கி: ஐந்து ஆண்டுகளில் 15,130 பேருந்துகள் புதிதாகக் கொள்முதல் செய்யப்பட்டன என்பது ஒரு வரலாறு.**

**ஓட்டுநரின் கல்வித் தகுதி 10ஆம் வகுப்பு தேர்ச்சி என்பதை 8ஆம் வகுப்பு தேர்ச்சி எனக் குறைத்து, ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைப் பெற்று கலைஞர் அரசைப் பாராட்டினர்.**

முன் எப்போதும் இல்லாத சாதனையாகப் போக்குவரத்துத் துறையில் ஓட்டுநரும், நடத்துநருமாக ஏராளமானோர் புதிதாக நியமனம் செய்யப்பட்டனர்.

தொழிலாளர் ஊதிய ஒப்பந்தத்தை அ.தி.மு.க. அரசு 5 ஆண்டுகளாக உயர்த்தியது. அதை மீண்டும் 3 ஆண்டுகளாக குறைத்து தொழிலாளர் நெஞ்சில் இன்பம் ஏற்படச் செய்தேன். 2004ஆம் ஆண்டில் 20 சதவீத போனஸ் கேட்டுப் போராடிய தொழிலாளர்களைத் தீபாவளி நேரம் என்பதைக் கூட எண்ணிப் பாராமல் அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது அன்றைய அ.தி.மு.க. அரசு.

ஆனால், கலைஞர் அரசில் 2006 முதல் 2011 ஐந்து ஆண்டுகளிலும் தொழிலாளர்கள் கோரிக்கை வைக்காமலேயே 20 சதவீத போனஸ் வழங்கி, அவர்களின் வாழ்வில் வசந்தம் வீசச் செய்தேன்!

போக்குவரத்துத் தொழிலாளர்களின் நீண்டநாள் கோரிக்கைகளை ஏற்று, அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை நிறைவேற்றினேன். அதைச் சென்னை சீரணி அரங்கில் தொடங்கி வைத்து வாழ்த்திய கலைஞர் என்னை வெகுவாகப் பாராட்டினார்.

குக்கிராம மக்களுக்கும் பேருந்து வசதியை ஏற்படுத்திட, “மினிபஸ்” திட்டத்தைத் தொடங்கி வைத்து 4,446 சிறு பேருந்துகள் கிராமப் புறங்களில் இயக்கப்பட்டுப் பொது மக்களின் பாராட்டுகளைக் குவித்தது போக்குவரத்துத் துறை.

இப்படி, கலைஞர் அரசு தமிழ்நாட்டு மக்களிடம் பாராட்டுகளைக் குவித்திடச் செய்ததில் நான் பொறுப்பேற்று வழிநடத்திய துறைகளின் பங்கு மிகுதியானது என்பதைப் பெருமிதத்துடன் இன்று குறிப்பிட விரும்புகிறேன்.

என்றாலும், **என்னை இயக்கி, ஓய்வின்றி உழைத்து நான் வெற்றிகளை ஈட்டிடும் ஆற்றல் பெற்றவனாக விளங்கிட எண்ணைச் செதுக்கிய தேவன் ! - என் அரசியல் ஆசான்! தமிழ்நாட்டு மக்களால் மட்டுமல்லாமல், இந்திய அரசியல் வரலாற்றிலும் ஒரு தலைசிறந்த ஆட்சிக்கலை அறிஞராகப் போற்றப்படும் மாமேதை அண்ணன் கலைஞர் அவர்கள்தான் என்பதை ஒவ்வொரு நொடியிலும் எண்ணி எண்ணி மகிழ்ந்து வணங்குகிறேன் என்பதை அண்ணன் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் இவ்வேளையில் நன்றியுடன் குறிப்பிடுவதில் அளவிலா ஆனந்தம் அடைகிறேன்!**

வாழ்க அண்ணன் கலைஞரின் புகழ் !

## கருணையும், நிதியும்!



கலைஞருக்கு அவருடைய பெற்றோர் வைத்த பெயரின்படி – அவர் பெயர் கருணாநிதி; கருணையும் இருக்கிறது, நிதியும் இருக்கிறது, என்று சொன்னார் பெரியவர் செங்கல்வராயன்.

என் பெற்றோர் சரியாகத்தான் பெயர் வைத்தார்கள். கருணை அதிகம் இருக்கிறது. அது மூன்றெழுத்து – கருணை; நிதி, குறைவாகத்தான் இருக்கின்றது. அதனால்தான் இரண்டு எழுத்து – நிதி, நிதி குறைவாக இருக்கிறது.

கருணை அதிகம் இருந்தாலும் கூட, தவறு செய்பவர்களைக் கண்டால், அது, ‘ கருணை ’ – கடுமையாக மாறும் என்பதையும்; தவறு செய்யாதவர்கள்தான் தமிழகத்தைக் காப்பாற்றக் கூடியவர்கள் – வருங்காலத்தை நிர்மாணிக்கக் கூடியவர்கள் – புதிய சமுதாயத்தை உருவாக்கக் கூடியவர்கள் என்பதையும்; நான் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

- கலைஞர்

# முத்தமிழறிஞர் கலைஞரும் நானும்!

முனைவர்
க.பொன்முடி
கழக துணைப் பொதுச் செயலாளர்

எனக்கு “பொன்முடி” என இனமானப் பெயர்சூட்டித் திராவிடப்பாதையில் நான் வீறு நடை போட்டு நடக்க வழிகோலியவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை எப்போதும் நான் நன்றியுடன் நினைத்துக் கொள்வேன்.

திராவிட இயக்கத்தில் நான் நுழைந்ததற்கும் இன்றுவரை திராவிடக் கொள்கைகளுடன் வாழ்ந்துகொண்டிருப்பதற்கும் தலைவர் கலைஞர் அவர்கள் எனக்களித்த ஊக்கம் தான் முழு முதற்காரணம்.

நான் தலைவர் கலைஞரைச் சந்தித்திருக்காவிட்டால் ஒரு பேராசிரியராகவே வாழ்ந்து முடிந்திருப்பேன். தலைவர் கலைஞரால் ஒரு சமூகப் போராளியாக, திராவிடக் கொள்கை மறவனாக, சுயமரியாதை உணர்வாளனாக, வீதியில் இறங்கிப் பொதுமக்களுடன் மக்களாகக் கலந்துபழகிப் பணி செய்யும் பகுத்தறிவாளனாகச் செதுக்கப்பட்டவன் நான்.

தலைவர் கலைஞரைப் பற்றி நான் சிந்திக்காத நாளில்லை. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளால் அதிகம் கவரப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தம்முடைய திருவாரூர் நண்பர்களுடன் சேர்ந்து மாணவர்கள் அணி ஒன்றையும், கையெழுத்துப் பிரதியாக ‘மாணவ நேசன்’ என்ற மாத இதழ் ஒன்றையும் 1942-ல் தொடங்கினார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எப்படி இளம் வயதிலேயே சக மாணவர்களை ஈர்த்தாரோ, அதைப்போல என்னையும் ஈர்த்துத் தம் வசமாக்கினார்.

1969-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அரசியல்துறைச் செயலாளராக நான் இருந்தேன். அப்பொழுதுதான் கலைஞரைச் சந்திக்கும் முதல் வாய்ப்பினைப் பெற்றேன். அப்பொழுது மொழிப் போரில் துப்பாக்கிக் குண்டுக்கு இரையான மாணவர் “இராசேந்திரன்” சிலையைத் திறந்து வைத்தார், தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்த அந்த முதல் வாய்ப்பே எனக்கு மாபெரும் வாய்ப்பாக அமைந்துவிட்டது. அதன்பின் கலைஞர் கருத்துகளால் தொடர்ந்து ஈர்க்கப்பட்டு, 1971-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் (தி.மா.மு.க.) செயலாளராகப் பல்வேறு மாணவர்களைத் தி.மு.கழகத்துடன் தொடர்புபடுத்தும் பணியை நிறைவேற்றித் தேர்தல் பரப்புரையிலும் ஈடுபட்டேன்.

**ஒரு சாதாரண எளிய குடும்பத்தில் ‘தெய்வசிகாமணி’ என்ற பெயருடன் திருக்கோவிலூரில் பிறந்தேன். கலைஞரை நான் சந்தித்தபோது, என் பெயர் குறித்து, “அது என்ன ‘தெய்வசிகாமணி (என்ற) பொன்முடி’ - பொன்முடி என்ற பெயரே இனமானப் பெயராக இருக்கு, அதனையே அங்கீகாரப் பெயராக அரசிதழில் மாற்றிக்கொள்” என்று கலைஞர் அவர்கள் என்னை அறிவுறுத்தினார்கள். அவ்வாறுதான் ‘தெய்வசிகாமணி’ என்ற என் பெயர் ‘பொன்முடி’யாக மாறியது.**

சைதாப்பேட்டைத் தேர்தலில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 1971-ல் களம் கண்டபொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் கலைஞருக்காகத் தேர்தல் பணியாற்றினேன். அப்பொழுது அண்ணன் முரசொலி செல்வம் அவர்களுடனும், தளபதி அவர்களுடனும் பழகும் நல்வாய்ப்பினைப் பெற்றேன். அதன் தொடர்ச்சியாக கலைஞர் அவர்களுடன் நெருங்கிப் பழகும் பெரும் பேறும் பெற்றேன்.

கலைஞர் அவர்கள் 1989-ல் எனக்குத் தேர்தலில் நிற்க இடம் கொடுத்து, வெற்றியும் பெறவைத்து என்னை அமைச்சராகவும் அமர்த்திச் சிறப்பித்தார். விழுப்புரத்தில் என் தம்பியின் திருமணத்தில் வாழ்த்துரை வழங்கியபோது என்னைப் பற்றி, “ஆழ்கடலில் கண்டெடுத்த நன்முத்து பொன்முடி - அறிவு முடி” என்றார்.

தலைவர் கலைஞருடன் நான் உரையாடிய தருணங்கள் - மறக்கமுடியாத என் நினைவுகளைப் பகுத்தும் தொகுத்தும் உடன்பிறப்புகளான உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

**1989ல் நான் M.M.D.A. (தற்பொழுது CMDA) துறைக்கு அமைச்சராக இருந்தபோது அத்துறைக்கு எழும்பூர் இயில் நிலையம் எதிரில் ஓர் அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு அதற்கு என்ன பெயர் வைப்பது என ஒரு கோப்பு என்னிடம் வந்தது. தலைவரிடம் எடுத்துச் சென்றேன். அவர் வைத்த பெயர் : மொழிப்போர் தியாகிகளான “தாளமுத்து நடராசன் மாளிகை”. இப்பெயரைச் சூட்டிவிட்டுச் சொன்னார்: “எழும்பூரில் இரயிலில் இருந்து இறங்குபவர்களின் கண்ணில் முதலில் தமிழுக்காகச் சிறைப்பட்டு உயிர்நீத்த இவ்விருவரின் பெயரும் தெரிய வேண்டும்” என்றார்.**

**ஒரு மாபெரும் இயக்கத்தின் அடிமட்டத் தொண்டர்களின் பெயர்களை களப்பலியான உயிர் ஈகிகளின் பெயர்களை வரலாற்றில் பதியவைத்துவிட வேண்டும் என்று நோக்கங் கருதிச் செயல்பட்டவர் தலைவர் கலைஞர். திராவிட இயக்கத்திற்காகப் பாடுபட்ட தீரர்கள் ஒவ்வொருவரின் பெயரும் நினைவும் போற்றப்பட வேண்டும் என்பதே கலைஞரின் கொள்கை. தாளமுத்து நடராசனுக்கு வரலாற்றில் இடம்பிடித்துக் கொடுத்ததால், தன்னிகரற்ற தனிப்பெரும் தலைவராக கலைஞர் அவர்கள் வரலாற்றில் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறார். இதற்கு கலைஞரின் தமிழ்மொழிப் பற்று மட்டும் காரணமில்லை; கலைஞரின் இனமானப் பற்றும் காரணமாகும். இன்றைய முதல்வர் தளபதியிடமும் அத்தகைய மொழிப் பற்று, இனப்பற்று, சுயமரியாதைப் பற்று இருப்பதை நாம் பார்க்கிறோம்.**



பொறியியல் கல்லூரிகளில் தமிழ்வழிப் படிப்பு, அனைத்து விளம்பரப் பலகைகளிலும் தமிழிலேயே எழுத வேண்டும், அரசுப் பணியில் சேர தமிழில் தேர்ச்சி பெறவேண்டும் என்ற தளபதியின் நடவடிக்கைகளுக்கு கலைஞர் வகுத்த வழியே காரணம் ஆகும்.

ஒருமுறை கலைஞரிடம் ஒருவர் சமையல் அறையில் மனு ஒன்றினை அளித்தார். “என்னய்யா, சமையல்கட்டில் இருந்து ‘மெனு’ வரும் என்று பார்த்தால் ‘மனு’ வருகிறதே!” என்றார் கலைஞர். அருகில் இருந்த அனைவரும் கொல்லென சிரித்துவிட்டனர்.

அண்ணன் ஆர்க்காட்டார், துரைமுருகன், ஜெகத்ரட்சகன் ஆகியோரும் நானும் கலைஞருடன் இரவு 7.00 மணிமுதல் அவர் உறங்கச் செல்லும்வரை உரையாடிக் கொண்டிருப்போம். அந்த உரையாடல் சமயங்களில் அவரிடமிருந்து நகைச்சுவை எவ்வித இடரும் இன்றி உடனடியாக வெளிப்படும். நகைச்சுவை என்பது எப்போதும் அவரது வாழ்வின் ஒரு அங்கமாகவே இருந்தது.

‘நீட்’ தேர்வு குறித்து ஒருநாள் விவாதத்தின் பொழுது, “திறமையில் வெளிநாட்டுக்காரர்களையெல்லாம் மிஞ்சக்கூடிய மருத்துவர்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நீட் தேர்வு எழுதி மருத்துவம் பயின்றவர்களா?” என்றார் கலைஞர் அவர்கள். இன்று நீட் தேர்வுக்கு எதிராக தம்பி உதயநிதி போராடி வருவதைக் காணும்போது, கலைஞர் அவர்கள் அன்று சொன்னது என் நெஞ்சில் நிழலாடுகிறது.

கலைஞருடன் ஆன்மிகவாதி ஒருவர் உரையாடும்பொழுது, “ஆண்டவன் முன் அனைவரும் சமம்” என்றார். “அப்படியென்றால் அறங்காவலர் குழுவில் ஆதிதிராவிடர் ஒருவரைப் பிரதிநிதியாக நியமிப்போம்” எனச் சொன்னதோடு, அதனை உடனே நிறைவேற்றி ஆதிதிராவிடரும் உள்ளடங்கிய அறங்காவலர் குழு அமைக்க ஆணையிட்டவர், கலைஞர் அவர்கள்.

தற்பொழுதோ, நாட்டின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவரே கோவிலுக்குள் நுழைய முடியாத அவல நிலை உள்ளபோது, அந்நாளில், அறங்காவலர் குழுவில் ஆதிதிராவிடரைச் சேர்க்க வேண்டும் என கலைஞர் அவர்கள் கொண்டுவந்த விதிகளை நினைத்துப் பார்க்கின்றேன்.

சட்டசபை விவாதங்களில்; மறைந்த ஜெயலலிதா அவர்களுடன் ஆவேசத்துடன் விவாதத்தில் ஈடுபட்டபோது, கலைஞர் அவர்கள், “நானே முன் காலத்தில் கோபக்காரன்; பார்த்துப் பேசு” என்று எனக்கு அறிவுரை வழங்கியது என் நெஞ்சில் நிழலாடுகிறது.

2016 சட்டமன்றத் தேர்தல் முன்னெடுப்பு சமயத்தில், கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற சமயத்தில், “பொன்முடி, எனக்கு சாப்பாட்டில்கூட கூட்டுதானய்யா பிடிக்கும்” எனச் சொல்லி, “தேர்தல் கூட்டணி வேலைகளைப் பாருங்கள்” என்றார் தலைவர் கலைஞர் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அறிவுரையை நெஞ்சிலேந்தி, தலைவர் தளபதி அவர்கள் “INDIA” கூட்டணியை வெற்றி காண வைத்திட பெரும் முயற்சி எடுத்துப் பாடுபடுகிறார்.

கலைஞரிடமிருந்து நான் கற்றுக்கொண்டவை ஏராளம். அவருடன் பயணித்த எனக்கு அவர் அளித்த கருத்துகள், உரையாடல்கள், கதைகள் மற்றும் நகைச்சுவைகள் பற்றி மட்டும் தனி நூலே வெளியிடலாம்.

நான் கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றிய காரணத்தினாலும், தமிழ்நாடு மக்கள்மீது பற்றுக் கொண்ட கலைஞர் அவர்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களை சமுதாயத்தில் மேன்மையடையச் செய்ய வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையில் என்னை உயர்கல்வி அமைச்சராக்கினார். அப்பொழுது கலைஞர் அவர்கள் என்னிடம், “கூழாங் கற்களை வைரமாக்கும் கல்விமுறை வேண்டும்; வைரத்தில் எண்ணெய் இறங்கிடவைத்திடும் கல்விமுறை கூடாது” என்றார். அதனை நினைவில் கொண்டுதான், பொறியியல் கல்லூரிகளுக்கு நுழைவுத் தேர்வு ரத்து, கலைக் கல்லூரிகளில் சுழற்சி முறை (Shift System) கொண்டுவந்து மாணவர் சேர்க்கையின் அளவு இருமடங்காக உயர்ந்து ஏழை மாணவர்கள் பயனடைந்தனர்.

முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை, மாணவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகை போன்ற பல நலத்திட்டங்களைக் கொண்டுவந்தார் கலைஞர். நானும் கலைஞர் அவர்கள் கூறிய, “கூழாங்கற்களை வைரமாக்கும் கல்விமுறை வேண்டும்” என்ற குறிப்பறிந்து செயல்பட்டேன்.

கல்வியறிவு பெற்றால் மட்டுமே இச்சமூகம் மேன்மையடைய முடியும் என்ற உன்னத நோக்கத்தோடு, உயர்கல்வியில் மிகப் பெரிய சமூக மாற்றங்களை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் செய்தார்கள். இன்று பாமரனும் படிப்பறிவு பெற்றான் என்றால், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த தனித்துவம் வாய்ந்த உயர் கல்விக் கொள்கையே அதற்குக் காரணம் ஆகும்.

அடித்தட்டு மக்களுக்கான மகத்தான நம்பிக்கையே, தலைவர் கலைஞர் அவர்கள்தான். ஏழைகளுக்கும் எதிரிகளுக்கும் அவரே ஏணி. நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய நிர்வாகப் பேராளுமை அவர். இன்னும் ஆயிரம் வருடங்கள் கடந்தாலும், தமிழுக்கும் தமிழருக்கும் கலைஞர் செய்தவை; அவர் பெயரை என்றென்றும் வரலாற்றில் பொன்னெழுத்துகளாய்க் கல்வெட்டாய் நிலைநிறுத்தும்.

**கலைஞரின் மரணம் எனக்கும் தமிழினத்திற்கும் மாபெரும் துயரம் ஆகும். என் தந்தையை இழந்தது போல், என் பகுத்தறிவு ஆசானை இழந்ததுபோல், எப்போதும் என்னை வழிநடத்தி வந்த ஒரு இலட்சியச் சுடரை இழந்ததுபோல், பெறற்கரிய நயத்தகு நாகரிகச் சான்றோரைப் பறிகொடுத்து நிற்கிறேன்.**

**கலைஞரைப் பார்த்தேன், கலைஞருடன் பழகினேன், கலைஞருடன் பேசினேன், கலைஞருடன் உணவருந்தினேன், கலைஞர் காலடியில் அமர்ந்திருந்தேன், கலைஞருடன் சட்டசபையில் அமர்ந்திருந்தேன், அன்பு மழையில் நனைந்தேன் என்பதை விட வேறு பெருமை எதுவும் எனக்கு இந்த வாழ்வில் இல்லை.**

காலம் போற்றும் வகையில் தமிழ்நாட்டில் நல்லாட்சி வழங்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டு விளிம்புநிலை மக்களுக்கு அவர், அதிகாரத்தையும், சுயமரியாதையையும் சட்டத்தின் மூலம் கிடைக்கச் செய்ததை ஒருநாளும் எவராலும் மறக்க முடியாது.

**வங்கக் கடலோரம் துயில் கொண்டு மீளாத் துயரில் எங்களை விட்டுச் சென்று தமிழ்நாட்டு மக்கள் மனங்களில் என்றும் இறவாப் புகழ் கொண்டுவிட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே, மறுபடியும் எழுந்து வாருங்கள்!**

**தாங்கள் என்னை வாஞ்சையோடு கரகரத்த குரலில் “தம்பி பொன்முடி” என்று அழைத்த அந்த மந்திர வார்த்தையை ஒரு நாளும் மறவேன்!**


**வாழ்க கலைஞர் புகழ்!**

**வெல்க தமிழ்!**

## திராவிடர் இயக்கமும், பாரதியும்!

திராவிடர் இயக்கம் ஒரு காலத்தில் பாரதியை ஏற்றுக் கொள்ளவில்லைதான். ஆனால், திராவிடர் இயக்கம் இன்றைக்கு பாரதியை ஏற்றுக் கொள்கின்ற அளவுக்கு உங்கள் முன் வந்து நிற்கிறது என்றால், அது பாரதி பெற்ற பெருமை, பாரதியின் சிறப்பு, பாரதியின் பாட்டுக்குள்ள வலிமை; அவருடைய கருத்துக்கு உள்ள பலம் என்பதை நாம் ஒத்துக்கொண்டுதான் தீர வேண்டும்.

பாரதி, கடவுள்களைப் பற்றிப் பாடினார்; பராசக்தியைப் பற்றி, கண்ணனைப் பற்றிப் பாடினார் என்பதையெல்லாம் வைத்துக் கொண்டு, திராவிடர் இயக்கம் அல்லது சுய மரியாதை இயக்கம், அவரைப் புறந்தள்ளிவிட முடியாது.



புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், எத்தனையோ சுயமரியாதைக் கருத்துகளைப் பாடல்களாகத் தந்திருக்கிறார் என்றாலும் கூட, அவர் தொடக்கத்திலே பாடியது சுப்ரமணிய துதி அமுதுதான். பாரதிதாசன், சுப்ரமணிய துதி அமுது பாடினார் என்பதற்காக, அவர் பாடியுள்ள பகுத்தறிவுக் கருத்துகளையெல்லாம் தள்ளிவிட முடியாது. அவர் கதர்ப் பாட்டு, ராட்டைப் பாட்டு பாடினார் என்பதற்காக, அவருடைய புரட்சிக் கருத்துகளையெல்லாம் ஏற்றுக் கொள்ள இயலாது என்று சொல்லிவிட முடியாது.

அதைப் போல, பாரதியார் கடவுள் பாட்டு பாடினார், பராசக்தி பாட்டு பாடினார் என்றாலும், அதிலே பொதிந்து கிடக்கும் கருத்துகளையெல்லாம் எண்ணிப் பார்த்த காரணத்தால் தான், கனக சுப்புரத்தினம் என்ற தன்னுடைய இயற்பெயரை, பாரதிக்குதாசன் என்று புரட்சிக் கவிஞர் மாற்றிக் கொண்டார்.

**-கலைஞர்**

# கலைஞர் எனும் உடையாத பனிக்குடம்!

ஆ.இராசா எம்.பி.,
துணைப் பொதுச்செயலாளர், தி.மு.க.

**“நீ அரசியல் வீட்டுக்குள்
கிரகப்பிரவேசம் நடத்திய பிறகுதான்
தமிழர்கள் தங்கள் வீட்டுக்கு
வெள்ளையடித்துக் கொண்டார்கள்.
நீ -
அரியாசனம் ஏறிய பிறகுதான்
தமிழர்களுக்கு ஒரு யோகாசன வலிமை வந்தது.’**

தலைவர் கலைஞரின் மணி விழாவுக்காக முசிறி அரசு கலைக்கல்லூரி, இளங்கலை கணித மாணவனாக இருந்தபோது, நான் எழுதி அனுப்பிய புதுக் கவிதையின் சில வரிகள் இவை. முழுக் கவிதையையும் ‘உண்மை’ இதழ் (15.7.1984) வெளியிட்டபோது, அவரை தொலைவிலிருந்து மட்டுமே பார்த்தும் படித்தும் என்னுள் வரித்துக் கொண்டவனாயிருந்தேன்.

பின்பு தமிழ்க்குடிமகன் அவர்கள் மதுரை யாதவர் கல்லூரி முதல்வராக இருந்தபோது நடைபெற்ற கல்லூரிகளுக்கான பேச்சுப் போட்டியில், மதுரை சட்டக் கல்லூரி மாணவனாக (1986) கலந்து கொண்டு நான் பெற்ற பரிசுதான், தலைவர் கலைஞர் அவர்களின் விரல்களைத் தொடுவதற்கும், என்னைப் பாராட்ட ஓரிரு வாழ்த்து முத்துகளை என் காதுகளில் அவர் அள்ளித் தெளிப்பதற்கும், தட்டிக்கொடுத்து என் தோள் மீது அவரது கை படுவதற்கும் காரணமாக இருந்தது. அந்த விநாடிகளில் நான் இந்த மண்ணில் மீண்டும் பிறந்ததாக உணர்ந்தேன்.

அவரையும் அவருடைய தமிழையும் அவற்றோடு கலந்த அவரின் அரசியல் ஆளுமையையும் அறிவதற்கு நான் அப்போது காட்டிய ஆர்வம், பின்னாளில் அரசியலில் நான் நுழைவேன் என்பதற்கான முகாந்திரமாக இருந்ததில்லை. பின்னாளில் கலைஞரின் ‘போர்வாள்’ என்று அழைக்கப்பட்ட வைகோ அவர்களின் பிரிவால் ஏற்பட்ட ‘இடைவெளி’ எங்களைப் போன்ற இளைஞர்களை அரசியலிலும் கழகத்திலும் கை நீட்டி வரவேற்று இடமளித்தது. விளைவு, 1996ஆம் ஆண்டு பெரம்பலூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆனேன். மதிப்பிற்குரிய ஆண்டிமடம் சிவசுப்பிரமணியன் அவர்களும், அமைச்சர் கே.என்.நேரு அவர்களும் தலைவர் கலைஞரிடம் என்னை அறிமுகப்படுத்தி முன்னிறுத்தியதால் கழகத்திலும் தேர்தல் களத்திலும் தொடங்கியது என்னுடைய பயணம்.

அன்று முதல் தலைவர் கலைஞரைப் பின்னொற்றி ஒரு புள்ளியாய்த் தொடங்கிய எனது அரசியல் பயணத்தைப் பெரும் கோலமாய் ஆக்கி, இறுதிவரை கலையாமல் காப்பாற்றி, தன்னோடு என்னை அரவணைத்த அன்னை அவர்.

2007 டிசம்பர் மாதம் இன்றைய முதல்வர் அன்றைய இளைஞரணிச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இளைஞரணியின் முதல் மாநில மாநாட்டில் (திருநெல்வேலி) இளைஞரணியின் அணிவகுப்பைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பினை தலைவர் கலைஞர் எனக்கு வழங்கினார்.

அம்மாநாட்டில் நிறைவுப் பேருரையாற்றும்போது குறிப்பிட்ட வாசகங்கள் இன்னமும் என்னுள் நன்றியாய் ஊற்றெடுத்துக் கண்ணீராய் மாறி கன்னத்தில் அவ்வப்போது வழிந்தோடும். “நான் தம்பி ஸ்டாலினுக்குச் சொல்கிறேன், உனக்கு நான் தந்தை என்றாலும்கூட, என்றைக்கும் நான் குடும்ப உறவோடு, குடும்பப் பாசத்தோடு, குடும்பம் தான் பெரிது என்று நடந்தவன் அல்ல என்பது உனக்கு நன்றாகத் தெரியும். என்னுடைய வாழ்க்கையில் என்னை அறிந்தவர்கள் உணர்வார்கள். பேராசிரியர் உணர்வார், வீராசாமி உணர்வார், தம்பி துரைமுருகன் உணர்வார். அண்மைக்காலமாக என்னோடு அதிகமாக இருக்கிற தம்பி ஆ.இராசா உணர்வார்.” (முரசொலி 17.12.2007) என்று அவர் குறிப்பிட்ட வாசகம்தான் என்னை இப்போதும் எப்போதும் இயக்கும் சக்தியாகவே உணருகிறேன். தலைவர் கலைஞர் அவர்களின் அந்த நம்பிக்கையை, என் வாழ்நாளின் கடைசி நிமிடம் வரை நெஞ்சில் நிறுத்தி, கழகம் காக்க வேண்டும் என்ற கடமை உணர்ச்சியும், நன்றிப் பெருக்கும் என்னுள் இப்போதும் ஒருங்கே பீறிடுகின்றன. இதயத்தில் இவ்வளவு பெரிய இடத்தை எனக்கு அவர் கொடுக்கக் காரணம் என்ன?

**கட்சிக்குள் பல தரப்பட்ட தொண்டர்கள், தலைவர்கள், களப்பணியாளர்கள், இட்ட ஆணையை நிறைவேற்றும் வல்லமை ஆற்றல்மிக்க தளகர்த்தர்கள், அவருக்காக உணர்ச்சி மேலிட்டு உயிர் கொடுக்கவும் துணியும் தொண்டர்கள் பலர் இருந்தாலும் அவர்களையெல்லாம் அன்பால் பாசத்துடன் அவர் அரவணைத்து, கட்டிக் காப்பாற்றும் சகோதரனாய், நண்பனாய், தந்தையாய் அவர் இருந்தபோதும், அவருக்குள் எப்போதும் இமைப்பொழுதும் அகலாமல் இருந்தவை திராவிடக் கொள்கைகளும், அதற்கு அரணாய் விளங்கும் பெரியாரும் அண்ணாவும்தான்.**

நாடாளுமன்றத்தில் என்னை நெறிப்படுத்திய என் ஆசான் முரசொலி மாறன் அவர்கள் 2002ஆம் ஆண்டு அப்போலோ மருத்துவமனையில் எதிர்கொண்ட இதய நோய்க்காக அறுவை சிகிச்சை மேற்கொண்ட நேரம் அது. தினமும் காலை மாலை இருவேளையும் தலைவர் கலைஞர் அவர்கள் முரசொலி மாறன் அவர்களின் உடல் நிலை குறித்து அறிய மருத்துவமனைக்கு வருவார். நான் அப்போது ஒன்றிய மருத்துவத்துறை இணை அமைச்சர் என்பதால், நானும் அவருக்கு உதவியாக மருத்துவமனையிலேயே தங்கிவிட்டேன். தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அண்ணன் மாறன் அவர்களின் உடல்நலம் கருதி, பார்வையாளர்கள் அவரைப் பார்க்க வரவேண்டாம் என்று மருத்துவர்கள் கண்டிப்பாக அறிவுறுத்தினர்.

அதுதான் ஒரு நோயாளிக்கு நல்லது என்று தீர்க்கமாய் எப்போதும் இருப்பவர் தலைவர் கலைஞர். நான் தினமும் தலைவர் கலைஞருக்கு அண்ணன் மாறன்



அவர்களின் உடல்நிலை குறித்து விளக்கும் கடமையை ஏற்றுக்கொண்ட பணிவான தம்பியாய், துறை அமைச்சராய் அவர்முன் அன்றாடம் நிற்கின்ற வாய்ப்பு அப்போதுதான் நேர்ந்தது.

அந்த நேரத்தில் வெளியில் ஒரு பொது நிகழ்ச்சியில் பேசிய தலைவர் கலைஞர், சாதி மத பேதங்கள் கூடாது என்று வலியுறுத்த நினைத்தவர், ‘இந்து’ என்ற சொல்லுக்கு ‘திருடன்’ என்று அகராதியில் ஒரு பொருள் இருப்பதாகப் பேசிவிட்டார். கூட்டணியில் இருந்த வெங்கையா நாயுடு முதல், வெறுப்புகளைப் பேசும் காவிக் கும்பல்கள் வரை கலைஞரை எதிர்த்து கண்டனக்குரல் எழுப்பினர்.

அடுத்த நாள் அப்போலோ மருத்துவமனைக்கு வந்த தலைவர் கலைஞர், அவரோடு வந்திருந்த பேராசிரியர் மற்றும் ஆற்காட்டார் ஆகியோருடன் இதுகுறித்த விவாதத்தில் இருந்தபோது, அண்ணன் மாறன் அவர்களின் உடல்நிலை குறித்து விளக்க அறைக்குள் நுழைந்த நானும் அந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டேன். அப்போது, பயம் கலந்த பணிவோடு, “அய்யா, நீங்கள் கூட்டத்தில் சொன்னது சரிதான்; பேராசிரியர் அவர்களும் திராவிடர் கழக மாநாட்டில் ஏற்கனவே அதை விளக்கிப் பேசியிருக்கிறார். அப்படி ஒரு பொருள் உண்டு என்பது மட்டுமன்று, ‘இந்தியாவுக்குச் சொந்தமான எதுவும்’ (Anything belonging to India), ‘ஒரு பண்பாடற்ற மனிதன்’ (An uncultured broot), ‘விகாரமான ஒரு கறுப்பு நிறத்தவர்’ (Black and ugly) என்று மேலும் மூன்று பொருள்கள் உண்டு. நீங்கள் குறிப்பிட்ட ‘திருடன்’ (A Dacoit) என்ற பொருளும் உண்டு. ‘இந்தி சப்தசாகர்’ என்ற அகராதியில் இவை உள்ளன. அதை வெளியிட்டது வாரணாசியில் உள்ள நாகரிணி பிரச்சார சபா... இராமச்சந்திர வர்மா என்ற சமஸ்கிருத அறிஞர் அதன் ஆசிரியர் என்று குறிப்பிட்டதுடன், அந்தப் புத்தகம் எனது டெல்லி வீட்டில் இருக்கிறது. அதைக் கொண்டு வர ஏற்பாடு செய்கிறேன்” என்று சொன்னேன்.

அப்படியே அடுத்த நாள் காலை எட்டு மணிக்கு அந்தப் புத்தகத்தோடு கோபாலபுரம் சென்றேன். கலைஞரின் தனிச் செயலர் மறைந்த சண்முகநாதனிடம் அந்தப் புத்தகத்தைக் காட்டினேன். அவர் தலைவரிடம் இன்டர்காமில் செய்தியைச் சொன்னார். இருவரையும் தலைவர் மேலே அறைக்கு வரச் சொன்னார். அந்தப் புத்தகத்தில் குறிப்பிட்ட பக்கத்தை வண்ணத்தாளில் குறியிட்டு தலைவரிடம் கொடுத்தோம். பத்து நிமிடம் அட்டைப்படம் முதல் அந்தக் குறிப்பிட்டப் பக்கம் உள்ளிட்ட பகுதிகளைப் படித்துவிட்ட தலைவர் கலைஞர் அவர்கள் என்னை அருகில் அழைத்தார். நெகிழ்ச்சியும் நடுக்கமும் கலந்த உணர்வோடு நான் அவர் பக்கத்தில் சென்றேன். என் கரம் பற்றி அதில் முத்தம் ஒன்று கொடுத்தார். நான் இன்ப அதிர்ச்சி கலந்த ஆனந்தத்தில் தலைவர் காலில் விழுந்து வணங்கினேன்.

அன்று அனைத்து மாலை நாளிதழ்களிலும் தன் சொந்தச் செலவில் ‘இந்து’ என்பதற்கு என்ன பொருள் என்று அரைப் பக்கம் விளம்பரத்தை ஆதாரத்தோடு கொடுத்தார். 1920களில் பிறந்து 1960களில் இந்திய அரசியலிலும் இலக்கியத்திலும் உச்சம்தொட்ட தலைவர் கலைஞர் அவர்களின் முத்தப் பரிசும், 1960களின் இடையில் பிறந்த என் கையில்பட்டபோது ஆன்மிகப் பிடியில் திளைக்கும் ஒரு பக்தன் மருகுவதுபோல் உள்ளத்தால் மயங்கினேன். ஈரம் காயாத அந்த முத்தத்தில் அவர் நேசித்த திராவிடத் தத்துவத்தின்மீது அவருக்கு இருந்த தீராக்காதல் வெளிப்பட்டதை நினைவூட்டிக் கொள்ளும்போதெல்லாம் இப்போதும் என்னைப் புதுப்பித்துக்கொள்வதாக உணர்கிறேன்.

அவரின் சமூகநீதிப் பார்வையின் உயிர்ப்புக்கு எப்போதும் இறப்பே இல்லை. தன்மானத்தைவிட இனமானம் பெரிது என்பதில் பெரியாராகவே வாழ்ந்தவர் அவர். தி.மு.க. ஒன்றியத்தில் பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்து, அதில் நான் அமைச்சராகவும் இருந்த காலம் அது. ஆம், பா.ஜ.க.வின் மூலாதாரக் கொள்கையான, காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அதிகாரமான அரசியல் சட்டத்தின் பிரிவு 370ஐ நீக்குவது, அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தில் ராமர் கோயில் கட்டுவது, பொது சிவில் சட்டம் கொண்டு வருவது ஆகியவற்றை நிறைவேற்றக் கூடாது என்ற நிபந்தனையுடன்தான் அன்றைய கூட்டணி அமைந்தது. அந்தக் கூட்டணி திராவிடர் கழகத்துக்கு உடன்பாடாக இருக்கவில்லை. ஜெயலலிதாவுக்கு “சமூகநீதி காத்த வீராங்கனை” என்ற பட்டம் வழங்கி, தலைவர் கலைஞரையும், தி.மு.க.வையும் திராவிடர் கழகத்தின் தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்கள் கடுமையாக விமர்சித்து விடுதலையில் எழுதியது மட்டுமன்று; இருவரும் அரசியலில் எதிரும் புதிருமாய் இருந்த நேரம் அது.

**தினமும் விடுதலை நாளிதழை முதல் நாள் மாலையே தவறாமல் படிக்கும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டவர் கலைஞர். கடுமையான விமர்சனங்கள் வந்தால், தலைவர் மனம் காயப்படக் கூடாது என்பதற்காகத் தனிச்செயலர் சண்முகநாதன் உட்பட எவரும் இயன்ற வரை விடுதலை நாளிதழை மறைத்து வைக்கவே நாங்கள் முயற்சி செய்வோம். ஒருநாள் அது நடந்தது. “விடுதலை நாளிதழ் எங்கே?” என்று அன்றைய தினம் கேட்டார். விடுதலை இதழை தயக்கத்தோடு கொண்டு போய் தலைவரிடம் கொடுத்தோம். படித்துவிட்டு என்னைப் பார்த்தார். திராவிடர் கழகத்திலிருந்து தி.மு.க.வுக்கு வந்தவன் என்பதால் எள்ளலாகக் கேட்டார். “நான் விடுதலையைப் படித்தால் அது உன் குருநாதரைக் காட்டிக் கொடுத்து விடும் என்று தானே மறைத்தாய்” என்றார்.**

**“இல்லை; அவர்மீது எனக்கும் இப்போதெல்லாம் வருத்தம் உண்டு. உங்களுடைய மனம் வலிக்கக் கூடாது என்பதற்காகத்தான் விடுதலையை தரவில்லை” என்றோம். அவ்வளவுதான், “விடுதலை இப்படி வந்தால்தான் அவர் வீரமணி; இல்லையென்றால் அவர் ஈரமணி” என்றார். மலைப்பின் விளிம்புக்கே சென்று அவரின் காலைப் பற்றினேன். “வாக்கு வங்கி அரசியலில் ஓர் அரசியல் கட்சிக்குத் தேர்தல் நேரத்தில் வரும் கூட்டணி நெருக்கடிகளுக்கு நியாயங்கள் பல இருக்கலாம். ஆனால், கொள்கை அடிப்படையில் விமர்சனங்களை அறிந்துகொள்வதில் தயக்கம் வேண்டியதில்லை” என்ற அவரின் வார்த்தைத் தெறிப்பில் அவருடைய ஜனநாயக மாண்பு கண்டு வியந்தேன்.**

நீரடித்தா நீர் விலகும்? அந்தக் கொள்கைத் தலைவர்கள் பின்னர் இணைந்து, திராவிடத்துக்கு உற்ற துணையாய் ஓர் வழி நின்று, திராவிட சமூகத்துக்கு ஆற்றிய பணிகளும், அடுத்த தலைமுறைக்குத் தந்த அறிவுரைகளும் எத்தனை எத்தனை..? தனிமனித முரணை, தத்துவத்தின் முரணாக முன்னிறுத்தாமல், ஒரு விசாலப் பார்வையோடு, வேற்றுமைகளை விழுங்கும் அவரின் ஆளுமை என்னை மெய்சிலிர்க்க வைத்தது. பின்னாளில் இருவரிடமும் இந்த நிகழ்வைப் பகிரும்போதெல்லாம், அவர்களிடம் வெளிப்படும் அந்த வெள்ளந்திச் சிரிப்பில் திராவிடம் மலரும்!

நிறைய இருக்கிறது இன்னும், நினைவுகள் நீளப் பட்டுவிடக் கூடாது என்றாலும், நெஞ்சில் நின்ற சிலவற்றை மறைக்கக் கூடாது என்பதால் இன்னும் சில... 2ஜி வழக்கில் நான் பதவி விலகிய நேரம்... “தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, அண்ணல் அம்பேத்கர் போன்ற அரசியல் சீர்திருத்தத் தலைவர்கள் காட்டிய வழியில் தொடர்ந்து செல்பவரும், என் உள்ளம் கவர்ந்த தம்பிமார்களில் ஒருவராக விளங்கி வருபவரும், பழைய திருச்சி மாவட்டம், பெரம்பலூர் பகுதியில் பட்டிக்காட்டுப் பொட்டலில் பூத்துக் குலுங்கி வரும் புரட்சியாளர் அருமைத்தம்பி”... என்றெல்லாம் முரசொலியில் எழுதி என்னைப் பெருமைப்படுத்திய தலைவர் அவர்.

பிறகு பிணையில் வந்து வழக்கு நடக்கும் ஒவ்வொரு வாரத்தின் இறுதியிலும் அவரைச் சந்தித்து வழக்கின் முன்னேற்றம் குறித்துப் பேசுவேன். பொதுவாகக் குற்றவாளிகள் குற்றவியல் வழக்கில் தாமாக முன்வந்து கூண்டில் ஏறி சாட்சியம் அளிப்பதில்லை. அரசுத்தரப்பு சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்தாலே போதும். ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான இந்தியாவின் கவர்னர் ஜெனரல் வாரன் கேஸ்டிங் வழக்கு முதல் ஜெயலலிதா தண்டிக்கப்பட்ட சொத்துக் குவிப்பு வழக்கு வரை குற்றம் சாட்டப்பட்ட எவரும் சாட்சிக்கூண்டுக்குப் போனதில்லை. தேவையில்லாத சிக்கல் வரும் என்பது மட்டுமன்று, அது ஆபத்தும்கூட. அந்தச் சாட்சியத்தை அடிப்படையாக வைத்தே குற்றம்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்பட அதிக வாய்ப்பும் உண்டு.

**நானே சாட்சிக்கூண்டுக்குப் போய் சி.பி.ஐ.யின் குறுக்கு விசாரணையை எதிர்கொள்ள, நீதிமன்றத்தில் நானாக முன் வந்து மனு போட்டபோது, அவரைப் பலரும் குழப்பி விட்டிருந்தனர். “இதுதேவையா?” என்று என்னை சற்றே கடிந்த குரலில் கேட்டார். அவசியத்தை விரிவாக விளக்கிச் சொன்னேன். ஒரு நீண்டப் பெருமூச்சுக்குப் பின் அவர் சொன்னார்: “உன் நம்பிக்கையைப் பாராட்டுகிறேன். என்னைச் சந்திக்கும் பலரும் விசாரணை நீதிமன்றத்தில் தண்டனை பெறத்தான் நேரிடும் என்று அஞ்சுகின்றனர். எப்படியாவது நீ ஜெயித்து வரணும். இல்லையென்றால் இனிமேல் எந்த ஒரு தாழ்த்தப்பட்டவருக்கும் தொலைத் தொடர்புத்துறை போன்ற முக்கியத் துறைகளை நிர்வகிக்கும் திறமையும் அருகதையும் இல்லை என்று இன எதிரிகள் முத்திரை குத்தி விடுவார்கள்” என்று சொன்னபோது திகைத்துத் தேம்பி நின்றேன்.**

**தனக்குக் களங்கம் வரும் என்றோ - கட்சிக்குக் கறை வரும் என்றோ கவலைப்பட வேண்டியவர், தான் கொண்ட சமூகநீதிக் கொள்கைக்குப் பங்கம் வந்துவிடுமே, பரிகாசப்படுத்தப்படுமே என்று கவலைப்பட்ட ஒரு தலைவனை தமிழ்நாடு இனி மேலும் பெறுமா என்று அறுதியிட்டுக் கூற முடியாது. மீண்டும் பணிந்து அவரது பாதம் தொட்டேன்.**

2ஜி வழக்கின் தீர்ப்பு 2017ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம் தேதி வெளிவந்து நான் விடுதலை செய்யப்பட்ட போது தலைவர் கலைஞர் முழு சுயநினைவில் இல்லை என்றாலும், அதற்கு அடுத்த நாள் சென்னை வந்து கோபாலபுரத்தில் தீர்ப்பை அவர் காதில் உரக்கச் சொன்னபோது, அவர் முகத்திலிருந்து வந்த புன்னகை இன்றும் எனக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு. தீர்ப்பு வந்த நாளன்று இரவே டெல்லியிலிருந்து அவருக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். அதில், ‘என்னைப் பனிக்குடத்தில் வைத்துப் பத்திரப்படுத்திய தாய் நீங்கள்’ என்று குறிப்பிட்டிருந்தேன். அவர் இன்று நம்முடன் இல்லை. ஆனால்,என்னைப் பொறுத்தவரை அந்தப் பனிக்குடம் இன்னும் உடைந்து போய் விடவில்லை. என் உயிரில், உணர்வில் அது உடையாமல்தான் இருக்கிறது. நான் அதில் பாதுகாப்பாக இருக்கவே எப்போதும் விரும்புகிறேன்.

வாழ்க கலைஞர் புகழ்!! வெல்க திராவிடம்!!!

## “ஒன்றே குலம்; ஒருவனே தேவன்”


ஒரு நிகழ்ச்சிக்கு,
திருவாரூருக்கு,
பேரறிஞர் அண்ணா
அவர்கள் வந்திருந்தார்கள்.
அண்ணாவுக்கு முன்பு
பேசியவர்கள், தங்கள்
மதத்தைப் பற்றிய சில
அற்புதங்களை எல்லாம்
எடுத்துச் சொன்னார்கள்.
இறுதியாகப் பேசிய அறிஞர்
அண்ணா சொன்னார்கள்:
“அற்புதங்கள் இருப்பதற்காக
உங்கள் மத விழாவிற்கு நான்
வரவில்லை.
அற்புதங்கள்
நிகழ்த்துவதென்றால்,
அத்தகைய ஆண்டவர்கள்
எங்களிடத்திலே ஆயிரக்
கணக்கிலே இருக்கிறார்கள்.
எங்கள் ஆண்டவன், நெற்றிக்
கண்ணைத் திறந்தாலே
திரிபுரமும் எரியும். எங்கள்
ஆண்டவன், ஒரு வேலாயுதத்தை
விட்டால்,
பல மலைகளைக் குடையும்;
எனவே நான் அற்புதங்களுக்காக
வரவில்லை; அன்புக்காக
வந்திருக்கிறேன்; நீங்கள்
உலகத்தை வழிநடத்திச் செல்கிற
அமைதிக்காக வந்திருக்கிறேன்.
நீங்கள் மக்களையெல்லாம்
மக்களாகப் பாவிக்கின்ற அந்த
எண்ணத்தை மதித்து நான்
வந்திருக்கிறேன்” என்று
சொன்னார்கள்.

எனவே அந்த அண்ணா
வழியில் “ ஒன்றே குலம்,
ஒருவனே தேவன் “ என்ற
திருமூலரின் வாக்கியத்தை
அறிஞர் அண்ணா அவர்கள்
தமிழ்நாடெங்கும் பரப்பினார்கள்.
அதையே மக்கள் அனைவரும்
பின்பற்ற வேண்டும். அந்த
அளவிற்குப் பின்பற்றினாலே
நாட்டில் உள்ள
மூட நம்பிக்கைகள்
தொலைந்து,
நல்ல சமதர்ம
சமுதாயத்தை
உருவாக்க
முடியும்.

-கலைஞர்



# முத்தமிழறிஞர் கலைஞருடன் இருந்த காலம்தான், எனது பிறவிப் பயனடைந்த காலம்!



ஆர்.எஸ்.பாரதி
அமைப்புச் செயலாளர்,
தி.மு.க.

'தமிழைக் காக்கவும் தமிழ் மொழியைக் காக்கவும் தமிழ்நாட்டைக் காக்கவும் அல்லும் பகலும் உழைத்த "உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர்' முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களோடு நான் இருந்த காலம்தான் எனது பிறவிப் பயனடைந்த காலம்" எனச் சொல்லலாம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் எனக்கு ஏற்பட்ட முதல் சந்திப்பு என்பது 1962ல்தான். இச்சந்திப்பு என் வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு நிகழ்வு. காரணம், எனது 15-வது வயதில் கலைஞர் அவர்களை அவரது கோபாலபுரம் இல்லத்தில் நேரில் சந்தித்து, அவரிடம் ஆலந்தூரில், கழகக் கூட்டம் நடத்துவதற்கு அன்றைய ஆலந்தூர் செயலாளர் ஆலந்தூர் பாலன் அவர்களுடன் தேதி கேட்கச் சென்று சந்தித்ததுதான் முதல் சந்திப்பு.

அச்சந்திப்பின் போது தேதி கேட்டபோது, பாலன் அவர்களிடம் 'சினிமா தொடர்பான நிகழ்ச்சிகளெல்லாம் இருக்கிறது. அதனைப் பார்த்துவிட்டு தேதி உறுதி செய்து தருகிறேன்' என்று கூறியதோடு, பாலன் அவர்களின் கனத்த உடலைப் பார்த்துவிட்டு, 'நீ வரவேண்டாம். இந்த பையனை அனுப்பி வை. அதற்கு முன் சென்னை மாநகராட்சி தேர்தல் நிதியாக ஐம்பது ரூபாயை அறிவகத்தில் செலுத்தி, இரசீதுடன் இந்த பையனை அனுப்பி வை. தேதியை உறுதி செய்து தருகிறேன்' என்று கூறினார்.

அதன்பின்னர், உரிய தொகை செலுத்திவிட்டு அவரிடம் அந்த ரசீதைக் காண்பித்ததும் தேதி அளித்தார். நான் சிறிய பையன்தானே என்று என்னை அலட்சியப்படுத்தாமல், கட்சிப் பணியாற்றுகின்ற இளைஞரை ஊக்குவிக்க வேண்டுமென்ற எண்ணத்தில், என்னை அனுப்பி வைக்கச் சொன்னவர் கலைஞர். ஆக, என்றைக்கும் இளைஞர்களை ஊக்கப்படுத்துகிற தலைவராக அவர் விளங்கினார் என்பதற்கு இதுபோன்ற சான்றுகள் ஏராளம்.

அதற்குப் பிறகு, 1967 சட்டமன்றத் தேர்தலில், கழகம் வெற்றி பெற்று முதன்முதலாக ஆட்சியைப் பிடித்தவுடன், கலைஞர் அவர்கள் தனது கோபாலபுரம் இல்லத்தில், அறிஞர் அண்ணா உள்ளிட்டோருக்கு காலை உணவு ஏற்பாடு செய்திருந்தார். அன்று காலை, என்னுடன் பரங்கிமலை தொகுதியில் எம்.ஜி.ஆருக்காக தேர்தல் பணியாற்றிய மு.க.முத்துவை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து நன்றிகூறச் சென்றிருந்தேன். அப்போது, என்னைப் பார்த்த கலைஞர் என்னையும் சிற்றுண்டி அருந்திட அழைத்து, கோபாலபுரம் இல்லத்தில் அவர் முன்னிலையில் சிற்றுண்டி பரிமாறப்பட்டது. அதன் பிறகு, இதே கோபாலபுரம் இல்லத்தில், நெருக்கடி காலத்தில் கலைஞர் அவர்களுடன் தங்கி இருந்து பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது எனது பேறு.

1972ல் எம்.ஜி.ஆர். கழகத்தை விட்டு பிரிந்த நேரத்தில், பரங்கிமலை தொகுதியில் எம்.ஜி.ஆரோடு கழகப் பொறுப்பில் இருந்த பெரும்பாலோர் அவரது கட்சியில் சேர்ந்துவிட்டனர். ஆலந்தூரில் ம.ஆபிரகாம் மற்றும் நான் ஆகிய நாங்களிருவர் மட்டுமே எம்.ஜி.ஆருடன் செல்லவில்லை என்பதை அறிந்த கலைஞர், அன்றைய சென்னை மாவட்ட தி.மா.மு.க. அமைப்பாளராக இருந்த முரசொலி செல்வம் அவர்களிடம் சொல்லி, என்னையும் ம.ஆபிரகாம் ஆகிய இருவரையும் கோபாலபுரத்திற்கு நேரில் வந்து சந்திக்கச் சொல்லி அழைத்தார். முதலமைச்சர் கலைஞர் அவர்களை, கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்த போது, நான் எம்.ஜி.ஆரோடு நெருக்கமாக இருந்ததை அறிந்து, 'என்னய்யா, வருத்தப்படுகிறாயா?' என்று கேட்டார் கலைஞர். இக்கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாமல், கதறிக் கதறி அழுதுவிட்டேன்.

'எல்லோரும் சென்றுவிட்டார்கள்' என்று கண்ணீர் மல்க கலைஞர் அவர்களிடம் கூறினேன். 'எல்லாம் சரியாகிவிடும். வருத்தப்படாமல் சென்று கழகப் பணியாற்றுங்கள். எந்தப் பிரச்சினையாலும் எனது செயலாளர் கருப்பண்ணன் அவர்களிடம், நீயோ அல்லது ஆபிரகாமோ நேரில் வந்து கூறுங்கள்' என்று கலைஞர் அன்று கூறி அனுப்பியதுதான், இன்று வரை நான் உறுதியுடன் கழகப் பணியாற்றி வருவதற்கு அச்சாரமாக அமைந்தது. அதன்படியே பல்வேறு எதிர்ப்புகளிடையே எம்.ஜி.ஆரை எதிர்த்து, ஆலந்தூர் பகுதியில் கழகப் பணியாற்றி வந்தேன்.

கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளர் சிட்டிபாபு அவர்களுடன் பிப்ரவரி 1ஆம் தேதி காரைக்குடியில் நடைபெறவிருந்த 'ஒளிமிகு ஒன்பதாண்டு' எனும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனவரி31ஆம் தேதி தாம்பரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு, கூட்டம் முடிந்ததும் காரைக்குடிக்குச் செல்வதாக திட்டமிட்டிருந்தோம். 1976ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் தேதி மாலை ஆறு மணிக்கே கழக ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது.

இச்செய்தி தாம்பரம் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டபோது கிடைத்ததால், கூட்டத்தைப் பாதியிலே முடித்துவிட்டு, கோபாலபுரத்திற்கு தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்கச் சென்றோம். சிட்டிபாபு அவர்களுடன் கலைஞர் அவர்களை மாடியில் சென்று சந்தித்தேன். அன்று மாலை 6 மணியிலிருந்து கோபாலபுரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை கலைஞர் தனது 'நெஞ்சுக்கு நீதி'யில் விரிவாக எழுதியுள்ளார்.

**அன்று இரவு முழுவதும் சிட்டிபாபு, நான், புலவர் ஆடலரசு ஆகியோர் கோபாலபுரத்து வீட்டினருகே உள்ள கிருஷ்ணன் கோவில் வாயில் படியிலேயே கொட்டும் பனியில், குளிரில் அமர்ந்திருந்தோம். விடியற்காலை மூன்று மணியளவில் இதனை கண்ட கலைஞர் அவர்கள், 'அவர்களை வீட்டிற்குள் வந்து அமரச் சொல்' என்று உதவியாளர் செயல்மணி அவர்களிடம் சொல்லி அனுப்பி, நாங்கள் சென்று அங்கே அமர்ந்திருந்தோம். இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில்கூட தன்னுடைய தொண்டர்களுக்கு உடல் நலம் கெட்டுவிடக் கூடாது என்று தாயுள்ளத்தோடு எண்ணியவர்தான் கலைஞர்.**

2001ல் கழகம் ஆட்சியில் இல்லாதபோது, தினந்தோறும் காலை, மாலை என இருவேளையும் தலைமைக் கழகத்திற்கு வந்து செல்வது எனது வாடிக்கை. அத்துடன் மாலையில் அண்ணா அறிவாலயத்திலிருந்து சி.ஐ.டி. காலனி இல்லத்திற்கு அவருடனேயே அவரது காரில் பயணம் செய்து, வீட்டிற்குச் சென்று அங்கேயே இரவு 10.30 மணி வரை, அவருடன் உரையாடிவிட்டுத்தான் எனது வீட்டிற்குச் செல்வது எனது வாடிக்கையாக இருந்தது. அவ்வாறிருக்க, ஒருநாள் காலை அண்ணா அறிவாலயத்திற்கு வந்த கலைஞர் அவர்கள், அன்றைய அமைப்புச் செயலாளராக இருந்த கல்யாணசுந்தரம் அவர்களிடம் 'எங்கே பாரதி, இன்னும் வரவில்லையா?' என்று கேட்க, கல்யாணசுந்தரமோ 'அண்ணன் பாரதி அவர்கள், பாரத் ஸ்கேன் சென்டரில் 'எம்.ஆர்.ஐ. ஸ்கேன்' எடுக்க சென்றிருக்கிறார்' என்று சொன்னவுடன், பதறிப் போன கலைஞர் அவர்கள், நேற்றிரவு பத்து மணி வரை என்னுடன் பேசிக் கொண்டிருந்தானே? இதைப் பற்றி ஒன்று சொல்லவில்லையே..? அவன் உடம்புக்கு என்னாச்சு..? எம்.ஆர்.ஐ.ஸ்கேன் எடுக்கும் அளவுக்கு என்னாச்சு அவன் உடம்புக்கு?" என்று படபடப்புடன் எல்லோரிடமும் கேட்க, அத்தகவல் எனக்கு தெரிந்தவுடன், நேரில் அவரைச் சந்தித்து 'ஜென்ரல் செக்அப் செய்யத்தான் சென்றேன். எம்ஆர்ஐ ஸ்கேன் எடுத்துப் பார்த்ததில் பாதிப்பு எதுவும் இல்லை, நார்மலா இருக்கிறது' என்று விளக்கமளித்தேன். இந்த விளக்கத்தைக்கூட ஏற்காமல், ஏம்பா, உனக்கு உடம்புக்கு என்னென்னு சொல்றதில்லையா" என பல்வேறு கேள்விகளால் என்னைத் துளைத்து எடுத்து கோபித்துக் கொண்டார். என் தந்தை உயிரோடிருந்தால் எப்படி துடிதுடித்திருப்பாரோ, அப்படிப்பட்ட ஒரு துடிதுடிப்பையும், படபடப்பையும் அவரது முகத்தில் கண்டேன். பின்னர், நான் விளக்கமாக விவரித்ததும்தான் அமைதியானார்.

**இந்நிகழ்வை நினைக்கும் போது என்ன தவம் செய்தேனோ" என்ற வரிகள்தான் நினைவுக்கு வருகிறது. இதுபோன்று எனக்கு மட்டுமல்ல, கழகத்தில் இருக்கின்ற தனக்கு நெருக்கமானவர்களுக்கு ஏதேனும் உடல்நிலை சரியில்லை என்று கேள்விப் பட்டாலே, கலைஞர் அவர்கள் தாங்கிக் கொள்ள மாட்டார்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் பழகிய காலத்தில், நடந்த பல்வேறு நிகழ்வுகள் என் மனதில் 'பசுமரத்தாணி' போல பதிந்துள்ளது. அவற்றைச் சொல்ல வேண்டுமென்றால் பக்கங்கள் கொள்ளாது. தாயாய், தந்தையாய், தனயனாய், தோழனாய் என அனைத்து உறவுகளுடன் ஒட்டுமொத்த வடிவமாய் இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.**



## வாழ வைக்கும் கருவிகள்!

எப்படியோ தமிழ் உணர்ச்சி இன்றைக்கு மங்கிப் போய்க் கொண்டிருக்கின்ற கால கட்டம். நாம் எல்லாம் ஒரே இனம் ஒரு சாதி தமிழ் சாதி என்பது மறைந்து, பல சாதிகளாகப் பிரிந்திருக்கின்ற இந்தக் கால கட்டத்தில், நமக்கு இராமானுசருடைய ஆன்மீகமும் தேவைப்படுகிறது; அறிஞர் அண்ணா அவர்களுடைய அறிவியக்கமும் தேவைப் படுகிறது; தந்தை பெரியார் அவர்களுடைய சுய மரியாதை இயக்கமும் தேவைப்படுகிறது; உத்தமர் காந்தி அடிகளுடைய அஹிம்சா தத்துவமும் தேவைப்படுகிறது; புத்தருடைய சமத்துவக் கொள்கையும் தேவைப்படுகிறது.

இப்படி ஒரு இனம் ஒரு சமுதாயம் உய்விக்கப்பட வேண்டுமேயானால், ஒரு சமுதாயத்தை ஒற்றுமைப் படுத்த வேண்டுமேயானால், எங்கெங்கிருந்து என்னென்ன கருவிகள் கிடைக்கிறதோ, அந்தக் கருவிகளையெல்லாம் பெற்றுத்தான் தீர வேண்டும். அந்தக் கருவிகளை ஒழுங்காகப் பயன்படுத்தினால், செம்மையாகப் பயன்படுத்தினால், நம்முடைய எண்ணங்கள் நிறைவேறும்.

- கலைஞர்

**1998** அளவில் வடபுலத் தலைவர்கள் எல்லாம் கூடி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை இந்தியக் குடியரசுத் தலைவராகத் தேர்வு செய்யலாம் என முடிவு எடுத்தார்கள். அதை கலைஞர் அவர்களிடம் அவர்கள் தெரிவித்தபோது, **“நான் தமிழ்நாட்டு மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை விட்டுவிட்டு ஒன்றிய அரசில் எந்தப் பதவியையும் ஏற்க நான் விரும்பவில்லை”** என்று கூறி, அவர்கள் கூற்றை ஏற்க மறுத்து விட்டார். அப்படி, இந்திய அளவில் கலைஞர் அவர்கள் ஒரு மாநிலத் தலைவராகவே இறுதிவரை திகழ்ந்த போதிலும், அவர் எண்ணத்தால், செயலால், மொழிப் பற்றால், இயற்றிய திட்டங்களால், ஏழை எளிய மக்களை உயர்த்துவதில் பற்றிக் கொண்டிருந்த உணர்வுகளால், அவர் செய்த தியாகங்களால், இணையிலா அவர் ஓர் உலகத் தலைவராகவே போற்றப்படத் தக்கவர் என்பதை எவரும் மறுத்திட வியலாது.



## அண்ணன் கலைஞர்

# இன்றும் என் உணர்வில் இருக்கிறார்; என்னை இயக்குகிறார்!

அமைச்சர் எ.வ.வேலு
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

அந்த உலக மாமேதையைப் பலர் தொலைக் காட்சிகளில் பார்த்து மகிழ்ந்திருப்பார்கள்; தூரத்தில் நின்று அவர் ஆற்றிய உரைகளைக் கேட்டுக் களித்திருப்பார்கள்; ஊர்வலத்தில், வாகனத்தில் அவர் செல்லும்போது பார்த்துப் பரவசமடைந்திருப்பார்கள். நானோ, அவர் அருகில் நின்று பேசி, அவர் ஆணையைக் கேட்டுச்செயல்பட்டு, அவர் தந்த பொறுப்புகளை ஏற்று, அவர் வியக்கும்படிப் பணிகளை முடித்துப் பாராட்டுகளைப் பெற்றுள்ளேன். அமைச்சர் பொறுப்பில் அவருக்குக் கீழே பணியாற்றி, அவர் மெச்சத்தக்க வகையில் செயலாற்றி, மக்கள் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் கட்சியிலும் ஆட்சியிலும் தொண்டாற்றி அவர் பாராட்டுகளைப் பலமுறை பெற்ற நிகழ்வுகளை யெல்லாம் நொடிதோறும் நினைந்து நினைந்து மகிழ்கிறேன்.

### அண்ணன் அணிவித்த கணையாழி

நான், திருவண்ணாமலை மாவட்டக் கழகச் செயலாளர்; தலைமைக் கழகம் தேர்தல் நிதி வசூல் செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தல் வருகிறது. அண்ணன் கலைஞர் அவர்கள் மாவட்டச் செயலாளர்களுக்குள் ஒரு போட்டி வைக்கிறார். “எந்த மாவட்டம் அதிகமாகத் தேர்தல் நிதி தருகிறதோ, அந்த மாவட்டச் செயலாளர்களுக்கு மூன்று தங்க மோதிரம் பரிசு தருவேன். அதையும் என் கரத்தாலேயே அவர்களுக்கு அணிவிப்பேன்” என்கிறார்.

உடனே, அனைத்து மாவட்டச் செயலாளர்களும் களத்தில் இறங்கி நிதி திரட்டும் பணியில் மும்முர மாய் ஈடுபட்டுச் சேர்த்த நிதியைத் தலைவர் கலைஞர் அவர்களிடம் கொண்டுவந்து சேர்த்தோம். **கழக மாநாட்டில் அண்ணன் கலைஞர் அவர்கள் பரிசுக்குரிய மாவட்டச் செயலாளர்கள் யார் என்பதை அறிவிக்கிறார். முதல் பரிசு சேலம் மாவட்டம் அண்ணன் வீரபாண்டியார்; இரண்டாம் பரிசு திருவண்ணாமலை மாவட்டம் அடியேன்; எனது விரல் பற்றி இலட்சக்கணக்கான கழகத் தொண்டர்கள் முன்னிலையில் உடன் தளபதியின் அரவணைப்புடன் அண்ணன் கலைஞர் அணிவித்த கணையாழி இன்னும் என்னிடம் மின்னிக் கொண்டுள்ளது. அண்ணன் கலைஞர் கணையாழி அணிவித்தபோது, எனக்கு ஏற்பட்ட சிலிர்ப்பு இன்றும் என்னை மயங்கச் செய்கிறது!**

### ‘நான் எண்ணியதை முடிப்பதில் தம்பி வேலுவே முதல் இடத்தில் உள்ளார்’ என்றார் அண்ணன் கலைஞர்

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967இல் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின் 1.5.1967 அன்று ரூபாய்க்கு 1 படி அரிசி வழங்கும் திட்டத்தை முதன்முதல் சென்னை மாநகரில் தொடங்கி வைத்தார். அடுத்து, கோவையில் தொடங்கினார். எனினும், நிதிநிலை காரணமாக அத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திட இயலவில்லை. என்றாலும், பேரறிஞர் அண்ணா அவர்களின் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடத் தொடங்கும் நேரத்தில், 15.9.2008 முதல் தமிழ்நாடு முழுவதும் 1 ரூபாய்க்கு 1 படி அரிசி திட்டத்தை நிறைவேற்றினார்கள். அப்பொழுது, என் பொறுப்பிலிருந்த உணவுத்துறை சார்பில் 1 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் திட்டத்தின் தொடக்க விழாவில் உரையாற்றிய பொழுது அண்ணன் கலைஞர் அவர்கள் என்னைப் பார்த்தார் கள், **“நான் மனதில் என்ன நினைக்கி றேனோ அதை என் வாயால் சொல்லாமலேயே, என் கண் அசைவின் மூலம் அதை உணர்ந்து செய்து முடித்திடும் ஆற்றலுள்ளவர்களில் தம்பி வேலு அவர்கள்தான் முதலிடத்தில் உள்ளார்”** என்று கூறி என்னைப் பாராட்டியது இன்றும் என் கண்களில் நிழலாடிக் கொண்டிருக்கிறது!

### என் பெயர்க் காரணம் கூறிய கலைஞர்

கழகத்தின் பொதுக்கூட்ட நிகழ்ச்சி ஒன்றில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் என் பெயரைக் குறிப்பிட்டுப் பாராட்டிக் கூறிய சில வார்த்தைகள் இன்றும் என் செவியில் எதிரொலித்துக் கொண்டே இருக்கின்றன.

**கழகத்தைக் கட்டிக் காப்பதிலும், எதிரிகளை வீழ்த்துவதிலும் நான் ஏவாமலேயே, நான் எண்ணுவதை / ஏவி முடிப்பதிலேயே குறியாய் இருப்பதில் வல்லவர். அதனால்தான் அவர் பெயரே “எ.வ.வேலு” என்று என்னைப் பாராட்டினார் அண்ணன் கலைஞர், அந்தக் கணத்தை என் வாழ்வில் மறக்க முடியுமா?**

### உழைக்கும் உணர்வைத் தந்த உந்துதல்கள்

கழகம் எதிர்க்கட்சியாக இருந்த காலங்களில் நான் சென்னையில் தங்கி இருந்த நாள்களில் காலையில் கோபாலபுரம் செல்வேன். பின்னர் அங்கிருந்து தலைவர் கலைஞர் அவர்களுடன் முரசொலி அலுவலகத்திற்குச் செல்வதும், பின் அவரைக் கோபாலபுரம் இல்லத்தில் கொண்டு வந்து விடுவதும் வழக்கமாகும். அன்றியும், மாலை நேரங்களில் கோபாலபுரத்தில் அவரைச் சந்திப்பதை வாடிக்கையாகக் கொள்வேன். அவர்களுடன் கூடவே இருந்து, இரவு அவர் படுக்கையறைக்குச் சென்றபின்தான் நான் என் வீட்டுக்குத் திரும்புவேன்.

இடைப்பட்ட நான்கு, ஐந்து மணி நேரங்களில் அண்ணன் கலைஞர் அவர்கள் தம்முடைய கடந்த கால அனுபவங்களை என்னுடன் பகிர்ந்து கொள்வார்கள். அப்பொழுது எனக்கு ஏற்படும் அனுபவங்கள் அவரைப் போலவே இலக்கை அமைத்துக்கொண்டு உழைக்க வேண்டும் என்ற உணர்வையும் உந்துதல்களையும் எனக்கு அளிக்கும். அந்த நினைவுகள் எல்லாம் எழுந்து எனக்கு இன்றும் அவ்வப்போது மகிழ்ச்சியையும் நெகிழ்ச்சியையும் தந்து கொண்டிருக்கின்றன.

### 90 வயதிலும் அவரின் திரையுலகச் சிந்தனைகள்

அண்ணன் கலைஞர் அவர்கள் எப்பொழுதும் தனிமையை விரும்பாதவர். எந்த நேரத்திலும் தம்பிமார்கள் புடை சூழவே காட்சி அளிப்பார்.

அப்படி, ஒரு நாள் தம்பிமார்கள் புடைசூழ அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தபோது, திரை உலகத்தோடு தொடர்பு கொண்டிருந்தவன் என்ற முறையில் என்னிடம் மட்டும் 90 வயதிலும் திரைப்படத்துறை தொடர்புடைய செய்திகளைக் கேட்டார்.

### திரை உலகத்திற்கே கர்த்தா கலைஞர்!

நான் ஒரு முறை இரவு 9 மணி அளவில் அண்ணன் கலைஞர் அவர்களுடன் தனியாக இருந்தபொழுது அவரிடத்தில் ஒரு கேள்வியை எழுப்பினேன். அதாவது, “பல திரைப்படக் கதாநாயகர்கள் உங்களால் உருவானார்கள். அதற்கு, உங்கள் கதை வசனத்தின் ஆற்றல் முக்கிய காரணமாகும் அவரால் உருவாக்கப்பட்டவர்களில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், சிம்மக் குரலோன் சிவாஜி, இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். ஆகியோர் பற்றி ஒரு கேள்வி” என்று கூறிக் கேட்டேன்.

“எம்.ஜி.ஆர்., சிவாஜி, எஸ்.எஸ்.ஆர். மூவருக்கும் வசனம் எழுதும் பொழுது ஏதேனும் அளவுகோல் வைத்துக் கொள்வீர்களா?” என்று கேட்டேன்.

**அப்போது அண்ணன் கலைஞர் அவர்கள், “சிவாஜி ஏற்ற இறக்கத்தோடு வசனத்தை அருமையாக உச்சரித்துப் பேசுவார். அவருக்கு ஏற்றது போல் எழுச்சிமிக்க நீண்ட வசனங்களை எழுதுவேன்.**

**எஸ்.எஸ்.ஆர் உணர்ச்சி பொங்கப் பேசுவார். அவருக்குப் பொருத்தமான உணர்ச்சிகரமான வசனம் எழுதுவேன். எம்.ஜி.ஆர். அவர்களுக்கு இளமையும் எழுச்சியும் துள்ளலும் கொண்ட இரண்டு மூன்று வரிகள் கொண்ட வசனங்களை எழுதுவேன்”** என்று ஒவ்வொருவருக்கும் எப்படி எழுதுவேன் என எனக்குத் தெரிவித்தார். அப்போது, அண்ணன் கலைஞர் அவர்களின் அரிய சிந்தனைத் திறனை எண்ணி வியந்தேன். அவர் திரைக்கதை வசன கர்த்தா அல்ல, திரை உலகத்திற்கே கர்த்தா அவர்களே!

இதையெல்லாம்விட ஒரு நாள் இரவில் அண்ணன் கலைஞர் அவர்களோடு இணைந்து உட்கார்ந்து உணவு உட்கொள்ளும் வாய்ப்பு எனக்கு அமைந்தது. அப்போது என்னையும் அருகில் உட்கார வைத்துக் கொண்டு, “நித்யா, வேலுக்கு ஒரு தட்டு கொடு; அவருக்கும் ஒரு தோசையைக் கொடு”; என்று கூறினார். அவர் காலடியில் உட்கார்ந்து உணவு உட்கொண்ட அந்தக் காட்சி, ஒரு 7 நட்சத்திர ஓட்டலில் உட்கார்ந்து உணவு உட்கொண்டால்கூட அவரின் தாய்ப் பாசத்திற்கு ஈடாகாது. அண்ணன் கலைஞர் அவர்களின் காலடியில் அமர்ந்து உண்ட அந்த நினைவு இன்றும் என் மனதில் பசுமையாக நிழலாடிக்கொண்டு என்னை உணர்ச்சிப் பிழம்பாக்கு வதை என்னால் இன்றும் உணர முடிகிறது.

### குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் வழங்கும் சிறப்புப் பொது விநியோகத் திட்டம் தொடங்கிய வரலாறு

2007 ஆம் ஆண்டு அண்ணன் கலைஞர் அவர்கள் முதலமைச்சர்; நான் உணவுத்துறை அமைச்சர், **‘’விலைவாசி விஷம்போல ஏறிக் கொண்டே போகிறது.. ஏழைகளும், நடுத்தர மக்களும் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். உங்கள் உணவுத் துறை சார்பாக என்ன நடவடிக்கை எடுப்பீர்கள்?”** என்று ஒரு கேள்விக்கணையை என்னிடம் திடீரெனத் தொடுத்தார் அண்ணன் கலைஞர்.

அதன் விளைவு நான், என் துறையின் செயலாளர் சண்முகம், ஐ.ஏ.எஸ்., நிதித்துறைச் செயலாளர் ஞானதேசிகன், ஐ.ஏ.எஸ்,, அரசின் தலைமைச் செயலாளர் திரிபாதி ஐ.ஏ.எஸ். ஆகியோருடன் தலைமைச் செயலகத்தில், முதலமைச்சர் அறையில், அவர் முன்னால் இரண்டு மணி நேரம் அமர்ந்து இந்த விலைவாசி உயர்வு தொடர்பாக ஆலோசனையில் ஈடுபட்டோம். அப்போது முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரிய ஆலோசனைகளைப் பெற்றோம். கலைஞர் அவர்கள் அப்பொழுது வழங்கிய ஆலோசனைகளின் அடிப்படையில் கோப்புகளைத் தயார்செய்து, கோப்புகளை முதலமைச்சர் அலுவல கத்திற்கு நானே எடுத்துச் சென்றேன். அந்தக் கோப்பில் முதல்வர் கலைஞர் அவர்களிடம் கையெழுத்தினைப் பெற்றேன். முதல்வர் கலைஞர் அவர்கள் கையெழுத்திட்ட அந்தக் கோப்புகள் அனைத்தும் விலைவாசிக் கொடுமைகளைக் குறைத்து ஏறத்தாழ 2 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்குப் பயன் தரும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தை உருவாக்கி நடைமுறைப் படுத்துவது தொடர்பானதாகும்.

14.4.2007 முதல் சென்னையிலும் மே 27 முதல் பிற மாவட்டங்களிலும் இந்தச் சிறப்புப் பொதுவிநியோகத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகள் மூலம் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், கோதுமை இவை எல்லாம் குறைந்த விலையில் வழங்கப்பட்டன. அந்தத் திட்டம் இன்றும் நடைமுறையில் உள்ளது. **விலை குறைந்த அந்தப் பொருள்கள் மக்களுக்கு இன்றும் கிடைக்கின்றது என்றால் முதல்வர் கலைஞர் அவர்கள் அன்று போட்ட ஒரு கையெழுத்துதான் காரணம். 2007 முதல் இன்று வரை அந்தத் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த ஆணையும் அதைப் பெற்ற வரலாற்று நிகழ்வும் இன்றும் என்னை இயக்கிக் கொண்டு என் நெஞ்சில் ஊக்கத்தையும் உழைக்கும் உணர்வையும், உந்துதல்களையும் அளித்துக் கொண்டிருக்கிறது.**

பஞ்சாப் மாநிலத்தில் ஒருவர் உச்சநீதிமன்றத்தில் பொது விநியோக முறை குறித்து பொது நல வழக்கு ஒன்றைத் தொடர்ந்தார்.

அதன் விளைவாக, ஓய்வு பெற்ற உச்சநீதி மன்ற நீதிபதி தலைமையில் ஒரு குழு அமைத்து மாநிலத்திற்கு சென்று ஆய்வு செய்து உச்சநீதி மன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய பரிந்துரை செய்தார்கள். அந்தத் தருணத்தில் உச்சநீதிமன்ற நீதியரசர்கள் தன்வீர் பண்டாரி, தீபக் வர்மா ஆகிய இருவரும் “தமிழ்நாடு மாநில பொது விநியோகம் சிறப்பாக உள்ளது, இந்தியாவிலே சிறப்பான மாநிலம் தமிழ்நாடுதான்” என பாராட்டினார்கள்.

எனது, இரண்டாவது மகன் டாக்டர்.கம்பன் திருமணத்தில் தலைமை தாங்கி வாழ்த்தி பேசிய தலைவர் பொது விநியோகத் திட்டம் சிறப்பாக இருக்கிறது என உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் பாராட்டி பேசியுள்ளது, “தம்பி வேலுவின் உழைப்புதான் காரணம்! உணவுத் துறையின் மூலம் எனது அமைச்சரவையில் மணிமகுடம் சூட்டியது போன்ற உணர்வு எனக்கு உள்ளது” என பாராட்டியது இன்னும் அவருக்கு என் கடமையை செய்ய வேண்டும் என்ற உந்து சக்தி என் உள்ளத்தில் மேலோங்கியுள்ளது.

**இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகளை அண்ணன் கலைஞர் அவர்களுடன் இணைந்து அவர் ஆணைகளையும் அறிவுரைகளையும் கேட்டுப் பெற்றுப் பணிபுரிந்த அனுபவங்களை நினைவு கூரும்போது அவை அனைத்தும் என் உயிருக்கும், உணர்வுக்கும் ஊக்கம் தருபவையாகும்; என்றே எண்ணுகிறேன். அண்ணன் கலைஞர் இன்றும் என் உணர்வில் இருக்கிறார்; என்னை இயக்குகிறார். அந்த உணர்வோடு அவரை எண்ணி, எண்ணி என் இறுதிக் காலம் வரை எனது பணிகளைத் தொடர்வேன். அது ஒன்றே என் வாழ்வின் இன்பம்! இன்பம்!! இன்பம்!!!**

# "மூதறிஞர் விருது"



"ஆதித்தனார் அவர்களுடைய பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுகின்ற இந்த நாளில் 'மூதறிஞர்' என்ற ஒரு விருதினை எனக்கு வழங்கிச் சிறப்பித்துள்ள நண்பர் சிவந்தி ஆதித்தன் அவர்களுக்கும், இந்த விருதினை வழங்கிய ஆளுநர் பேரன்பிற்குரிய, பெருமதிப்பிற்குரிய மேதகு பாத்திமா பீவி அவர்களுக்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விருதுடன் நம்முடைய சிவந்தி ஆதித்தன் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியை எனக்கு வழங்கியுள்ளார்கள். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் ராஜராஜ சோழன் பெயரால் நான் எழுதிய "தென்பாண்டிச் சிங்கம்" என்ற வரலாற்று நூலுக்குப் பரிசு வழங்கப்பட்டது. அந்தப் பரிசினை வழங்கிய சங்கர் தயாள் சர்மா அவர்கள் எனக்கு அவருடைய அன்பின் காரணமாக பட்டத்தையும் வழங்கினார்.

அந்த நிகழ்ச்சியிலே ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியும் தரப்பட்டது. அதனை நான் தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ச் சான்றோர்கள் சிலருடைய பெயரால் ஒரு அறக்கட்டளையை உருவாக்கி அவர்களுடைய பெயரால் அவ்வப்போது சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்து, மாணவர்களும் மற்றவர்களும் பயன்பெறுகின்ற வகையிலே செலவழித்திடுங்கள் என்று அந்தத் தொகையை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கே தந்து விட்டேன். வழங்கியவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தார். திருப்பித் தந்தது அவர்களிடமே!

இப்பொழுது நிலைமை அப்படி இல்லை, (பலத்த சிரிப்பு) இன்று காலையில் சிவந்தியின் அண்ணன் ராமச்சந்திர ஆதித்தன் தமிழக அரசின் சார்பில் நடத்தப்படுகின்ற ஏழைப் பெண்களுடைய திருமண உதவித் திட்டம் மூவலூர் ராமாமிர்தம் அவர்களுடைய பெயரால் வழங்கப்படுகின்ற திட்டத்திற்கு நான் விடுத்த வேண்டுகோளின்படி பலர் கோடிக் கணக்கில், இலட்சக்கணக்கில் நிதி வழங்கியிருக்கிறார்கள் என்றாலும் காலையிலே ஒரு இலட்சம் ரூபாயை அந்த நிகழ்ச்சியிலே வழங்கினார்கள்.

காலையில் ஒரு நிகழ்ச்சியும், மாலையிலே ஒரு நிகழ்ச்சியும் நடைபெறுவது எவ்வளவு எங்களுக்கு இலாபகரமானது என்பதற்கு (சிரிப்பு) இதைச் சொல்கிறேன். காலையிலே ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டதை நான் முதலமைச்சர் நிவாரண நிதியிலே சேர்த்து ஏழைப் பெண்களின் திருமண நிதிக்கு இது பயன்படுத்தப்படும் என்று குறிப்பிட்டேன்.

அதைப்போலவே இப்பொழுது சிவந்தி அவர்கள் இந்த விழாவிலே எனக்காக வழங்கியுள்ள ஒரு இலட்சம் ரூபாயை முதலமைச்சர் நிவாரண நிதியில் சேர்த்து ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டத்திற்கு வழங்குகிறேன்.

'மூதறிஞர் விருது' எனக்குக் கிடைத்திருப்பதற்கான காரணங்களைச் சொன்னார்கள். மொழியிலே நான் கொண்டுள்ள பற்று, அரசியலிலே நான் ஏற்றுள்ள நிலை, அண்ணாவின் தம்பியாக இருந்தது,இருப்பது, பெரியாரின் தொண்டனாக நான் வாழ்ந்தது, பகுத்தறிவுக் கொள்கையில் எந்த நேரத்திலும் யாரோடும் சமரசம் செய்து கொள்ளாமல் உறுதியாக நிற்பது, சமூக நீதி, மாநில சுயாட்சி, இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழும் ஆகவேண்டுமென்ற அந்தக் குறிக்கோள் - இவைகளில் நெஞ்சுறுதியோடு நானும் இருந்து, என் தலைமையிலே இருக்கின்ற இயக்கத்தையும் வழி நடத்திச் செல்வது என்பதை இங்கே பாராட்டி, வாழ்த்திய அனைவரும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இத்தகைய வாய்ப்புகளையெல்லாம் உருவாக்கித் தந்த நண்பர் சிவந்தி ஆதித்தன் அவர்களை என்ன பாராட்டினாலும் தகும்.

நான் 1924ஆம் ஆண்டு பிறந்தேன். பிறந்த போதே என் வீட்டில் கள்வர்கள் புகுந்து, என் தாயின் தாலிச்சரடு உட்பட அத்தனையையும் திருடிச் சென்றார்கள், அப்பொழுதும் நான் அழாமல் இருந்த காரணத்தால் தப்பித்தேன். அழுதிருந்தால் என் குரல்வளையில் கட்டை விரலை வைத்து நசுக்கியிருப்பார்கள். நல்ல வேளையோ அல்லது என் போதாத காலமோ அழாமல் இருந்துவிட்டேன். இன்றைக்கு சுகம், துக்கம் இவைகளையெல்லாம் அனுபவிப்பது மாத்திரமல்ல, அவைகளுக்கிடையே மொழிக்கும் நாட்டிற்கும் தொண்டாற்றுகிறேன் என்கின்ற அந்த இன்பத்தைப் பெறுகிறேன் அல்லவா?

அதற்காக அந்தக் கள்வர்களின் கட்டை விரலை வாழ்த்துக்கிறேன் என் கழுத்திலே அதை வைத்து அழுத்தாமல் இருந்ததற்காக. என்னோடு இணைந்து, இன்றைக்கு என்னுடைய சகோதரர், நாவலாசிரியர் - எழுத்தில் தனக்கென ஒரு முத்திரையைப் பொறித்துக் கொண்டிருப்பவர் பிரபஞ்சன் அவர்களும் விருது பெற்றிருக்கிறார். அவருடைய அண்ணன் என்ற முறையில் நான் அவரை வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன். அவருக்கு விருது வழங்கிச் சிறப்பித்த சிவந்தி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைப் பொருத்தவரையில் நான் இன்னும் நீண்ட நாள் வாழ வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். ஆட்சிப் பொறுப்பிலே இருக்க வேண்டுமென்பதற்காக அல்ல, அதிகாரங்களை அனுபவிக்க வேண்டுமென்பதற்காக அல்ல, தமிழுக்குத் தொண்டு செய்வதற்காக. என்னுடைய கண்கள் இறுதியாக மூடும்வரை, அண்ணாவின் இதயத்தை எடுத்துச் சென்று மீண்டும் அண்ணாவிடத்திலே ஒப்படைக்கின்ற அந்தக் காலம் விரைவிலே வந்துவிடாமல் நான் இன்னும் கொஞ்ச காலம் வாழ்ந்து இன்னும் ஆற்ற வேண்டிய தொண்டினை ஆற்றி இங்கே தரப்பட்ட "மூதறிஞர்" என்ற பட்டத்திற்குரியவனாக என்னை ஆக்கிக் கொள்கிற வரையில் வாழ வேண்டுமென்று இயற்கையை வேண்டி என்னை வாழ்த்திய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்"

**- முத்தமிழறிஞர் கலைஞர்**

(28.09.1997)



# நூற்றாண்டு நாயகர் கலைஞர்

## டி.கே.எஸ். இளங்கோவன்

(கழக செய்தித் தொடர்பு தலைவர்)

ஏறத்தாழ இருபதாண்டு காலம் தலைவர் கலைஞர் அவர்களுடனேயே பயணித்த பேறு பெற்றவன் நான். என்னுடைய பள்ளிப் பருவத்திலேயே என் தந்தையாருடன் சென்று அவரை அடிக்கடி சந்திக்கும் வழக்கமுள்ள நான், அவரது சிந்தனைத் திறன், திட்டமிடல் ஆகியவற்றால் கவரப்பட்டவன். அவரது கட்டுப்பாடு மிகுந்த வாழ்க்கை அவரை எந்த அளவுக்கு உயர்த்தியது என்பதையும் என் தந்தை சொல்லக் கேட்டும், நானும் பார்த்து உணர்ந்து கொண்டவன்.

என் தந்தையார் தத்துவ மேதை டி.கே.சீனிவாசன் அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் ஏறத்தாழ 1940களில் தொடங்கி நண்பர்களாகப் பயணித்தனர். நீதிக்கட்சி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என தொடர்ச்சியாக இணைந்து பணியாற்றியவர்கள்.

1962ஆம் ஆண்டு தி.மு.கழகம் காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராக விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் நடத்தியது. அப்போராட்டத்தில் ஈடுபட்ட கழக முன்னணியினர் கைது செய்யப்பட்டு, சிறைக்கு அனுப்பப்பட்டனர். அந்தக் காலத்தில் நாங்கள் மந்தைவெளிப் பாக்கத்தில் குடியிருந்தோம். சிறைவாசம் முடிந்து என் தந்தையார் உள்ளிட்ட கழகத் தலைவர்கள் வெளி வந்த சில நாட்களில் எனது பாட்டி, எனது தந்தையின் தாயார், உயிர் நீத்தார். கழக முன்னோடிகள் பலரும் இல்லம் தேடி வந்து என் தந்தையாருக்கு ஆறுதல் சொன்னார்கள். தலைவர் கலைஞர் அவர்களும் வீட்டுக்கு வந்தார். வந்தவர் அந்தப் பகுதியின் கழகப் பொறுப்பாளராக இருந்த டி.கே.கபாலி அவர்களை அழைத்து, **"டி.கே.சீனிவாசன் இப்பொழுதுதான் சிறையிலிருந்து வெளி வந்திருக்கிறார். அவரிடம் பணம் இருக்காது. அவரது தாயார் எனக்கும் தாயாரைப் போல இருந்தார். நீங்கள் அங்கேயே இருந்து இறுதிச்சடங்கு வரை உடனிருங்கள். மொத்த செலவுக்கும் நான் பணம் தருகிறேன்"** என்று சொல்லி பணம் கொடுத்துவிட்டுச் சென்றார். அப்போது எட்டு வயது சிறுவனாக இருந்த எனக்கு, தலைவர் கலைஞர் அவர்கள்மீது கொண்ட மதிப்பும், மரியாதையும் பலமடங்கு அதிகரித்தது.

என் தந்தையார் இறந்த நேரத்தில் திருச்சிக்கு ஒரு நிகழ்ச்சிக்காக சென்றிருந்தார் தலைவர் கலைஞர். அங்கிருந்தே எனக்கு தகவல் அனுப்பினார் "நான் மறுநாள் காலை வந்துவிடுகிறேன். அதுவரை காத்திருக்கவும்" என்று அவர் சொன்னார். மறுநாள் காலை எங்கள் இல்லத்துக்கு வந்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

**என்னை தனது பிள்ளைகளில் ஒருவராகத்தான் அவர் கருதினார். கழகத்தில் என்னை முக்கிய பொறுப்பில் அமர்த்தி அழகு பார்த்தவர். இருமுறை என்னை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தவர். தமிழ் நாட்டில் எந்தப் பகுதியிலாவது கட்சிக்குள் பிரச்சினை என்று செய்தி வந்தால், உடனே என்னை அழைப்பார். "நீ பிரச்சினை குறித்து விசாரித்தாயா?" என்று கேட்பார். நான் விசாரிக்கவில்லை என்று தெரிந்தால் என்னைக் கடுமையாகத் திட்டுவார். இரவு தலைமைக் கழகத்திலிருந்து அவரது இல்லம் செல்லும் வரை காரிலேயே என்னை திட்டிக் கொண்டு வருவார். வீடு சென்ற பிறகு அம்மாவை அழைத்து "இளங்கோவனை கடுமையாக திட்டிவிட்டேன். அவனுக்கு காப்பி கொடு" என்று சொல்வார். இப்படி என்னை நெக்குருகச் செய்த பல நிகழ்வுகளை சொல்லிக் கொண்டே போகலாம்.**

சென்னை, அண்ணா அறிவாலயத்தில் வெளியூரிலிருந்து வரும் தோழர்கள் "ஊருக்கு எப்படி திரும்பிப் போவீர்கள்" என்று கேட்பார். அவர்கள் இரவில் காரில் செல்கிறோம் என்று சொன்னால், "இரவுப் பயணம், பத்திரமாகச் செல்லுங்கள்" என்று கூறுவார்.

அடுத்தநாள் காலை தொலைபேசி மூலம் என்னை அழைத்து, "அந்தத் தோழர்கள் ஊர்போய் சேர்ந்துவிட்டார்களா என்று விசாரித்தாயா?" என்று கேட்பார். நான் "இல்லை" என்று சொன்னால், உடனே என்னைக் கடுமையாகக் கடிந்து கொள்வார். "இரவுப் பயணம் பாதுகாப்புக் குறைவு. அவர்கள் பத்திரமாக வீடு போய் சேர்ந்தார்களா என விசாரிக்க வேண்டாமா? இப்படி அக்கறையற்று இருக்கிறாயே?" என்று என்னை திட்டுவார்.

**கழகத்தின் ஒவ்வொரு தொண்டர் மீதும் கொண்ட அக்கறை என்னை நெஞ்சு நெகிழச் செய்யும். கழகத்தவரை தன் குடும்பத்தவராகப் பார்த்த மாபெரும் தலைவர் அவர்.**

**தலைவருக்குத் தலைவராக, தந்தைக்கு தந்தையாக, ஆசானுக்கு ஆசானாக விளங்கிய அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்டது ஏராளம். அவரது அன்பும், பாசமும் என் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்.**

# இளம் தலைமுறையின் பாசறை - கலைஞர்!

## இனமான பேராசிரியர்



1930 - 1940 ஆம் ஆண்டுகளில் பெரியாரின் பச்சை அட்டைக் குடியரசு ஏடும், 1940 -1950களில் அறிஞர் அண்ணாவின் திராவிட நாடும், எப்படி இளைஞர் தம் உள்ளங்களில் தனியாட்சி நடத்தி வந்தனவோ, அதைப் போன்றே **முரசொலியும் - இளைஞர் உள்ளமெல்லாம் கொள்ளை கொண்டது எனலாம். உணர்ச்சி ததும்பும் நடையில், கிளர்ச்சியூட்டும் கருத்துகளை மாற்றுக் கருத்துடையார் கலக்கமுறும் அளவுக்குத் தாங்கி வந்த ஏடு முரசொலி.**

**அதன் முதலாமாண்டு விழா 1943 -ஆகஸ்ட் அளவில் அமைந்த போது; மு.க. அவர்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று கொண்டிருந்த என்னையும் எனது நண்பர் இரா.நெடுஞ்செழியன் (நாவலர்) அவர்களையும் அழைத்திருந்தார்.**

அப்பொழுதெல்லாம்-நமது இயக்கத் தோழர்கள் எவரும், திருமணம் என்றோ, நீத்தார் நாள் என்றோ, சுயமரியாதைச் சங்க ஆண்டு விழா என்றோ அழைத்துவிட்டால் போதும், அதைத் தவறவிடமாட்டேன். ஒரு வகையில் கூறினால், அந்த நிகழ்ச்சிகட்குச் சென்று பேசிவிட்டாலே எனக்குப் பெருமை. நாட்டையே திருத்திவிட்டதாக ஓர் எண்ணம். அந்தக் காலத்தில், இந்தத் தன்மான இயக்கத்தவர்கட்கு வாய்த்திருந்த சட்டமன்றமே பொதுமேடைதான். நூறுபேர் அளவில் கூடிய கூட்டமென்றாலும் பெரிய கூட்டந்தான். கூட்டம் நடத்துவதாக கேட்டவர்களால் - எந்தக் காரணத்தாலேனும் கூட்டம் நடத்த முடியாவிட்டால்தான் எங்களுக்குத் தோல்வி ஏற்பட்டது போல் கவலை ஏற்படும். சைக்கிள், மாட்டுவண்டி, குதிரைவண்டி, லாரிகள் எதுவானாலும் எம் போன்றோர் பயணம் தொடரும். இந்த நிலையில் திருவாரூரில் இருந்து ஒரு மாணவர் ; பழக்கமில்லாத புதியவர் அழைத்திருந்தாலும், அதைத் தவறவிடுவேனா? வருவதாக வரைந்தேன் ஒரு அஞ்சல் அட்டையில், ஆரூர் வந்து சேரும் புகைவண்டியின் நேரத்தையும் குறிப்பிட்டு எழுதினேன். பின்னும் ஓர் அட்டையில் என்னுடன் வருவதாகக் கூறியவாறு நண்பர் நெடுஞ்செழியனும் வந்தார். அன்றைய சூழலில் எனது இளைய உள்ளத்தில் நானே ஒரு தலைவர் என்பது போன்றதொரு மயக்கம்.

விடியற்காலையில் ஆரூர் சேரும் வண்டியில் சிதம்பரத்திலிருந்து போய்ச் சேர்ந்தோம். அப்பொழுது எல்லாம் புகைவண்டியில் மூன்றாம் வகுப்பு உண்டு. அதில் பயணம் செய்யத்தான் எங்களால் முடிந்தது என்றாலும், அதிலும் ஓர் மகிழ்ச்சியே. மக்களைத் தேடிக் கொண்டு அலையும் என் போன்றவருக்குப் பயணிகள் நெருக்கத்தில் பயணம் செய்வது கடினமாகவா தோன்றும்? அதிலும் யாராவது சிறிதே தெரிந்தவரோ, புதியவரோ உரையாட முன் வந்தால் எனக்குத் தெரிந்தவற்றை எல்லாம், எனது கொள்கை விளக்கமாகக் கூறித் தீர்த்து விடுவேன். என்னுடன் உரையாடுபவர் ஏற்றாலும் ஏற்காவிடிலும் அது பற்றி எண்ணுவதே இல்லை. எண்ணினால் அன்றோ கவலைப்படுவதற்கு. இளங்கன்று பயமறியாது என்றொரு பழமொழி நினைவுக்கு வருகிறது. பயமறியாது என்பது மட்டுமல்ல, பயனும் அறியாது என்று இப்பொழுது தெரிகிறது.

இளைய வயதினருக்குப் பெரியவர்களிடத்தில் எதிர்வாதம் செய்வதில் அவர்களை அறியாமலே ஒரு ஆர்வம் இருக்கும். அது ஒரு கொள்கையில் கொண்ட பற்றுடன் உருக்கொண்டால் அந்த எதிர்வாதம் தனது கொள்கையில் தெளிவடைவதற்கு அல்லாவிடினும் தெரியாதவற்றைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் கொள்ளுவதற்கு ஏதுவாகும். அப்படிப்பட்ட நல்வாய்ப்பாக அந்த உரையாடல்கள் அமைந்து, என்னை - என் போன்றோரை உருவாக்கி இருக்கக் கூடும்.

பாரதக் கதையைப் பேசியே பாழ்பட்ட நாடு; இராமாயணத்தை அப்படியே நம்பி ஏற்றதாலேயே இழிவுற்ற நாடு, புராணங்களுக்கு மரியாதை செலுத்தியே அறிவிழந்த நாடு, நமது சுயமரியாதைக் கொள்கைகளை ஏற்றாலும், எதிர்த்தாலும் அது பற்றிப் பேசி வைப்போமே என்று வெறி கொண்டிருந்த காலம்.

ஆரூர் நிலையம் சேர்ந்த நாங்கள் எதிர் பார்த்து இருப்பவர் யாராகலாம் என்று கண்களைச் சுழல விட்டோம். யார் என்று தெரியத்தான் வழியில்லையே, அவர்களாகத்தான் எங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். என்னைப் பார்த்தாலும் எளிதில் எவரும் அன்பழகன் இவன்தான் என்று நம்பமாட்டார்கள். உயர்நிலைப் பள்ளி மாணவனைப் போன்றே ஒல்லியான சிறுவன் தான், நல்ல வேளையாக நெடுஞ்செழியன் உடனிருந்தார். முரசொலி ஆசிரியர் கருணாநிதியும் அவரது பள்ளித் தோழர் தென்னனும் எங்களைக் கண்டு கொண்டனர்.

அவர்களுக்குக் கூட நெடுஞ்செழியன் அவர்களின் இளந்தாடியைக் கொண்டே அடையாளங் கண்டதாகக் கூறினர். நிலையத்தில் இருந்து அழைத்துச் சென்று ஓர் இல்லத்தில் தங்கவைத்தனர். அப்பொழுது கருணாநிதியும் தோற்றத்தில் மிகவும் இளையவராகத்தான் இருப்பார். எங்களைத் தங்கவைத்த இடத்திற்கு உணவு வந்தது. உண்டோம். சிறிது ஓய்வெடுத்தோம். காலையில் ஓர் மண்டபத்தில் முரசொலி ஆண்டு விழா கூட்டம், மாலையிலோ ஒரு பொதுக்கூட்டம், இருநூறு, முந்நூறு பேர் இருப்பர். காலையிலும், மாலையிலும் மு.க. அவர்கள் என்னையும் நெடுஞ்செழியனையும் வரவேற்றுப் பேசி முரசொலியின் பகுத்தறிவுப் பணிக்கு அனைவரும் ஆதரவு தர வேண்டும் என்று பேசினார்.

**நெடுஞ்செழியன் அவர்கள் தமிழரின் வீர உணர்வை புரட்சிக் கவிஞரின் பாட்டின் மூலம் விளக்கிப் பேசினார். நானும் வேகமாகப் பேசினேன். வைதீகக் கொள்கைகளைக் கண்டித்தும் சாதி வேற்றுமையைச் சாடியும் அந்தக் கூட்டத்தில் ஆற்றிய உரையை அன்றைய மாணவர் அரங்கசாமி (அரங்கண்ணல்) பலமுறை பாராட்டி உரைத்திருக்கிறார்.** ஆனால் நான் என்ன பேசினேன் என்பது எனக்குத் தெளிவாகத் தெரியாது. பின்னர் இருபது ஆண்டுகள் வரையிலும் கூட அப்படிப்பட்ட ஒரு நிலைதான். தமிழினம் தாழ்ந்திடச் சூது செய்திட்ட சூழ்ச்சிமிக்கப் பகைவர் எதிரே உள்ளது போலவும், அவர்களைக் கண்டனம் செய்து பேசியவுடன் அவர்களெல்லாம் விடைபெற்றுக் கொண்டு ஓடி விடுவது போலவும் ஓர் எண்ணம்.

ஆனால், இப்போழுதுதான் புலனாகிறது, அந்தச் சூழ்ச்சியைச் செய்தது தனிமனிதர்கள் அல்லர்; கொள்கை கொண்ட அமைப்பு - அதுவும், நம்முடைய மக்கள் உள்ளத்திலேயே மதிப்புப் பெற்று அவர்தம் நம்பிக்கைக்குரியதான ஓர் வைதீக அமைப்பு என்பது - வைதீக வருணதருமத்தைத் தமதென நம்ப வைத்திட்ட அந்த அமைப்பே, இதிகாச புராணவழியில் நாளும் நமது அறிவைத் திருப்பிவருவது, நம்பத் தகாதவற்றை எல்லாம் நம்ப வைப்பது.

முரசொலி முதல் ஆண்டு விழா அன்றைய நிலையில் சிறப்பாக நிறைவேறியது, பேச்சாளர்களாகிய எங்களைப் பொறுத்தவரையில் முழு வெற்றியே, ஆனால் முரசொலி ஆசிரியரைத் தான் காணவில்லை. விழா நடத்தும் பொறுப்பை ஏற்றவராதலின் அதன் செலவுகளுக்கான தொகையைத் தேடும் வேலை. எங்களையும் வழியனுப்ப வேண்டும். சிதம்பரத்திலிருந்து திருவாரூருக்குக் கட்டணம் ஏறத்தாழ ஒன்றேகால் ரூபாய், இருவழிச் செலவும் இருவருக்கும் அளித்திட ஐந்து ஆறு ரூபாய் தேவை. அதற்கு வழி இல்லை. கடன் தரவும் யாரும் இல்லை. அந்த நிலையில் உடனடியாகக் கை கொடுத்தது, அவர் வீட்டில் இருந்ததொரு வெள்ளிக் கிண்ணம். அதை வீட்டாருக்குத் தெரியாமல் தான் எடுத்துச் செல்ல நேரிட்டது. அடமானம் வைப்பதற்கு. வீட்டிலுள்ள பெரியவர்கள் என்ன சொன்னாலும் - அது தவறு என்று ஏற்கக் கூடிய நிலையில் அவர் இருக்கவில்லை. தமிழரின் தன்மானமே வைதீகத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள போது -அதை மீட்க வெள்ளிக் கிண்ணத்தை அடமானம் வைப்பதுதான் தவறா? என்று கேட்கத்தான் அவருக்கோ, எங்களுக்கோ தோன்றியிருக்கும். அவ்வாறு கிடைத்த தொகையோடு வந்துதான் - ஆளுக்கு இரண்டரை ரூபாய் கொடுத்து வழியனுப்பி வைத்தார் மு.க. அப்படியெல்லாம் அரும்பாடு பட்டுத்தான் முரசொலி முதல் ஆண்டு விழா நிறைவுற்றது.

அதன் பின்னர் மு.க. அவர்கள் எழுதி நடித்த 'சாந்தா அல்லது பழனியப்பன்' என்னும் சீர்திருத்த நாடகத்திற்குத் தலைமை ஏற்க புரட்சிக் கவிஞரையும்; உரையாற்ற என்னையும் அழைத்திருந்தார். இருவரும் கலந்து கொண்டோம். நாடகம் நிறைவேறியது. பின்னர், **ஆரூரில் மு.க. அவர்கள் செயலாளராக இருந்து நடத்தி வந்த தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்ற ஆண்டு விழாவிற்கு அழைக்கப்பட்டேன். திரு.கே.ஏ. மதியழகன், டாக்டர் இலக்குவனார், அக்காலத்தில் தனபாக்கியம் என்றழைக்கப்பட்ட திருமதி பொற்செல்வி ஆகியோருடன் கலந்து கொண்டேன். இளந்தலைமுறையினரை இயக்கப் பற்றுடையவர்களாக மாற்றும் பாசறையாகத் திகழ்ந்தது அந்த மு.க. மன்றம்.**

'முரசொலி' மலர் -1992

## கலப்புத் திருமணம் - சாதி!



**நா**ம் சமபந்தி விருந்து நடத்தி விட்டோம். ஆனால் எத்தனை பேர் கலப்புத் திருமணத்திற்குத் தயாராக இருக்கிறோம். திருமணம் ஆனவர்களைக் கேட்கவில்லை; இன்னும் ஆகாதவர்களைக் கேட்கின்றேன். ஆனவர்கள், நான் தயார் என்று கையை உயர்த்தி விடாதீர்கள். நான் கேட்பதற்கு உரிமை படைத்தவன்.

என்னுடைய குடும்பத்திலேயே பல கலப்புத் திருமணங்களை நடத்தி வைத்தவன் நான்; அதிலும் குறிப்பாக ஆதி திராவிடப் பெண்ணை என்னுடைய மருமகளாக ஏற்றுக் கொண்டவன் நான். ஏற்றுக் கொண்டவன் மட்டுமல்ல; நானே வரவழைத்து என்னுடைய மகனுக்குக் கட்டி வைத்தவன்.


இன்றைக்கும் ஆதி திராவிடப் பேரக் குழந்தையை, பேத்திக் குழந்தையை எடுத்துக் கொஞ்சுகின்றேன்; முத்தமிடுகின்றேன். ஒரு பெண்ணை எடுத்தது மாத்திரமல்ல; என்னுடைய வீட்டுப் பெண்ணை, என்னுடைய பேத்தியை ஒரு தலித் - ஆதி திராவிடர்க்குக் கலப்புத் திருமணம் செய்து வைத்ததும் நான்தான்.

எனவே அந்த உரிமையோடு கூடத்தான் நான் சொல்லுகின்றேன். கலப்புத் திருமணம் சாதியை ஒழிப்பதற்கு பெரும் கருவியாகப் பயன்படும் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

- கலைஞர்

# கலைஞருக்கு நிகர் கலைஞர்!

பேரறிஞர் அண்ணா



கலைஞரின் எழுத்து வல்லமை, பேச்சு வல்லமை, நாடக நூல்களை எழுதிய வல்லமை, நாடகங்களில் நடித்த திறமை இவைகள் ஒவ்வொன்றையும் பற்றி எடுத்துச் சொன்னார்கள்.

கலைஞர் இத்தகைய திறமைகளைப் பெற்றிருப்பது எவ்விதம் என்பதை உணர்ந்தால்தான் இந்தப் பாராட்டு விழாவின் உட்கருத்து புரியும்.

வண்ணமான எண்ணத்தை மிகச் சிறு பருவத்தில் பெற்றவர் கலைஞர். அவர் இளமைப் பருவம் முதல் நாட்டு மக்களுக்கு எதையாவது சொல்ல வேண்டும் என்று ஆர்வத்தோடு சில எண்ணங்களை உருவாக்கிக் கொண்டு கையேட்டுப் பிரதிகள் மூலமாகச் சொல்லி கட்டுரை வடிவத்தில், கவிதை வடிவத்தில், நாடக வடிவத்தில், சினிமாத்துறை மூலம் சொல்லி இன்றைய தினம் அமைச்சராக இருந்து அந்த எண்ணங்களுக்கு எல்லாம் அமைச்சர் என்ற முறையில் எந்த அளவுக்கு வடிவம் கொடுக்க முடியுமோ, அந்த அளவுக்கு வடிவம் கொடுத்து வருவதை நாமெல்லாம் மகிழ்ச்சியோடு பாராட்டுகிறோம்.

**ஒரு நாளைக்குக் கலைஞர் எத்தனை மணிநேரம் தூங்குகிறார் என்பதை யாராவது அவருக்குத் தெரியாமல் பார்த்தால்தான் இந்தத் திறமை பெற்றதன் அடிப்படை உழைப்பு என்பதை உணர்வீர்கள்.**

கடுமையான உழைப்பு என்று நான் குறிப்பிட்டேன். கடுமையான உழைப்பு செய்வதற்கேற்ற உடல் வளம் ஒரு துளியும் கிடையாது. பேசுகிறபோது வீரம் சொட்டும், பேசி உட்கார்ந்த உடனே வியர்வை கொட்டும். வீட்டுக்குச் சென்ற உடனே மருந்துச் சொட்டுகள் உள்ளே செல்லும். 2 மணி நேரத்துக்குப் பிறகு வீட்டில் உள்ளவர்கள் கன்னத்திலே, கை வைத்துக் கொள்பவர்களும், முகவாய்க் கட்டையைத் தடவிக் கொள்பவர்களும், பெரியவர்களாக உள்ளவர்கள் தலையிலே தட்டிக் கொள்பவர்களும், இப்படிப் போய் அலைவானேன், இப்படி வந்து அவதிப்படுவானேன். இப்படிப் போய் வேலை செய்வானேன், இங்கு வந்து இப்படிக் கடிப்பானேன் என்று கவலைப் பட்டுக் கொள்பவர்களும், சுற்றி இருக்கிற டாக்டர்கள், இது இந்த வியாதியாக இருக்குமா, அந்த வியாதியாக இருக்குமா என்று அவர்களுக்குள்ளே பேசிக் கொள்வதையும் நீங்கள் பார்த்தீர்களானால், அந்தக் கடும் உழைப்புக்கு ஏற்ற உடற்கட்டு அவரிடத்திலே இல்லை.

எப்படியோ சொல்லி வைத்தாற் போல தமிழ் நாட்டின் தலைவர்களில் யாருக்கு உடற்கட்டு இருக்கிறதோ அவர்கள் தங்களது உடற்கட்டை வேறு பல காரியங்களுக்குப் பயன்படுத்துகிறார்களே தவிர, இப்படிப்பட்ட காரியங்களுக்குப் பயன்படுத்துவதில்லை. உடற்கட்டு துளியு மில்லாத ம.பொ.சி. போன்றவர்களும் கலைஞரைப் போன்றவர்களும்தான் கடுமையாக உழைத்துவிட்டு வயிற்றைப் பிடித்துக் கொண்டோ தலையை, கழுத்தைப் பிடித்துக் கொண்டோ மருத்துவமனையில் படுத்திருக்கிறார்கள்.

ம.பொ.சி.யும், சட்டமன்றத் தலைவர் அவர்களும் சொன்னார்கள், கலைஞரைத் தாக்க சிலர் முயன்றார்கள் என்று! இதிலே நான் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவர்கள் தாக்க முற்படாமல் இருப்பார்களேயானால்தான் நான் உள்ளபடியே ஆச்சரியப்பட்டிருப்பேன். ஒரு பேரறிவாளர் சொன்னார். "உன்னை யாருமே குறை கூறவில்லையென்றால் கொஞ்ச காலம் கவலைப் படு. மற்றவர்கள் மனதை உறுத்தும்படியான வகையில் விஷயத்தை சொல்லத் தவறிவிட்டாய் என்பதுதான் அதனுடைய பொருள்" என்று!

நான் கலைஞர் அமைச்சரான போது அடைந்த மகிழ்ச்சியை விட அவர் மாற்றாரால் 'அமைச்சர்' என்ற முறையில் தாக்கப்படுவாரானால் நிமிர்ந்த நடை போட்டு "என் தம்பி எதையும் ஏற்றுக் கொள்கின்றவன்" என்று சொல்வேன்.

நாங்கள் எங்கள் மீது ஈ எறும்பு விழாது என்று சொல்லத்தக்க அளவிலே உள்ளவர்களல்ல. எங்களை உருட்டிவிட்ட அழுக்குப் பள்ளங்கள் ஏராளம். நாங்கள் ஏறி இறங்கிய மலைச் சரிவுகள் நிரம்ப உண்டு. நாங்கள் கண்டு அதிலே சிக்காமல் தப்பிய சதிகள் பல. சந்தித்த எதிர்ப்புகள் மிகப்பல. அவைகளுக்குப் பிறகு இன்றைய தினம் இந்த நிலை அடைந்திருக்கிறோம் என்றால் மறுபடியும் எங்களை அதே கொடுமைக்கு ஆளாக்குகின்றவர்களை நான் பணிவன்போடு கேட்கிறேன்.

இன்னும் எந்த உயரத்துக்கு எங்களை அழைத்துச் செல்ல நீங்கள் இந்தக் கொடுமை செய்கிறீர்கள்?

எங்களைத் தூற்றினீர்கள். மக்கள் போற்ற ஆரம்பித்தார்கள். நீங்கள் அடித்தீர்கள்; மக்கள் அணைத்துக் கொண்டார்கள். எங்களை அலட்சியப்படுத்தினீர்கள், மக்கள் எங்களை அரசாளும் பீடத்தில் அமர்த்தினார்கள்.

புதுவை நகரத்திலே நடைபெற்ற ஒரு பெரிய கலவரத்தில் அவரையும் மற்றவர்கள் அடித்துப் போட்டு,இவர் செத்துவிட்டார் என்ற எண்ணத்தாலே பாதையோரத்தில் கிடத்திவிட்டுச் சென்று வருடம் 22 ஆகிறது. அதை விடப் பெரிய தாக்குதல் இனி யாரும் நடத்த முடியாது. ஏன் சொல்கிறேன் என்றால், தாக்குதல் நடந்த இடம் புதுச்சேரி. புதுச்சேரித் தாக்குதலே அவ்வளவுதான்.


**என்னை முழுவதும் அறிந்தவர்கள் தான் கழகத்திலே இருக்கிறார்கள். அதிலே முற்றிலும் அறிந்தவர் என்று சொல்லத் தக்கவர்களிலே கலைஞருக்கு மிகச் சிறந்த இடம் உண்டு.**

நான் கவலையோடு இருக்கிறேன் என்றால் முதன் முதல் கண்டுபிடிக்கக்கூடியவர் கலைஞர்தான். கோபமாக இருக்கிறேன் என்றால் முதல் முதல் கண்டு பிடிக்கக்கூடியவர் கலைஞர்தான். நான் கோபமாக இருப்பது தெரியாமல் என்னிடத்திலே ஏதாவது பேசி, நான் கோபமாக நாலு வார்த்தை சொன்ன பிறகுதான் 'அண்ணா கோபமாக இருக்கிறார்' என்று சொல்வர் நம்முடைய நாவலர். கலைக்கு இருக்கும் ஒரு விசேடமே அது. கவலைப்பட்டு நடிக்கிறனென்றால் மற்றவர்களும் அதை உணர்ந்து அல்லது அந்தக் கணமே அறிந்து மற்றவர்களைக் கவலைப்பட வைப்பதுதான் கலைஞுனுடைய திறமை. அதைப் போல என்னுடைய கோபதாபங்களை, என்னுடைய கவலைகளை, உடனுக்குடன் நொடிப் பொழுதில் அறிந்து அதை மாற்றவேண்டும் என்ற அக்கறையோடு நல்ல முறையில் துணை புரிவதில் கலைஞருக்கு ஈடு கலைஞர்தான்.

**(கலைஞர் பிறந்த நாள் விழா! 1968)**

## அம்பேத்கரின் கருத்துகள்!

**சா**தி சமயங்கள், மத பேதங்கள், உயர்வு தாழ்வு – இவை எல்லாம் அகற்றப்பட வேண்டும் என்பதையும், அனைவரும் சமம் என்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதையும் இலட்சிய மூச்சாகக்



கொண்டிருக்கின்ற எங்களுக்கு, அம்பேத்கருடைய பல கருத்துகள், மேலும் ஆர்வத்தைத் தூண்டி விடக் கூடிய கருத்துகளாக அமைந்திருக்கின்றன. அவர் சொல்லுகிறார்:

"உங்களுடைய சமூக அமைப்பை மாற்றாமல், நீங்கள் சிறிதுகூட முன்னேற்றம் காண முடியாது."

"சாதியை அடிப்படையாக வைத்து நீங்கள் எதையும் உருவாக்க முடியாது. தேசிய இனத்தை உருவாக்க முடியாது; ஒரு ஒழுக்கப் பண்பை உருவாக்க முடியாது."

"சாதியை அடிப்படையாக வைத்து நீங்கள் எதை உருவாக்கினாலும் – அது உடைந்து சிதறி உருப்படாமல் போய்விடும்."

"சாதியை உடைப்பதற்கு உண்மையான தீர்வு, கலப்புத் திருமணமே. வேறு எதுவும் சாதியை ஒழிக்க முடியாது.

சமபந்தி போஜனமும், கலப்புத் திருமணமும் சாதாரண நடைமுறைகளாகும் போதுதான் சாதியின் சக்தி அழியும்"

இவை அம்பேத்கருடைய பொன்மொழிகள். இந்த அணுகுமுறை இன்றைக்கும் – இந்தக் காலகட்டத்திலும் நம்மால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நிர்பந்தம் நமக்கு ஏற்பட்டிருப்பதை நான் உணராமல் இல்லை.

**- கலைஞர்**